


# செல்லமுத்து

- யோ.புரட்சி

JPL
C13028

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-
JPL

# செல்லமுத்து

(நாவல்)

பொதுசன நூலகம்
06 NOV 2019
மாநகரசபை
யாழ்ப்பாணம்

யோ.புரட்சி

130280C

274157

செல்லமுத்து வெளியீட்டகம்
வள்ளுவர்புரம்

CC

274157 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894.8113

# நூல் விபரம்

நூலின் பெயர் : செல்லமுத்து

நூலின் வகை : நாவல்

நூலாசிரியர் : யோ.புரட்சி

வெளியீடு : செல்லமுத்து வெளியீட்டகம்
வள்ளுவர்புரம்.

பக்கங்கள் : xiv + 127

பிரதிகள் : 1000

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

அட்டைப்படம்,
பக்க வடிவமைப்பு : எஸ்.விஜய்

முதற்பதிப்பு : செப்டெம்பர், 2019

தொடர்பு : (0094)77 5892351
மின்னஞ்சல்: puratchi2100@gmail.com
முகநூல்: யோ புரட்சி

அச்சகம் : விஜய் அச்சுப் பதிப்பகம்,
077 9009491 / 077 9163679

ISBN : 978-955-4096-25-7

விலை : 300/-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

**பேராசிரியர் சி.மௌனகுரு,**
முன்னாள் கலைப்பீடாதிபதி,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

## செல்லமுத்துவும் ஒரு போராட்ட நாவல்தான்

அண்மைக்காலமாக பெருந்தொகையாக வரும் ஈழப் போராட்ட நாவல்களின் களமான வன்னி மண்ணிலிருந்து புதியதொரு போராட்ட நாவல் வந்திருக்கிறது.

அதுவே யோ.புரட்சியின் "செல்லமுத்து" ஆகும்.

இந்தப் போராட்டம் வன்னி மண் அண்மையில் சந்தித்த போராட்டமன்று. இது வேறொரு வகையான போராட்டம்.

மனிதரிடையே வர்க்கபேதம் ஏற்பட்ட நாளிலிருந்து இலங்கைத் தமிழ்ச்சமூகத்தின் ஒரு பகுதியானது இற்றைவரை நடத்திக் கொண்டிருக்கிற போராட்டம் இந்தப் போராட்டம். இது அன்றாட வாழ்க்கைக்கான போராட்டம். ஒரு வேளை உணவுக்கான போராட்டம்.

இந்தப்போராட்டத்தை நடத்துவது மூன்று நான்கு தலைமுறை களுக்கு முன்னமேயே வடகிழக்கிற்கு வந்து குடியேறிய புதுத் தமிழ்ச் சமூகம். அதுவே மலையக தமிழ்ச் சமூகம்.

இச்சமூகம் வடக்கு கிழக்கெங்கும் பரந்து வாழ்கின்றது.

முக்கியமாக திருகோணமலையிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலும் செறிவாக வாழ்ந்து வருகின்றது. பெரும்பாலும் கூலித்தொழிலாளிகளாகவும், வயல் வேலை செய்யும் தொழிலாளிக ளாகவும், வசதிகள் அற்றோராகவும், வாழ்ந்து வந்த சமூகமிது.

வாழ்க்கையில் அன்றாடம் வயிற்றை நிரப்புவதற்காக போராடுவ திலிருந்து மழையிலும் வெயிலிலுமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு என்ற பெயரில் வசதிகள் ஏதுமற்ற இருப்பிடங்களை அமைத்துக் கொள்வதற்கூடாக தமது பிள்ளைகளை கல்வியில் உயர்த்திவிட போராடுவது வரை இவர்கள் வாழ்க்கைப் போராட்டம் பரந்துள்ளது. அவர்கள் பேசும் மொழியும் நமது தமிழ்மொழியே.

இந்தப் போராட்டத்தினூடேதான் பல குணாதிசய மாந்தர்கள் வெளிப்படுகிறார்கள். இந்தப் போராடும் மக்களை மையப்படுத்தி நிஜத்தையும், கற்பனையையும் கலந்து உருவாக்கிய ஒரு நாவலாகவே “செல்லமுத்து” எனக்குத் தெரிகின்றது.

அங்கொன்று இங்கொன்றான நிஜங்களையும் மனிதர்களையும் எடுத்து ஓரிடத்து நிகழ்வதாக நாவல் புனைந்துள்ளார் யோ.புரட்சி.

இந்நாவலில் வருகின்ற செல்லமுத்து ஓர் இலட்சிய மனுசியாக சித்தரிக்கப்படுகின்றார். அது யோ.புரட்சி காணும் கற்பனை மனுசி. ஒரு வகையில் ஒரு வெள்ளாந்தி, அதாவது அப்புராணி. பண்பாடு அற ஒழுக்கம், பாசம் நேசம் என்பனவற்றின் தாக்கதிற்குள்ளான ஓர் அபலைப்பெண். ஒருவகையில் அடக்கப்படும் பெண்ணென்ற ஒரு சுமையும், அடிமட்டப் பெண் என்ற ஒரு சுமையுமாக இரட்டைச் சுமைகளைச் சுமக்கும் ஒரு மனுசி. விதிகளை மீறாமல் எதிர்த்து வெளிப்படையாக கலகக் குரல் எழுப்பாமல் அடங்கிப் போகின்ற ஒருபாத்திரம். இறுதியில் உயிரையும் கொடுக்கத் துணியும் பாத்திரம்.

தன்மீது சுமத்தப்பட்ட சுமைகளிலிருந்து மீள அவள் போராடுகிறாள். ஆனால் அவளது போராட்ட வடிவமோ வேறு. கலகக் குரல் எழுப்பாமல் தானும், கான்சர் நோயாளியான தனது கணவனும் வறுமை காரணமாக படிப்பில் போராட்டம் நோக்கும் தன் மகனும் வாழ ஒரு வாழ்வுப்போர் புரிகிறாள்.

தமிழ்ப் பண்பாட்டுப் பெண் என்று சொல்வதன் அடியாக உருவாக் கப்பட்ட இந்த இலட்சிய பாத்திரமானது விதிக்கப்பட்ட சமூகப் பண்பாடுகளை ஏற்றுக்கொண்டு, அதை மீறாமல் அதற்குள்ளேயே தன் இருப்புக்கானதும், தன் குடும்ப இருப்புக்கானதுமான தீர்வுகளை தீர்க்கப் போராடுகின்றது.

இந்தப் போராட்டத்தில் அவள் பலவிதமான குணாதிய மாந்தரைச் சந்திக்கின்றாள். உழைப்பற்ற கணவன் காளியப்பன், ஒரே பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணா, கடைக்கார சாந்தி, கைகொடுக்கும் வள்ளி, கள்ளுப்பிரியன் மாரிமுத்து, நல்ல மனசுக்காரர் சிங்கராயர், கடும்போக்கு மங்களம், கண்மணி, சின்னப் பண்ணையார் சுந்தரத்தார், மயிலு சாஸ்திரி, சாஸ்திரியின் உதவியாள் சொக்கன் ஆகிய பாத்திரங்களுடன் அவள் கொள்ளுகின்ற தொடர்பு இந்நாவலில் நன்றாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

கதைப்பின்னல் என்பதே நாவலிற்கு பிரதான அம்சம். பாத்திரங்களின் தொடர்பும், அவர்களுக்குள் ஏற்படும் முரணும் நாவலை வளர்த்துச் செல்லுகின்ற அம்சங்களாகும். இந்நாவலிலுள்ள ஒவ்வொரு பாத்திரத்தையும் யோ.புரட்சி செதுக்கியிருக்கும் முறை சுவாரசியமாக இருக்கின்றது. கோழியின் தலையை அறுக்கும் மயிலு சாஸ்திரியின் உதவியாளன் சொக்கன்கூட ஒரு சிறிய பாத்திரமாயினும் பளிச்சென்று மனதில் பதிந்து விடுகின்றான்.

ஓவியம் கீறுவது போல, அதற்கு வர்ணம் தீட்டுவது போல பாத்திரங்களை உருவாக்கி சொற்களால் அலங்கரித்திருக்கிறார் புரட்சி.

பெரும்பாலும் மத்திய தர வர்க்க மாந்தரும், வசதியால் உயர்ந்தோரும் அதிகமாக நிரம்பிய நமது தமிழ் நாவல் உலகில் யோ.புரட்சி அறிமுகம் செய்யும் பாத்திரங்கள் வித்தியாசமாக இருப்பதுடன் நமக்கு திகைப்பையும் ஊட்டுகின்றன.

பாத்திரங்களை நல்லவர் கெட்டவர் என்ற இரு நிலைமைக்குள் தள்ளாது, நல்லவருக்குள் கெட்டவரையும், கெட்டவருக்குள் நல்லவரையும் ஒருங்குசேரப் பார்ப்பது முழுச்சமூகத்தையும் அவதானமாக உற்றுப்பார்க்கும் ஒரு முதிர்ந்த கலைஞனின் சிந்தனை ஆகும். இந்தச் சிந்தனையின் அரும்பு நிலையினை புரட்சியிடம் காண்கையில் மகிழ்ச்சி உண்டாகிறது. மனிதர் எவருமே கெட்டவரன்று.

இந்த நாவல் முழுவதிலும் தொட்ட இடமெல்லாம் மானுடம் மணப்பது நாவலுக்குரிய ஒரு சிறப்பம்சமாகும். மனைவியை வதைத்தாலும் அவள்மீது அன்பு கொண்ட காளியப்பன், இரவிலே கடையில் வைத்து கடனுக்கு அரிசி கொடாவிட்டாலும் வீட்டுக்கழைத்து அரிசி கொடுக்கும் கடைக்கார சாந்தி, அதீத வறுமையிலும் பணம் பெறாமல் வைத்தியம் பண்ணும் செல்லமுத்து, அவசரத்திற்கு முப்பது உரூபாய் கொடுக்கும் வள்ளி, மகளைப் புரிந்துகொண்ட சிங்கராயர், சிங்கராயரின் தர்க்க ரீதியான வார்த்தை கேட்டு அடங்கிப்போகும் மனைவி மங்களம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி மானுடம் மணக்கும் இடங்கள் ஏராளம். இலட்சியமயமான மனிதர்களை கற்பனை செய்து பார்க்கிறார் புரட்சி.

ஆர்ப்பரிக்கும் அலைகளுடனும், கொந்தளிக்கும் இரைச்சலுடனும் அமைதியாக ஓடிக்கொண்டிருக்கிறது ஆறு. அதேபோல பல்வேறு பிரச்சனைகளுக்கும், போராட்டங்களுக்கும் மத்தியில் வாழ்க்கை யெனும் ஆறும் ஓடிக்கொண்டே இருக்கின்றது. இந்த ஆர்ப்பாட் டங்களை சித்தரிக்கும் எழுத்தாளர்களும் உண்டு. அமைதியான ஓட்டத்தை சித்திரிக்கும் எழுத்தாளர்களும் உண்டு

அது அவர்களின் கருத்தியல் உலக நோக்கு சார்ந்தது.

எனக்கு இரண்டாவது வகை எழுத்தாளர்களையே பிடிக்கும், அவர்களே வாழ்வைத் தரிசிக்கிறார்கள். மனித உணர்வுகளை அறிகிறார்கள்.

இந்த இரண்டாவது வகை எழுத்தாளர்களுக்குள் புரட்சி வருவதாக நான் உணர்கிறேன். இதற்கு சமூகம் பற்றிய கூர்மையான பார்வை அவசியம்.

"செல்லமுத்து" நாவலில் பெரிய போராட்டங்கள் இல்லை. ஆர்ப்பாட் டங்கள் இல்லை. அடிதடிகள் இல்லை. இரைச்சல்கள் இல்லை. ஆனால் அங்கே மனிதக் கூட்டத்தின் வாழ்வு ஆறு போலவே ஓடிக்கொண்டிருக்கிறது. வாழ்வதற்கான அதனது போராட்டமே அதனது வாழ்க்கை. இதற்கூடாக மேற்கிளம்பும் மானுடமே மானுடத்தின் அழகு

இராமனும் சீதையும் மட்டுமா அழகு, அர்ஜுனனும் பாஞ்சாலியும் மட்டுமா அழகு. செல்லமுத்துவும் காளியப்பனும் கூட அழகுதான். இந்நாவலில் நமக்குப் பரீட்சயம் இல்லாத நமக்குத் தெரியாத. நம்மிற்பலர் அறியாத வித்தியாசமான பின்னணிகளுடன் வாழும் கதாபாத்திரங்கள் மூலமாகவும், அவர்கள் செயல்கள் சிந்தனைகள் உணர்வுகள் மூலமாகவும் நாம் புதிய வாழ்க்கைக்கும் அனுபவங்க ளுக்கும் அறிமுகமாகிறோம்.

புதிய அனுபவத் திரட்சியைத் தரும் இலக்கியமே சிறந்த இலக்கியமாகும். அவ்வகையில் "செல்லமுத்து" புதிய அனுபங்களை எமக்குத் தருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபங்கள் மாத்திரம் நாவலாகாது. அதை எடுத்துக் கூறும் முறை, அது எடுக்கும் வடிவம், எடுத்துக்கூறும் முறையில் காட்டப்படும் உத்திகள் எல்லாம் இணைந்துதான் நாவலை ஒரு கலைப் படைப்பு ஆக்குகின்றது. புரட்சி இந்நாவலில் தன் எழுத்தாற்றல் மூலம் இவற்றைக் கொணர முயல்கின்றார்.

ஆரம்பத்தில் சிறந்ததோர் யதார்த்த நாவலாக தோற்றம் காட்டும் இந்நாவல் பிற்பகுதியில் யதார்த்தம் குறைந்து கற்பனையாகி இறுதியில் இலட்சிய நாவலாக முடிகிறது.

இந்த நாவலின் மூலம் ஒரு பெரிய நாவலாசிரியனாக வரக்காத் திருக்கும் கூர்ந்த சமூக அவதானிப்புடைய, அடிமட்ட மக்கள்மீது மிகுந்த அனுதாபமுடைய சமூக நலநாட்டம் மிக்க எழுத்தாற்றலுடைய ஒரு இளஞ்செடி தெரிகிறது.

இச்சிறு செடி வள்ரும், அது வளர்கின்றபொழுது, கிளைகளைப் பரப்புகின்றபொழுது, பூத்துக் காய்க்கின்றபொழுது அனைவருக்கும் நிழல் தரும் பெருமரமாக வரும் என்கின்ற பெருநம்பிக்கையையும் இந்த நாவல் தருகின்றது.

அயரா உழைப்பும், நிறைந்த வாசிப்பும் அவதானிப்பும் கொண்ட புரட்சிக்கு எனது வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**திரு.ந.பார்த்தீபன்**
சிரேஷ்ட விரிவுரையாளர்.(தமிழ்)
தேசிய கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

## காலத்தை வென்று நிற்கும் கிராமிய நாவல்

யோ.புரட்சியின் "செல்லமுத்து" நாவல், "செல்லமுத்து" என்ற பாத்திரத்தை முதன்மையாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளது. மகாத்மா காந்தியின் "கிராமங்களில் தான் இந்தியா வாழ்கின்றது" என்ற கூற்றுக்கேற்ப கிராமத்தின் உயர்வான, உயிர்த்துடிப்பான பக்கங்களை புரட்சி எதுவித பிரகாரமுமின்றி இயல்பாக, இதமாகக் காட்டியுள்ளார். எளிமையான மனிதர்கள், அவர்களுக்குரிய எளிமையான வாழ்க்கை, குணப்பண்புகள், நடத்தைகள் யாவற் றையும் செல்லமுத்து, வள்ளி, கடை வைத்திருக்கும் சாந்தி, சீனியம்மா போன்ற பெண் பாத்திரங்களினூடாக காட்டியுள்ளமை பாராட்டுக் குரியது. அதேவேளை, காளியப்பன், மாரிமுத்து, சுந்தரத்தார், சிங்கராயர் ஆகிய ஆண் பாத்திரங்களும் தமக்கே உரித்தான நடத்தைகளைக் காட்டுவதும் இயல்பாக அமைந்திருக்கிறது.

நாவல், புனைகதை வடிவங்களுள் ஒன்று, புனைகதைகள் கலைமாந்தரை இயல்பான பாத்திரங்களாக நடமாட வைப்பதன் மூலமே சமூகச் செல்வாக்கைப் பெறுகின்றன. இப்பாத்திரங்களின் உரையாடல்கள் கதாபாத்திரங்களுக்கும் அவர்கள் வாழும் சமூகங்களுக்கும் இடையே உள்ள பின்னிப்பிணைந்த உறவைக் காட்டுவனவாக இருப்பது மிக அவசியம், "நாவல் மனிதனை, அவனுடைய சிறுமைக் குணாங்களுடன், அவனுடைய வீழ்ச்சிக ளுடன், அவனுடைய தவறுகளுடன். அப்படியே மனிதனை மனிதனாக எடுத்துக் காட்டுகிறது" என்கிறார் புதுமைப்பித்தன். மேற்கூறிய விளக்கங்கள், கருத்துக்களுடன் ஒப்புநோக்கும் போது யோ.புரட்சியின் "செல்லமுத்து" நாவல் சமூகச் செல்வாக்கைப் பெறும் எனத் துணிந்து கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவருக்குப் பதிலாக துருப்பிடித்த மண்ணெண்ணெய் பரல், அதிலும் சின்னஞ்சிறிய ஓட்டைகள் பல இடங்களில் பரவிக் கிடக்கின்றன. அதுவும் அடுப்புள்ள சுவர்ப் பக்கந்தான். இழுத்துக் கட்டப்பட்ட பழைய உரப்பை அடுத்த சுவரின் காப்பாகி நிற்கின்றது. அது அடுப்பின் புகைபட்டு உள்ப்பக்கமாக நன்றாகவே கறுத்துப் போய்விட்டது. மேற்கூரையை பனையோலை, தென்னோலை, சிறிய தறப்பாள்த் துண்டுகள் எனப் பல வித பொருட்கள் நிரப்பியிருக்கின்றன. எட்டடி நீளமும் எட்டடி அகலமும் கொண்ட குடிசை அதுவென அளக்காம லேயே சொல்லி விடலாம். உள்ளே ஒரு மூலையில் மூன்று கற்களைக் கொண்ட அடுப்பு. மரங்களில் தொங்கும் வௌவால்களாய் எல்லோரின் ஆடைகளும் குடிசையுள் தொங்கியபடி இருக்கும். கொசுக்கள் தாராளமாக வசிக்கும். நாவலின் ஆரம்பம் இது. மண்வாசனை தவழும் வர்ணனைகளுடன் கதை தொடங்குகிறது.

செல்லமுத்து மட்டுல்ல வள்ளி, ராமாயி போன்றவர்களும் வறுமைக் கோட்டுக்குள் வாடி நிற்பவர்கள் தான், ஆனாலும் மனித நேயம் கொண்ட அவர்களின் பண்புகள் பல இடங்களிலும் பதியப்படுகின்றன.

செல்லமுத்துவின் கைராசி, சின்னப் பிள்ளைகளுக்கு வயிற்றோட்டம், பெரிய ஆட்களுக்கு கால் உளுக்கு, பிள்ளைப்பேறு பார்த்தல் ஆகியவை செய்யும் வல்லமையானது. அவ்வாறு ஒருநாள் ராமாயியின் மகளுக்கு உதவிய போது அவள் அதற்காகச் செல்லமுத் துவுக்கு காசு கொடுக்க முற்படும் போது "ஐயோ போடி, ஏம் புள்ளைக்கு நா காசு வாங்குவனா" என்று கூறும் செல்லமுத்து கிராமத்தின் உண்மையான வாரிசு ஆகிறாள்.

செவ்வாய்க்கிழமை ஆறு மணியும் கடந்து விட்டது. அரிக்கன் லாம்பு வெளிச்சம் தூரத்தே அடையாளம் காட்டுகிறது. சாந்தியின் கடைக்குச் சென்று தயக்கத்துடன் அரிசி கேட்கும் செல்லமுத்து. தன் இயலாமையில் "சாந்திக்கா... ஒருக்கா கதவு பக்கம் வாங்கவேன்" என்று கூனிக்குறுகியவாறு கேட்கும் செல்லமுத்துவும், "வெளக்கும் வெச்சிட்டேன் பாரு, கடையில் இருந்து கடனுக்குச் சாமான் போகக் கூடாதே" என்று சொன்னபோது செல்லமுத்துவுக்கு நெஞ்சு "திக்" என்றது. வாசகருக்கும் "திக்" என்னும். ஆனால் சாந்தி "கடதாசி பேக்கை தா. வூட்டில இருக்கிற அரிசியில அரைக்கிலோ தர்றேன்" என்றபோது வேர்த்திருந்த செல்லமுத்துவின் முகம் பிரகாசித்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை விட, எப்படிக்கிராமம் பற்றிய உயர் எண்ணமும் அதனால் பின்னிய புரட்சியின் உயர்வும் தெரிகின்றது.

கணவனின் சோம்பேறித்தனத்தை, அக்கறையின்மையை சாந்தி "ஒன்னோட புருசன் மாதிரி ஒருத்தனுக்கு நா வாழ்க்கப்பட்டிருந்தா எப்பவோ விட்டிட்டு போயிருப்பேன்டி" என்று சொல்லும்போது "இந்த நியாயங்களை, யதார்த்தங்களை பேச அவளுக்குத் தெரியாது. புருசனும் பிள்ளையும் சாப்பிட வேண்டும், தான் உழைக்க வேண்டும். இது மட்டும் தான் செல்லமுத்துவுக்குத் தெரியும்" என நாவலாசிரியர் கூறும் போது செல்லமுத்து என்ற பாத்திரம் நாவலின் கதாநாயகி மிக உச்சத்திற்கே சென்றுவிட்டாள்.

செல்லமுத்துப் பாத்திரத்தின் வார்ப்பு, எழுத்தாளரின் ஆளுமையை, ஆற்றலை எடுத்துக் காட்டுகின்றது. காளியப்பனுக்கு நெஞ்சு வலியும் உண்டு. களைப்பான வேலைகள் செய்தால் திடீர்வலி வந்து விடும். சில வேளை மயக்கம் போட்டு விழுந்தும் விடுவான். அதனால் அவனை விறகு சுமக்கக்கூட செல்லமுத்து விடமாட்டாள். ஆணும் பெண்ணும் சமம். குடும்பத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமபொறுப்பு என்பது பற்றியெல்லாம். செல்லமுத்துவுக்குப் பேசத் தெரியாது என்று நாவலாசிரியர் முடித்தாலும் வாசகர்கள் நெஞ்சில் செல்லமுத்து பேசத்தொடங்குகிறாள்.

ஒவ்வொரு பாத்திரங்களும் கச்சிதமாக, கனதியாகப் பொருந்தி நிற்கின்றன. செல்லமுத்துவின் மகன் கண்ணாவுக்கும் மங்களத்தின் மகள் கண்மணிக்கும் மங்களத்தின் எதிர்பார்ப்பையும் எதிர்ப்பையும் மீறி காதல் வளர்கிறது. மாந்திரீகம் செய்து மகளின் காதலை முறிக்க மங்களம் படும்பாடு. காதல் அழிவதில்லை என்பதை இந்நூலும் நிரூபித்துள்ளது.

யதார்த்தமான கிராமிய வாழ்க்கைக் கோலங்களை அழகாக வளர்த்து "செல்லமுத்து" என்ற நாவலாக வழங்கியிருக்கிறார் புரட்சி..

"கிராமங்களை அழகு எனச் சொல்வது அங்குள்ள இயற்கையை வைத்து மட்டுமல்ல. இதயங்களை வைத்தும் தானே. அங்கே ஹோட்டல்கள் இல்லை. காசுக்கு உணவு கிடையாது. அன்புக்கே உணவு. உணவுகளில் சுவையூட்டிகள் சேர்க்கப்பட்டாவிட்டாலும் தவறாமல் அன்பு சேர்த்திருப்பார்கள். அதனால்தான் நாகரிகத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் தெரிய நோய்கள் அங்கே இருப்பதில்லை" என எழுத்தாளர் குறிப்பிட்டது மறக்கத்தக்கதல்ல.

செல்லமுத்து படிப்பகம், செல்லமுத்து கல்வித்திட்டம், செல்லமுத்து இல்லம், என செல்லமுத்துவின் நினைவுகளும் பங்களிப்புகளும் காலத்தால் அழியாத பொக்கிஷமாக காட்டப்பட்டிருக்கின்றன.

கண்மணியின் மகள் செல்வி "அப்பா ஏம்பா, எங்கள கோயில்ல கும்பிட விட்டிட்டு நீங்க கும்பிடாம ஒரு ஓரமா நின்னுட்டு இருந்தீங்க" என்பதற்கு கண்ணா "கடவுள் அன்பா இருக்காரு. அன்புள்ள வங்களிட்ட கடவுள் இருக்காரும்மா" எனப் பதிலளிக்கிறான்.

செல்லமுத்து நாவல் காலத்தால் அழிக்க முடியாத, காலமெல்லாம் பாதுகாக்கப்பட வேண்டிய கிராமத்து வாழ்நாளினை பதிவு செய்திருப்பதால் இந்நாவல் காலத்தின் தேவை என்பதை வாசகர்கள் உணர்வார்கள்.

யோ.புரட்சி, நாவலில் ஒரு புரட்சியைச் செய்துள்ளார். தொடரட்டும் அவர் கலை இலக்கியப் பணி என வாழ்த்துகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பட்டாளிபுரத்தில் 15 ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்திருக்கிறேன். அங்கே நிமிர்ந்துகூட நிற்க முடியாத உயரமுள்ள வீடுகளில் அநேக உறவுகள் என்னை நேசித்தவர்கள்.

"செல்லமுத்து" கதை அங்கே போடப்பட்ட விதை. ஆயினும் கிளைகளை பலவிதமாகப் பரவுகை செய்து மரமாக்கினேன்.

எனது அம்மா நாற்பது உரூபாய் கூலிக்கு புல் செதுக்கும் வேலைக்குப் போயிருக்கிறார். 1994இல் நான் படிக்கும்போது வயலில் புல் பிடுங்கச் சென்று ஒருநாள் கூலியாக நாற்பது உரூபாய் பெற்று கொப்பி வாங்கியிருக்கிறேன். கண்டவைகளும், அனுபவித்தவையும் "செல்லமுத்து" நாவலின் திறவுகோல்கள்.

இக்கதை மித்திரன் வாரமலரில் தொடராக வந்தபோது மெனிக்பாம் முகாம் வாழ்க்கையிலும், புனர்வாழ்விலும் இலட்சமாய் தமிழுறவுகள். தோட்டாக்களும், எறிகணைகளும் துவம்சம் செய்த மண்ணிலிருந்து இரண்டரை ஆண்டுகளாக முள்ளிவாய்க்கால் பேரவலத் தொடரை எழுதிய நான், அதே மண்ணிலிருந்து சமகாலத்தில் அதற்கு அப்பாற்பட்ட இன்னொரு பக்கத்தை எழுதினேன்.

காலச்சூழல் ஒன்றில் காலி பூசா சிறையில் நான் வாழ்ந்தபோது எனது சிறைக்கூட்டிற்கு அருகான சிறைக்கூட்டில் இருந்த ஆங்கில ஆசிரியர் ஒருவர் சொன்னார், "போர்ப்பகுதிப் படைப்பாளிகளுக்கு பிரச்சார இலக்கியம் மட்டுமா தெரியும். ஏன் நீங்கள் இன்னொரு பக்கம் எழுதக்கூடாது? போர்ப்பகுதி இலக்கியங்கள் ஒரு சாராரின் மொழிநடையிலேயே அதிகம் அமைந்துள்ளன. வடகிழக்கில் பன்முகப்பட்ட மொழிவழக்குகள் உள்ளனவே" என்று.

"செல்லமுத்து" நாவலை காலி பூசா சிறையில் தொடங்கினேன். காலம் என்னை பொலனறுவை சேனைபுர முகாமிற்கு மாற்றியது. அங்கே கதையினைத் தொடர்ந்து எழுதி நிறைவாக்கினேன். மித்திரன் வாரமலர் ஆசிரியர் கா.பொன்மலர் அவர்கள் இதனைத் தொடராக பிரசுரித்து ஊக்கமளித்தார். அந்நாட்களில் வாசகர் கடிதங்கள் வந்து "செல்லமுத்து" கதையினை சிரமேற்றின.

**யோ.புரட்சி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

## யோ.புரட்சி பற்றி...

ஈழத்தின் முல்லைத்தீவு மாவட்டம் வள்ளுவர்புரம் ஊரில் வசிப்பவர். யோகநாதன் செல்லமுத்து இணையரின் புதல்வன். போர்க்காலம் இவர் எழுதிய தமிழ் சிங்களம் இணைந்த கவிநூல் இல்லாமற் போயிற்று. மரச்சோலையில் "இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயரா நாய்" கவிநூல், காட்டிலே வைத்து "ஆஷா நாயும் அவளும்" சிறுகதை நூல், கடலிலே வைத்து "எதிர் வீட்டு நாயும் என் ஏழை நாயும்" கவிநூல் ஆகியவற்றை வெளியீடு செய்தவர். 32 நாடுகளின் 1098 கவிஞர்கள் இணைந்த 1868 பக்கங்களைக் கொண்ட "1000 கவிஞர்கள் கவிதைகள்" பெருநூலின் செயலியக்குநர். உலக சாதனைப் பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் அவர்கள் இவரது பாடலொன்றைப் பாடியுள்ளார்.

நன்றிக்குரியவர்கள்...

● பேராசிரியர்.மௌனகுரு, ● பேராசிரியர்.முனைவர் சா.உதயசூரியன், ● திரு.ந.பார்த்தீபன், ● கலாபூஷணம் நடராசா இராமநாதன், ● ஆதிரா, ● எஸ்.விஜய், ● சாயலன், ● ததுசா, ● வெற்றிச்செல்வி, ● சரஸ்வதி (ராசாத்தி).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்நூலினை இவருக்களித்து இன்புறுகிறோம்.**

தூயதமிழ் நிலைநிறுத்தலிற்காக தொடரியங்கு நிலையாளர்
**திரு.பொன்னம்பலம் முருகவேள்** அவர்கள்,
இயக்குநர்,
பேர்ண் வள்ளுவன் பாடசாலை,
சுவிட்சர்லாந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01

அவருக்குப் பதிலாக துருப்பிடித்த மண்ணெண்ணெய் பரல். அதிலும் சின்னஞ்சிறிய ஓட்டைகள் பல இடங்களில் பரவிக் கிடக்கின்றன. அதுவும் அடுப்புள்ள சுவர்ப் பக்கம்தான் இருக்கிறது. இழுத்துக் கட்டப்பட்ட பழைய உரப்பை அடுத்த சுவரின் காப்பாகி நிற்கின்றது. அது அடுப்பின் புகைபட்டு உள்ப்பக்கமாக நன்றாகவே கறுத்துப் போய்விட்டது. மேற்கூரையை பனையோலை, தென்னோலை, சிறிய தறப்பாள் துண்டுகள் என பலவித பொருட்கள் நிரப்பியிருக்கின்றன. எட்டடி நீளமும் எட்டடி அகலமும் கொண்ட குடிசை அதுவென அளக்காமலேயே சொல்லி விடலாம். உள்ளே ஒரு மூலையில் மூன்று கற்களைக் கொண்ட அடுப்பு. மரங்களில் தொங்கும் வெளவால்களாய் எல்லோரின் ஆடைகளும் குடிசையுள் தொங்கியபடி இருக்கும். கொசுக்கள் தாராளமாக வசிக்கும்.

செல்லமுத்து, அவளின் கணவன் காளியப்பன், ஒரே மகன் கண்ணா என மூன்று ஜீவன்களின் மாளிகை அது, ஆளுயர ஒருவர் நிமிர்ந்து நிற்க முடியாத அரண்மனை அது. சட்டி, பானை வைப்பதற்கு குடிசைக்கு வெளியே காட்டுத் தடிகளால் ஒரு பரண்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணியோடு சேர்த்து பற்றைக்காடுகள் உள்ளதால் காடுதான் மலசலகூடம். அந்த சுதந்திரமே தனி.

நேரம் இரவு ஏழு மணி.

கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் பாட்டாளிபுரம் கிராமத்தின் சுந்தரத்தார் காணியில் புல் வெட்டும் வேலைக்குப் போயிருந்த செல்லமுத்து மண் வெட்டியோடு வீடு திரும்பியிருந்தாள்.

"ஏய்.... பாப்... பா.. போ...போ ஏறு மரத்துல" கழுத்தறுத்தான் சேவலுக்கும் கறுப்பு நிறத்து பேட்டுக் கோழிக்கும் கட்டளையிட்டாள். குடிசை அருகோடு நிற்கும் நிழல்மரவள்ளி மரத்தில்தான் இரண்டு கோழிகளும் இரவிலே அடைக்கலம் கொள்ளும். முன்பு நிறைய கோழிகள் இருந்தன. கீரி பிடித்தது, அப்பப்போ கணவன் விற்றது போக இரண்டு கோழிகள் தான் இப்போது மிச்சம்.

அவளின் பேச்சு வழமையாக கோழிகள் கேட்பதுதானே. நிழல் மரவள்ளியின் ஒரு கிளையில் அவை ஏறிக் கொண்டன.

பழைய ஓலைப் பாயினால் ஆனதும், கயிறு போட்டு கட்டி மூடப்பட்டிருந்ததுமான ஓலைக் கதவினை அவிழ்த்து குடிசை உள்ளே நுழைந்தாள் செல்லமுத்து.

அடுப்பின் கல்லின் மேல் வழமையாக வைக்கப்பட்டிருக்கும் தீப்பெட்டியை, விளக்கினை கொளுத்துவதற்காகத் தேடினாள். குடிசையின் உள்ளேயும் வெளியேயும் நல்ல இருட்டு பரவத் தொடங்கி விட்டது.

"எங்க போச்சி இந்த நெருப்பெட்டி...." மனதுள் சினந்து கொள்கிறாள் செல்லமுத்து. மூன்று கற்களிலும் தீப்பெட்டி இல்லை. சாம்பல் பூத்த அடுப்பினுள்ளும் கை வைத்தாள். அதிலும் தீப்பெட்டி இல்லை. எங்குதான் அது போகும் !. மாலை வேளையில் வெளியே போகும் கணவன் காளியப்பன்தான் அதை எடுத்துச் சென்றிருப்பான் என்பது செல்லமுத்துவுக்கு தெரியாதா? பீடியும் தீப்பெட்டியும் இல்லாமல் அவன் வெளியே போகமாட்டானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தீப்பெட்டி வாங்கும் நோக்கோடு சில்லறைக் காசு எடுப்பதற்காய் பழைய தகரப் பேணியினுள் கையினை வைத்த அவளுக்கு அழுகைதான் வந்தது.

நாலைந்து நாட்களாக சுந்தரத்தார் காணியிலே புல்லு வெட்டும் வேலைக்குப் போய்க் கொண்டிருந்த அவள் தினமும் ஐந்து ஐந்து ரூபாயாக மிச்சம் பிடித்து தகரப் பேணியிலே சேர்த்து வந்தாள். அந்தர அவசரத்திற்கு உதவுமே என சேர்த்த அந்தப் பணம் இருபத்தைந்து ரூபாய் வரையில் இருந்தது. கள்ளு குடிப்பதற்காகவோ, பீடிக்கட்டு வாங்குவதற்காகவோ கணவன் காளியப்பன் அதை இன்று எடுத்து விட்டான்.

ஓலைப் பாயினால் வாசலை மூடிவிட்டு அயல் வீட்டு சீனியம்மாவிடம் போய் சிறிய நெருப்புக் கொள்ளி வாங்கி வந்து விளக்கேற்றினாள். ஒரு சிறிய ஜாம் போத்தலினுள் அரைவாசி அளவிற்கு உப்பு இடப்பட்டு சிறிதளவு தேங்காய் எண்ணெய் இடப்பட்டிருக்கும். உப்பினுள் அமிழ்ந்திருக்கும் திரியானது மேல் உள்ள எண்ணெயினை கடந்து ஒரு சிறு தகட்டுடன் இணைக்கப்பட்டிருக்கும். இதுதான் செல்லமுத்து வீட்டு சிக்கன விளக்கு.

சுந்தரத்தார் இன்று கூலிக் காசு கொடுக்கவில்லை. நாளைதான் தருவதாக சொல்லியிருந்தார். எனவே இப்போது இரவு உணவுக்கு கடனுக்குத்தான் அரிசி வாங்க வேண்டும்.

இன்று செய்வாய்க்கிழமை என்பதால் பாட்டாளிபுரத்தின் சாந்தி கடையிலே விளக்கு வைத்த பின்பு கடனுக்கு அரிசி கொடுப்பார்களோ தெரியாது. நன்றாக இருட்டிவிட்ட அந்தப் பொழுதில் ஒரே கடையான சாந்தியின் கடைக்குப் போய்வர ஆயத்தமானாள் செல்லமுத்து.

"கடுதா" என்ற அவள் வீட்டு நாயும் பின்னே வருகிறது.

"ஏ.... போ கடுதா வூட்ட பார்த்துக்க.." என்றவாறே ஒரு வெருட்டு வெருட்டிவிட்டு உண்ணிப் பற்றைகளும், புற்களும் நிறைந்த ஒற்றையடிப் பாதையூடே நடக்கிறாள். அரிசி வாங்குவதற்காய் கையிலே ஒரு கடதாசிப்பை. வேலைக்குப் போகும்போது கட்டியிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு கிழிந்த சிவப்பு நிறத்துச் சேலை. கீழ்த்தலைப்பை தூக்கி இடுப்பிலே சொருகி இருக்கிறாள். அதனால் வளர்ந்த புற்களில் சேலை உரசுப்படாது.

பட்டாளிபுரத்தின் பெரும்பாலான வீடுகளுக்கும் காணிகளுக்கும் வேலிகள் இல்லை. ஒவ்வொருவரின் காணிகளும் இரண்டு ஏக்கர் அளவு கொண்டவை. அதனால் தூரத் தூரவே வீடுகள். ஒரு சிலர் காணிகளை வேலிகளிட்டு வைத்திருந்தார்கள். குச்சொழுங்கை அருகோடு சில வீடுகளில் விளக்கு வெளிச்சம் தெரிகின்றது.

"ஏங்க... அதோ பாருங்க. அதுல வேகமா போறது செல்லமுத்து போல, ஓடிப்போயி கூப்பிடுங்க" குச்சொழுங்கையின் ராமாயி தன் புருசனுக்குச் சொல்ல அவன் ஓடி வந்தான்.

"செல்லமுத்துக்கா... ஒருக்கா வந்து போங்க. ஓங்ககிட்ட வர நெனைச்சேன்" ராமாயின் புருசன் சொன்னான். "சொல்லு..உங்கு" என்றாள். "நம்மட சின்னவளுக்கு ஐஞ்சி நாளா ஒரே வயித்தால போகுது. மருந்து மாத்திரைக்கும் சரிவரல. காச எறைச்சதுதான் மிச்சம். நீங்கதானே இத பார்ப்பிங்களே" அவன் சொன்னபோது மறுக்காமல் போனாள். இங்கே கடைக்குப் போகும் அவசரம் வேறு. கொஞ்ச நேரத்தில் கடை பூட்டி விடுவாள் சாந்தி.

"நீ தேவ இல்லாம அதை இதை சாப்புடாதை மொதெ. அதான் புள்ளைக்கு. நீ புட்டுக்கு தேங்காப்பூ போட்டு சாப்புடுறே. அதான். கொண்டா புள்ளய" சொல்லியபடியே ஏழு மாத பிள்ளையை வாங்கினாள் செல்லமுத்து. வயிற்றில் ஒரு தட்டு. பக்குவமாக விரல்களால் சிறு அழுத்தம் கொடுத்தாள். சின்ன குலுக்கல். இது எல்லாம் அவளுக்கு மட்டுமே தெரியும். ஏதேதோ புள்ளையை ஆட்டி ஆட்டி செய்தாள். அவர்கள் வீட்டில் இருந்த பாவட்டை எண்ணையிலே கொஞ்சம் எடுத்து வயிற்றில் இலேசாகத் தடவினாள். நான்கு நிமிடத்துள் யாவும் முடிந்தன.

"நாளைக்கி வயித்தால போகாது. ஓமம் சும்மா குடுக்காதை. நீ கட்டுப்பாடா சாப்புடு. நா சாந்திக்கா கடைக்குப் போகணும். வர்றேன்" என அவள் புறப்பட அடி வைக்கையில், ராமாயி கையிலே காசோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தாங்க.. இதை வெச்சிக்கோங்க" என நீட்டினாள்.

"ஐயோ..போடி, ஏம் புள்ளைக்கு நா காசு வாங்குவனா"

"செல்லமுத்துக்கா, நாலைஞ்சி நாளா பரிகாரி ஐயாக்கு எவ்ளோ காசு குடுத்தோம். புடிங்க, நம்ம மன சந்தோசத்துக்கு"

"ஏய் ராமாயி, நீ இப்ப காசு தந்தின்னா இனி ஒம்புள்ளைக்கி எதுன்னாலும் என்னய கூப்புடக் கூடா. சரியா? வைடி ஒன்னோட காச. அவென் ஏம்புள்ள" எனச்சொல்லியபடியே காசை வாங்காமல் நடந்தாள். உண்மையில் அவள் அரிசிகூட கடனுக்குத்தான் வாங்கப் போகிறாள். ஆனால் இந்த உதவிக்கெல்லாம் காசு வாங்கவே மாட்டாள். இது அவள் கொள்கை.

சின்னப் பிள்ளைகளுக்கு வயிற்றோட்டம், பெரிய ஆட்களுக்கு கால் உளுக்கு எல்லாம் அவள் பார்ப்பாள். பிள்ளைப்பேறு கூட ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோகாமல் செல்லமுத்துவை வைத்துப் பார்ப்போர் ஊரில் உள்ளனர்.

குச்சொழுங்கையூடே நடந்து கொண்டிருக்கையிலே நடைபாதையின் மேல் மாடொன்று இட்டிருந்த சாணத்தின் மீது வலது காலினை வைத்து விட்டாள் செல்லமுத்து. என்ன செய்வது பாதணிகள் இல்லாமலே நடக்கப் பழகி விட்ட பாதங்கள் அவளுடையவை.

"இந்த மாடுங்களுக்கு சாணி போடுறதுக்கு வேற எடமே கெடக்கையில்ல போல" தனியே பேசியவாறே ஒரு புல்லுக் கூட்டத்தின் மீது காலினை தேய்த்து சுத்தப்படுத்தியவாறு தொடர்ந்து அவள் நடக்கிறாள்.

தூரத்தே அம்மன் கோயிலின் மணியோசை கேட்கிறது. ஒரு வேப்பமரத்தின் கீழேதான் கோயில். வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் சாஸ்திரி ஐயா என்றொருவர் பூசை செய்வார். மாதத்திலே ஒரு தரம் யாராவது சிறு பொங்கல் பொங்குவார்கள். பொன்னுக்கா என்றொரு தாய் ஒவ்வொரு செவ்வாயும் சாமி ஆடுவாள். அவளிடம் தம் எதிர்காலம் பற்றி கேட்கவென்றே ஊரார் குவிவார்கள். அவள் சொல்வது சரி, பிழை என்பதற்கப்பால் ஊர் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேப்பமரத்தோடு அண்டிய கருங்கல் சிலையை மழை நனைக்காமல் சிறு தகரத்தால் காவல் கொடுத்திருந்தார்கள். சாஸ்திரி ஐயா கூட தகரத்திற்கு வெளியே நின்றுதான் பூஜை செய்வார். இன்று செல்லமுத்துவின் மகன் கண்ணாவும் பூஜைக்குப் போயிருக்கிறான்.

ஓலையால் வேயப்பட்ட, சுற்றி மண் சுவர் எழுப்பப்பட்ட ஒரு உழவு இயந்திரப் பெட்டியின் அரைவாசி அளவுள்ள கடைதான் சாந்தியின் கடை. பாட்டாளிபுரத்தின் ஒரே கடை அதுதான். செல்லமுத்து கடைக்கு போய்க்கொண்டிருக்கும் போது கடையிலிருக்கும் அரிக்கன் லாம்பு வெளிச்சம் தூரத்தே அடையாளம் காட்டுகிறது. செல்லமுத்து கடையை அடைந்த போது நன்றாகவே வேர்த்து விட்டாள். அரிசி வாங்குவதற்காய் கையிலே கொண்டு போன கடதாசிப் பையும் இலேசாக நனைந்து விட்டது.

"என்னா... செல்லமுத்து.. இன்னிக்கு அரிசி வாங்க பிந்திரிச்சி" சாந்தி கேட்டாள். தினமும் வேலை செய்யும் கூலிக்காசு வாங்கிய பின்புதான் அரிசி வாங்க செல்லமுத்து கடைக்குப் போவாள்.

"சுந்தரத்தார் நாளைக்கி கச்சான் போடப் போறாராம். அதான் அரை ஏக்கர் காணி புல்லையும் முழுசா செதுக்கி முடிச்சி குடுத்திட்டு வந்தேன்க்கா"

"அட அதுவா? நா நெனைச்சேன் வூட்டுல ஏதும் சண்ட சச்சரவோன்னு ம்.. சொல்லு அரைக்கிலோவா ஒரு கிலோவா அரிசி நிறுக்க..."

செல்லமுத்து தயங்கினாள். இன்று செவ்வாய்க்கிழமை. ஆறு மணியும் கடந்து விட்டது. எப்படி கடன் விசயத்தை சாந்திக்கு சொல்வது? வீடு திரும்பும் புருசனுக்கும், பிள்ளை கண்ணாவுக்கும் சமைத்து வைக்க வேண்டுமே.

"சாந்திக்கா.. ஒருக்கா கதவு பக்கம் வாங்கவேன்" கூனிக் குறுகிய வாறே செல்லமுத்து சொல்ல கடையின் பின் கதவுப் பக்கம் சாந்தியும் வந்தாள்.

"என்னாடீ செல்லமுத்து..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அது வந்துக்கா சுந்தரத்தார் புல்லு வெட்டுன காசு நாளைக்கித்தான் தர்றேன்னாரு. ராவுக்கு அரிசியும் இல்ல. அதான் இன்னைக்கு செவ்வாய்க்கிழமை எப்பிடி கடன் கேக்குறதுன்னுதான் ...” இழுத்தாள் செல்லமுத்து.

“ஏய் செல்லமுத்து வௌக்கும் வெச்சிட்டேன் பாரு.. கடையில இருந்து கடனுக்கு சாமான் போகக் கூடாதே”

சாந்தி சொன்னபோது செல்லமுத்துவுக்கு நெஞ்சு “திக்” என்றது. காலையில் தேநீரும் குடிக்காமலே அவள் வேலைக்குப் போவாள். காலை பத்து மணிக்கும், மாலை மூன்றரை மணிக்கும் வேலை செய்யுமிடத்தில் கிடைக்கும் தேநீரே அவளின் உணவு. வீட்டிலுள்ள மூன்று பேருக்கும் இந்த இரவு உணவு மட்டும் தான்.

“ஏய் செல்லமுத்து முன்னுக்கு யாரும் வர்றாங்களான்னு பாத்துக்க. கடதாசி பேக்கை தா. வூட்டில இருக்கிற அரிசியில அரைக்கிலோ தர்றேன்” என்றவாறே கடதாசிப் பையினை வாங்கிக் கொண்டாள் சாந்தி. செல்லமுத்துவின் வேர்த்திருந்த முகம் இப்போது சற்று பிரகாசித்தது.

கடதாசிப் பையிலே அரிசியை கொடுக்கும்போது சாந்தி சொன்னாள். “அடியே செல்லமுத்து நா மட்டும் ஒன்னோட புருசன் மாதிரி ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தா எப்பயோ விட்டிட்டுப் போயிருப்பேன்டீ. வூட்டிலேயே அந்த ரெண்டு கோழியையும் கட்டிப் புடிச்சிட்டு பெரிய பண்ணை நடத்துற ஆள்மாதிரி கெடக்குறான் ஓம் புருசன். வெயிலிலேயே கெடந்து நீ ஒழைக்கிற அஞ்சு பத்து காசுல கள்ளுக்கும் எறைக்கிறான். அவனுக்கு வேலைக்குப் போக கொள்ளையா?” கடைக்கார சாந்தி சொன்னபோது செல்லமுத்து என்ன பதில் தான் சொல்ல முடியும்? இந்த நியாயங்களை, யதார்த்தங்களை பேச அவளுக்குத் தெரியாது. புருசனும் பிள்ளையும் சாப்பிட வேண்டும். தான் உழைக்க வேண்டும். இது மட்டும்தான் செல்லமுத்துவுக்குத் தெரியும்.

அந்த இருட்டிலும் மிக வேகமாக வீடு நோக்கி ஓட்டமும் நடையுமாக போகின்றாள். கணவனோ பிள்ளையோ இன்னமும் வீடு வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுதா நாய் மெதுவாக குரைக்கின்றது. "கொலைக்காத கடுதா, நா... தான் வர்றேன்" என்று அவள் சொல்ல வாலை ஆட்டியபடியே அவளை வந்து உரசியது நாய்.

அரிசியை வீட்டினுள் வைத்துவிட்டு, வேக வேகமாக நீர்க்கானை எடுத்துக்கொண்டு சீனியம்மா காணி கிணற்றடிக்குப் போய் தண்ணீரை அள்ளி தோளிலே நீர்க்கானை வைத்துக்கொண்டு வருகிறாள். "நம்ம காணியில ஒரு கெணறு இருந்தா ஒரு சோலியும் இல்லப்பா" அலுத்துக் கொண்டே நீர்க்கானை இறக்கினாள். சீனியம்மா கிணறுதான் காலாகாலமான பாவனை. அவர்கள் யாருமே குளிக்காத நேரம் பார்த்துத்தான் இவள் போவாள். சீனியம்மா வீட்டிலே ஒரு நெருப்புக்கொள்ளி வாங்கி அடுப்பை மூட்டினாள்.

ஜாம் போத்தல் விளக்கினை எடுத்துக்கொண்டு குடிசையிலிருந்து சற்று தூரத்திலே உள்ள கோழியின் எச்சம் கொட்டப்படும் இடத்திற்குப் போனாள் செல்லமுத்து. அங்கு கொஞ்சம் குப்பைக் கீரைகள் முளைத்து இருப்பதை காலையிலேயே கண்டிருந்தாள் அவள். "ஏங்க மூணு நாலு மணி போல குப்பக் கீரைய புடுங்கி வெச்சிருங்க. ராவுக்கு கறி ஆக்கலாம்ல" என்று கணவனுக்கு காலையில் சொல்லி விட்டுத்தான் வேலைக்குப் போயிருந்தாள்.

அதெல்லாம் எங்கே காளியப்பனுக்கு ஏறப்போகிறது. பகல் முழுவதும் தூங்கிவிட்டு யாருடைய வீட்டில் சரி ஒரு பிடி சோறு உண்டுவிட்டு மாலையில் கடனுக்காவது கள்ளு குடிப்பதுதான் அவன் வழமையான கடமை.

குப்பைக் கீரைகளிடையே கிடந்த சின்ன தொட்டாச்சினுங்கி முள்ளுகள் செல்லமுத்துவின் கைகளை சீண்டின. அந்த வலிகளெல்லாம் அவளுக்கு ஒரு பொருட்டா? பக்குவமாய் பிடுங்கியெடுத்தாள். மின்மினி போன்ற கைவிளக்கின் ஒளி மெல்லிய காற்றுக்கு நடனமாடுகிறது.

குடிசை வாசலிலேயே கைவிளக்கினை தொங்க விட்டாள். உள்ளேயும் வெளியேயும் கொஞ்சம் வெளிச்சம் சொட்டுகிறது. அரிசியை கழுவி அடுப்பிலே வைத்துவிட்டு குப்பைக் கீரையை வேகமாய் அரியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினாள். "பூச முடிஞ்சா, புள்ள வருவான் வேகமா சமைச்சிரணும்" கண்ணாவின் அலைகள் செல்லமுத்துவின் மனதிலே அடிக்கின்றன.

கடுதா குரைக்கின்றது.

குடிசைக்கு வெளியே ஒரு உரப்பையில் இருந்தவாறே கீரையை அரிந்து கொண்டிருந்த செல்லமுத்து என்னவென்று பார்த்தாள். யாரோ வருகிறார்கள்.

"யாரூ...?"

"செல்லமுத்து நாந்தான்டீ... வள்ளி..."

"அட.... வாடீ.. கடுதா அங்காலை போ. என்னாடீ இந்த எட்டு மணிக்கு..."

"ஏய், சுந்தரத்தார் சொன்னாரு நாளைக்கி நாள் சரியில்லையாம் ஏதோ கரிநாளாம். நாளன்னைக்குத்தான் கச்சான் போடுவாராம்...."

"ஐயோடி அப்ப நாளைக்கு நம்ம பொழப்பு"

"அதான்டீ செல்லமுத்து ஒரு வழி கெடச்சிருக்கு. அஞ்சு மைல் தூரத்துல இருக்கிற வள்ளுவர்புரம்ங்கிற ஊருக்கு நாளைக்கு நம்ம ஊர்ப் பொண்ணுங்க நெல்லு பொறுக்க போறாங்க. கதிர் அறுப்பு முடிஞ்ச வயலுகள்ள சிந்தி கெடக்கிற நெல்லு பொறுக்கலாமாம்"

"அடியே வள்ளி அப்ப நானும் வர்றேன்டீ..."

"அதுக்குத்தான்டீ இந்த ராவுலையும் ஓடோடி வந்தேன். மரவள்ளி கெழங்கு அவியப் போட்டுட்டு வந்தேன்டீ. நா வர்றேன். காலைல அஞ்சரை மணிக்கு நடக்கத் தொடங்கணும். நேரத்துக்கே எழும்பீருடி" அவசர அவசரமாக சொல்லிவிட்டு மெல்லிய ஓட்டமாகப் போகிறாள் வள்ளி.

ஊரில் யாரிடமாவது ஏதோவொரு வேலை செய்து பிழைப்பை ஓட்டுவது செல்லமுத்துவின் வழமை. நாளை சுந்தரத்தார் காணியிலே கச்சான் போடும் வேலையை நம்பி இருந்தாள். பாட்டாளிபுரத்தில் சிறு கல்லை தூக்கி மறு இடம் வைப்பதற்கும் நாள் நட்சத்திரம் பார்ப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமை. அவர்கள் நாள் நட்சத்திரம் பார்ப்பதால் இங்கு ஒரு குடும்பத்திற்கு ஒருநாள் பிழைப்பு இல்லாமல் போகிறது என்பதை சுந்தரத்தார் புரிய வாய்ப்பில்லை. சமூகத்தின் அடி மட்டத்தில் கூட அதற்குள்ளும் தன்னை ஓர் உயர் நிலையில் காட்டி, தன் போக்கிலே உறுதியாக இருப்பவர்கள் அப்படியே இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள். நல்லவேளை பக்கத்து வீட்டு வள்ளி வந்து வள்ளுவர்புரத்திற்கு நெல்லு பொறுக்கப் போகும் விசயத்தை சொன்னாள்.

அடுப்பிலே சோறு வெந்து விட்டது. கஞ்சி வடிப்பது இல்லை. அப்படியே நிறைகட்டி எடுப்பது வழமை. குப்பைக் கீரையிலே ஒரு சொதி வைப்பதே செல்லமுத்துவின் திட்டம். சோற்றை இறக்கி விட்டு கீரையை ஆக்குவதற்கு சட்டியை அடுப்பு ஏற்றுகிறாள்.

அடுப்பு எரிவதால் எழும்பும் புகை அந்த சிறிய குடிசைக்குள்ளேயே சுழல்வதால் உள்ளே தொங்கும் உடுப்புக்கள் கூட புகை மணமாகவே கிடக்கின்றன. கீரை சமைத்து விட்டாள். அதையும் இறக்கி வைத்துவிட்டு சீனியம்மாவின் கிணற்றடிக்குப் போய் குளித்துவிட்டு வந்திடலாம். செல்லமுத்துவின் வழமையான நேர அட்டவணை அதுதான். இருபத்தெட்டு வயதுவரை பிறந்த வீட்டைப் பார்த்துவிட்டு ஓடிப்போய் கல்யாணம் முடித்தவள். இப்போது நாற்பத்து நான்கு வயது. கவிஞர் வைரமுத்துவின் பிறந்த தேதி, மாதம் தான் அவளுக்கும். இவ்வளவு காலம் இதே நிலைமைதான்.

சிறிய பேணிக்குள் கிடந்த ஐந்தாறு செத்தல் மிளகாய்களை அரிந்து கொஞ்சம் உப்பு சேர்த்து கீரையுடன் சேர்த்தாள். செத்தல் மிளகாய் முடிந்து விட்டது. வெங்காயம் எதுவும் இல்லை உள்ளியை நினைத்துப் பார்க்கவே முடியாது. நாளை காசு கிடைத்தால் தான் வாங்கலாம். இன்றிரவு சம்பிரதாய கீரைக் கறிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலக
06 NOV 2019
மாநகரசபை
யாழ்ப்பாணம்

## 02

கடுதா குரைக்கின்றது.

பல வருடங்களாக செல்லமுத்துவோடு இருக்கும் நாய். அதன் குரைப்பு ரகங்கள் செல்லமுத்துவுக்கு அத்துப்படி. மாட்டைப் பார்த்தால் ஒரு விதமாகவும், மனிதரைப் பார்த்தால் ஒரு விதமாகவும் கடுதா குரைக்கும். இப்போது குரைக்கும் குரைப்பு மனிதருக்கானது என்பது குடிசையினுள் இருந்த செல்லமுத்துவுக்குப் புரிந்தது.

"இவரு வர்றாரா கண்ணா வர்றானா" என முணுமுணுத்தபடியே வெளியே வந்தாள்.

"இங்கையே நில்லு மாரிமுத்து. காசு எடுத்திட்டு வந்துடுறேன்" தன்னோடு வந்த மாரிமுத்துவை குடிசையிலிருந்து சற்றுத் தூரத்தில் நிற்பாட்டிவிட்டு குடிசை அருகிற்கு வந்தான் செல்லமுத்துவின் கணவன் காளியப்பன்.

"என்னாங்க நல்லா வேர்த்துப் போயி இருக்கிறீங்க. யேன் மாரிமுத்து அங்க நிக்கிறாரு..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏன்டி அவேன் ஒனக்கு வேணுமா...ம்”

“ஆமா குடிச்சா எப்புடி பேசுறதுன்னே புரியாது ஒங்களுக்கு. குடிக்கிறது சரி இருட்டுப்பட மொத குடிச்சிட்டு வூட்டுக்கு வந்து சேந்துரலாமில்லே...”

“அத பெறவு கதைப்போம்டீ, மொதல் முப்பது ரூபா காசு குடு. மாரிமுத்துவுக்கு குடுக்கணும். அங்க பாரு அவேன் ஒத்த காலிலையே நிக்கிறான்”.

செல்லமுத்துவுக்கு நெஞ்சு கனத்தது. முப்பது ரூபாய்க்கு அவள் எங்கே போவாள். சுந்தரத்தார் கூலிக்காசும் கொடுக்கவில்லையே!

“என்னடீ உம்முன்னு நிக்கிறே. எடேன் வேகமா”

“அதுங்க.... சுந்தரத்தாரு இன்னிக்கு...”

“என்னா சொல்லு...”

“நாளைக்குத்தான் புல்லு வெட்டின காசு தர்றேன்னு சொன்னாரு”

இதைக் கேட்டுக்கொண்டிருந்த மாரிமுத்து உணர்ச்சி பொங்க ஆரம்பித்தான். “ஏய் காளியப்பா தெரியும்டா எனக்கு. ஒன்னய நம்பி கள்ளு குடிக்க காசு தந்தேன் பாரு. என்னைய செருப்பால அடிக்கணும்டா. அதுவும் புது செருப்பால இல்ல பழைய செருப்பால அடிக்கணும். இன்னையிலேர்ந்து சரி கடனுக்கு காசு வாங்கி குடிக்கிறத வுடு. கேவலம் கெட்ட பொழைப்பு” சற்று சத்தமாகவே கத்தினான் மாரிமுத்து. மாரிமுத்துவுக்கும் வெறி உச்சத்தில்தான் இருந்தது.

ஏற்கனவே தகரப் பேணியில் ஐந்து ரூபாய்களாக செல்லமுத்து சேர்த்து வைத்திருந்த காசுக்கு பீடி கட்டு வாங்கிய காளியப்பன் கள்ளுக் கடைக்குப் போய் கள்ளு குடிக்க காசு இல்லாததால், மாரிமுத்துவிடம் கடன் வாங்கித்தான் கள்ளு குடித்தான். புல்லு வெட்டிய கூலிக்காசினை செல்லமுத்து கொண்டு வந்திருப்பாள் என்ற நம்பிக்கையில்தான் அவன் மாரிமுத்துவை குடிசைக்கு கூட்டி வந்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL 13028CC 274157

"நா வர்றேண்டா. ரோசம் இருந்தா விடிய மொத என்னோட வூட்டுக்கு வந்து காசைத் தாடா" ஆவேசமாக சொல்லியபடியே மாரிமுத்து நடக்கத் தொடங்கும்போது காளியப்பன் உணர்ச்சிவசப்பட்டான்.

"நில்லு மாரிமுத்து எனக்கும் ரோசம் இருக்கு. இந்தா பாரு இந்த கழுத்தறுத்தான் சேவல் நூத்தி அம்பது ரூபா பெறும். இந்தா இதை கொண்டுபோ. நீ இதை வித்தாலும் சரி வெட்டி கொழம்பு வெச்சாலும் சரி" சத்தமாக சொல்லியபடியே நிழல் மரவள்ளியில் தூங்கிக் கொண்டிருந்த கழுத்தறுத்தான் சேவலை பிடிக்கப் போனான் காளியப்பன். கோழிகள் அவ்வப்போது கிளைகள் அசையும்படியாக கால்களை நகர்த்திக்கொண்டிருந்தன. கடுதா நாய் மாரிமுத்து பக்கமாக பார்ப்பதும், குடிசையருகோடு வருவதுமாக இருக்கின்றது.

"வேணாம்ங்க. ஒரு பேடும், சேவலுந்தா இருக்கு. நாளைக்கு நா எப்பிடியாச்சும் குடுக்கிறேங்க. ஏங்க மாரிமுத்துண்ணே…" செல்லமுத்து காளியப்பனை தடுத்தாள். காளியப்பன் கோழியைப் பிடித்துக் கொடுக்க மரத்தினருகே போய்விட்டான்.

"போடீ, நீ காசு கொன்னாந்து இருந்திருந்தா ஏன்டீ இந்த நிலம" கத்தியபடியே செல்லமுத்துவின் வயிற்றிலே உதைந்தான் காளியப்பன். "ம்…ஆ…" என்றபடியே வயிற்றைப் பிடித்துக் குந்திவிட்டாள் செல்லமுத்து.

தரையில் நின்றபடியே பிடிக்கக்கூடிய உயரமான நிழல் மரவள்ளி கிளையில்தான் வழமையாக கோழிகள் தங்குவதுண்டு. கறுப்பு நிறத்து கழுத்தறுத்தான் சேவலருகே மெதுவாக கைகளைக் கொண்டுபோன காளியப்பன் அப்படியே சேவலை அமுக்கினான். "க்…கு…க்…குகாக்" சேவல் சத்தமிட்டது. இரு கால்களையும் கிழிந்த சட்டைத் துண்டினால் சேர்த்துக்கட்டிய காளியப்பன், அதை மாரிமுத்துவிடம் கொண்டு போனான்.

"இந்தா மாரிமுத்து. இன்னையோட ஒனக்கும் எனக்கும் எந்த பந்தமும் இல்ல. சேவல எடுத்துகிட்டு, எடத்த விட்டு மாறு" சொல்லியபடியே சேவலை கொடுக்க, மாரிமுத்துவும் பத்திரமாய் வாங்கிக்கொண்டு இடம்விட்டு நகர்ந்தான். கழுத்தறுத்தான் சேவல் "க்…கி….கிராக்" என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமிட்டுக்கொள்கிறது. இப்போது நிழல் மரவள்ளி மரத்தில் ஒரு பேட்டுக்கோழி மட்டும்தான். கடுதா நாய் ஓர் ஓரமாய் படுத்துக் கொள்கிறது.

வயிற்றைப் பிடித்துக்கொண்டு வலியில் கிடந்த செல்லமுத்து இப்போது எழுந்துவிட்டாள். கணவனிடம் அடியுதை வாங்குவது அவளுக்கு புதிதா, இல்லைத்தானே. வாரத்தில் ஒரு நாள்தான் செல்லமுத்து அடி வாங்காத நாளாக இருக்கும். சில நேரம் வாரத்தில் ஏழு நாளும் ஏதோ ஒரு சாட்டை வைத்து காளியப்பன் அடிப்பான். சில நாட்களில் அவள் மயங்கிவிடுவாள். செத்தல் மிளகாய் புகை போட்டு அவளை இவன் எழுப்புவான். எவ்வளவு அடித்தாலும் அதிகம் சத்தம் போடமாட்டாள். சில நாட்களில் பெரிய தடிகளால் காளியப்பன் அடிப்பான். அந்த நாட்களில் இவள் சத்தம் போடும்போது அயல்வீட்டு அப்பாச்சியம்மா ஓடிவந்து மறிப்பதுண்டு. தான் கூப்பிட்டு, ஒரு தரத்தில் செல்லமுத்து "என்னங்க" எனக் கேட்காவிட்டாலும் "செவிடாடி ஒனக்கு" என அவளுக்கு அடிவிழுவதுண்டு.

இப்போது செல்லமுத்துவுக்கு வலி பெரிதாகத் தெரியவில்லை. இருந்த ஒரேயொரு சேவலும் கைமாறிப் போய்விட்டதே என்று வேதனைப் பட்டாள். இருபது வரையாய் இருந்த கோழிகள் இரண்டானது இப்படித்தான். இப்போது அது ஒன்றாகிவிட்டது. செல்லமுத்து அடை வைத்துப் பெருக்கிய கோழிகள்தான் அத்தனையும்.

மெதுவாய் குடிசையினுள் போய், அடுப்பிலே இருந்த கீரைச் சொதியை இறக்கினாள். குடிசைக்குள்ளே சாக்கினை விரித்து காளியப்பன் படுத்திருக்கிறான். விறகின் புகை குடிசைக்குள் பரவியபடியே இருக்கிறது.

அவனுக்கு இன்னமும் வெறி முறியவில்லை.

"ஏங்க சாப்புடுறீங்களா...? கீரையும் எறக்கீட்டேன்" காளியப்பனுக்கு அன்பாய் சொன்னாள் செல்லமுத்து. கொஞ்சம் கழித்துத்தான் அவன் சாப்பிடுவான் என்பது புரிந்தது. இவளின் கேள்விக்கும் அவனிட மிருந்து பதிலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அம்மன் கோயிலிலே சாமியாட்டம் முடியவில்லை போல. சில நாட்களில் பன்னிரெண்டு மணியும் ஆகும். "புள்ள வந்தான்னா சாப்பாடு குடுத்திரலாம்..." மனதிலே நினைத்துக்கொள்கிறாள் செல்லமுத்து. எல்லோரும் சொல்வது அன்னையும், தந்தையும் கண் காணும் தெய்வங்கள் என்று. சொல்லமுத்துவோ கணவனையும், பிள்ளையையும் கண் காணும் தெய்வங்களாக நினைப்பவள்.

காளியப்பன் புற்றுநோய் உடையவன். அவனுக்கு எப்போதும் மரணம் வரலாமென்று எங்கேயோ தூரத்திலே உள்ள அரசாங்க ஆஸ்பத்திரி மருத்துவர்கள் சொன்னார்களாம். அது முதலாய் அவனையும் தன் பிள்ளையாக நினைத்துக் கொண்டிருக்கிறாள் செல்லமுத்து. கணவன் அடித்தாலும் உதைத்தாலும் எதற்கும் திருப்பி கதைக்க மாட்டாள். அவன் கள்ளுப் பிரியன் என்பது அவளுக்கு தெரியாதா? காசு இருந்தால் அவளே இருபதோ முப்பதோ கொடுத்து குடிக்கச் சொல்லுவாள். பின்பு அவன் வெறியானதும் அடி வாங்குவதும் அவள்தானே. "ஏங்க... இந்தாங்க இதுல இருபதுருவா இருக்கு. அளவா குடிக்கிறதுண்ணா குடிங்க" எனக்கொடுப்பாள்.

"எத்தன நாளைக்கு நம்மகூட இருப்பாரோ. இருக்கிற வரைக்கும் ஏதோ சந்தோசமா இருக்கட்டும்" என நினைத்து கணவனின் குடிப்பிற்கு நியாயம் தனக்குள்ளே தேடிக்கொள்வாள். தாய்க்குப் பின் தாரம் என்று செல்லமுத்துவுக்காகத்தான் சொல்லி வைத்தார்களோ. மது அருந்தினால் வெறிக்கும், குடி குடியைக் கெடுக்கும் என்றெல்லாம் கணவனுக்கு விளக்கம் சொல்லி குடியை நிறுத்துமாறு கேட்க அவளுக்குத் தெரியாது.

காளியப்பனுக்கு நெஞ்சு வலியும் உண்டு. களைப்பான வேலைகள் செய்தால் திடீர் வலி வந்துவிடும். சிலவேளை மயக்கம் போட்டு விழுந்தும் விடுவான். அதனால் அவனை விறகு சுமக்கக்கூட செல்லமுத்து விடமாட்டாள். உலகம் நவீனமாகிவிட்டது. ஆணும், பெண்ணும் சமம். குடும்பத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம பொறுப்பு என்பது பற்றியெல்லாம் செல்லமுத்துவுக்கு பேசத் தெரியாது.

இரவு 9.30 மணி இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமுத்துவின் மனதிலே ஒரு யோசனை உதித்தது. மெதுவாக வள்ளி வீட்டுக்குச் சென்று முப்பது ரூபாய் கடனாக வாங்கி வேகமாக மாரிமுத்து வீட்டுக்குப் போய் காசை கொடுத்துவிட்டு கழுத்தறுத்தான் சேவலை திருப்பி வாங்கிக்கொண்டு வந்துவிட வேண்டும் என்று நினைத்தாள்.

இன்னமும் குளிக்காத அவளின் உடம்பு வியர்த்து பசையாக கிடக்கிறது. இரண்டு காணிகள் கடந்தால் வள்ளி வீடு. கூடுதலாக இரண்டு ஏக்கர் காணிகள். வேலிகள் இல்லாததால் ஒருவர் வீட்டுக்குப் போவதென்றால் ஒழுங்கைகள் ஊடாக நடக்காமல் காணிகளூ டாகவே நடந்து போய்வருவது பாட்டாளிபுரத்தவர்கள் வழமை. பாதணி அணியாத அவள் பாதங்கள் முட்கள் நிறைந்த இரு தரிசுக் காணிகளூடே வள்ளி வீடு நோக்கி விரைகின்றன. கொஞ்சம் முள்ளான இடங்களிலே குதிக்கால்களால் நடப்பது அவள் வழமை. வேலியேதுமற்ற வள்ளி வீட்டு காணிக்குள் நுழைகின்றாள் செல்லமுத்து. "இனுக்கு" என்ற பெயரில் பாட்டாளிபுரத்திலே அழைக்கப்படும் ஒருவகை புல்லினால் வேயப்பட்ட சிறு வீடு. முற்றத்திலே கிடங்கு தோண்டி படுத்திருந்த வள்ளி வீட்டு நாய் உறுமுகிறது. "இந்தா உஞ்சி, உஞ்சி ஏய் வள்ளி" நாயை சமாளித்தபடியே வள்ளியை அழைத்தாள் செல்லமுத்து. வளர்பிறை ஏழாம்நாள். நிலா வானிலே சிரித்துக்கொண்டிருக்கிறது.

"என்னடி செல்லமுத்து வேர்க்க வேர்க்க வர்றே..."

"வள்ளி ஒரு ஒதவி அவசரமா வேணும்டீ"

"சொல்லு கறி கிறி ஏதும் வேணுமா"

செல்லமுத்து வீட்டில் சிலவேளை சோறு மட்டும் இருக்கும். கறி வைக்க ஏதும் இருக்காது. அப்படியான நாட்களில் வள்ளி வீட்டில் கறி வாங்குவது அவள் வழமை. பாதி தேங்காய், பத்து செத்தல் மிளகாய் என அவ்வப்போது வள்ளியிடம் கடன் வாங்கி மீளச்செலுத்துவாள் செல்லமுத்து. இன்று அவள் அதற்காகவா வந்தாள்?

"இல்லேடி... மாரிமுத்து அண்ணேங்கிட்ட இவரு கடன் வாங்கி கள்ளு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிச்சிருக்காரு. அதுக்குப் பதிலா இவரு நம்ம கழுத்தறுத்தான் சேவல குடுத்திட்டாரு. முப்பது ரூவா காசு தாவேன். இப்பவே கோழிய மாத்தி எடுக்கணும். நாளைக்கி சுந்தரத்தார்கிட்ட புல்லு செதுக்கின காசு கெடைச்சாப்புறம் தர்றேன்டீ. விட்டா கோழிய வெட்டிகிட்டி புடுவா"

"அடியே என்னடீ ஓம் புருசன். சரி இந்த பலாக்கட்டையில உக்காரு. ஏங்கிட்ட இருபது ரூபா இருக்கு. இரு ஒடனே ராசாத்திக்கிட்ட பத்து ரூவா வாங்கி வர்றேன்" சொல்லியபடியே அயல் குடிசைப் பக்கம் ஓட்டமாகப் போகின்றாள் வள்ளி. வள்ளி வீட்டு நாயும் அவள் பின்னே போகின்றது. வள்ளி வீட்டின் முன்னால் நிற்கும் முருங்கை மரத்தினை பிடித்தவாறு செல்லமுத்து நிற்கின்றாள்.

நான்கு நிமிடங்கள் ஓடியிருக்கும்.

"ஒன்னோட அதிஸ்டம் ராசாத்தி பத்து ரூபா தந்தா. இந்தா நாளைக்கி எப்பிடியாச்சும் தா..." பரிவோடு முப்பது ரூபாயை நீட்டினாள் வள்ளி.

"நா வர்றேன்டீ... மாரிமுத்தண்ணை வூட்டுக்கு வேகமா போகணும். இவரு எழும்பினாலும்..." அவசரமாக சொல்லியபடியே குறுக்குப் பாதை சம்புப்புல் வெட்டையூடே ஓடுவதற்கு ஒப்பான நடையுடன், மாரிமுத்து வீடு நோக்கி போய்க் கொண்டிருக்கிறாள் செல்லமுத்து. ஊரின் மாடுகள் மேய்ச்சல் செய்துவிட்டு சம்புப்புல் வெட்டையில் படுத்திருக்கின்றன. ஐநூறு மீற்றர்கள் வெட்டை. அதில் நின்று பார்க்கும்போது தூரத்தே வீடுகளில் எரியும் விளக்குகள் தெரியும்.

நாளை, சாந்தி கடைக்கு அரிசி வாங்கிய கடன் காசு, வள்ளிக்குரிய முப்பது ரூபா கடன் காசு என்பன கொடுக்க வேண்டும். இதைவிட காளியப்பனின் கள்ளுக்கும் காசு இறைக்க வேண்டும். புல் வெட்டிய காசு ஐம்பது ரூபாதான் சுந்தரத்தார் கொடுப்பான். நாளை மறுதினம் கச்சான் போடும் வேலை உள்ளதால் அடுத்த நாள் கூலியையும் நாளைக்கே வாங்கினால்தான் கடனையும் சமாளித்து, சாப்பாட்டு பாட்டையும் கவனிக்கலாம்.

மாரிமுத்து காணிக்கு சுற்றி வேலி இல்லை. வீட்டின் முன்பக்கம் காட்டுக் கட்டைகள் போட்டு, இடையிடையே வரிச்சு போன்ற தடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பட்டுள்ளன. ஒரு மாதிரி வேலிதான். உள்ளே வீட்டில் நடப்பது எல்லாம் தெரியும். செல்லமுத்து புல்வெளியைக் கடந்து மாரிமுத்து வீடிருக்கும் பாதையில் வீட்டினருகோடு நிற்கிறாள்.

"வேணாம்ங்க... முப்பது ரூபாவுக்காக இந்த சேவல அறுக்க சொல்லுறீங்களே. வெச்சிருந்திட்டு நாளைக்கு காசை வாங்கீட்டு குடுப்பம்ங்க" மாரிமுத்துவின் மனைவி மாரிமுத்துவுக்கு சொன்னது சொல்லமுத்துவின் காதுகளுக்கும் கேட்கிறது. நல்ல வேளை அவள் இப்போது வந்தது. இல்லாவிட்டால், கழுத்தறுத்தான் கறிக்குத்தான் போயிருக்கும். "மாரிமுத்தக்கா" கூப்பிட்டபடியே உள்ளே போனாள் செல்லமுத்து. கணவனின் பெயரோடு அக்கா என்பதை இணைத்து மனைவிமாரை மற்றவர்கள் கூப்பிடுவதும் இங்கே உண்டு.

"இந்தாங்க மாரிமுத்தண்ணே, அவரு வாங்கின காசு. நீங்க ஏந்தான் கள்ளு குடிக்கிறதுக்கு கடன் குடுக்கிறீங்க. சேவல குடுங்க" காசை நீட்டினாள் செல்லமுத்து. கட்டப்பட்ட நிலையில் மரண பயத்தோடு கிடந்த கழுத்தறுத்தான் சேவலை தூக்கிக் கொடுத்தாள் மாரிமுத்துவின் மனைவி. "கொக்... கொகாக்..." என்று சத்தமிட்டபடியே செல்லமுத்துவின் கையிற்கு மாறியது சேவல். குஞ்சு முதலாக அவள் பார்த்துப் பார்த்து வளர்த்த சேவல். அதையும் பிள்ளைபோலவே பார்ப்பாள் அவள். சேவலின் முதுகினை அன்பாய்த் தடவினாள். வீட்டுக்கு நடக்கும்போது அதனோடு பேசியபடி நடக்கின்றாள். "ஏய்... கழுத்தான், பார்த்தியா ஒன்னய காப்பாத்தீட்டேன். மருவள்ளி மரத்துல வடிவா படுத்துக்கோ என்ன..." கழுத்தறுத்தான் சேவலுக்குச் சொல்கிறாள். அது மரணபயம் நீங்கிய ஆறுதலில் இருக்கிறது. அவள் ஒழுங்கையூடே நடக்கையில் வீடுகளில் இருந்து கவனிக்கும் நாய்கள் இலேசான சத்தம் போடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03

இப்போது இரவு 10.00 மணி இருக்கும்.

இப்போதுதான் மகன் கண்ணா அம்மன் கோயிலின் சாமி ஆட்டம் முடிந்து வீடு வருகிறான். செல்லமுத்து வீட்டு கடுதா நாய் மெதுவாக குரைத்துவிட்டு, வருவது நம்ம ஆள் என்பதை உணர்ந்து வாலாட்டுகிறது. கொஞ்ச நேரத்திற்கு பின்புதான் வெறி தெளிந்து எழும்பிய காளியப்பனுக்கு உணவு கொடுத்துவிட்டு இருக்கின்றாள் செல்லமுத்து. சாப்பிட்ட காளியப்பன் குடிசைக்குள்ளே படுத்துவிட்டான்.

"என்னப்பா பொன்னுக்கா சாமி ஆடிச்சா. பூச முடிஞ்சிருச்சா" கண்ணாவை அணைத்தபடியே கேட்டாள் செல்லமுத்து. "நெறய பேர் கட்டு கேட்டாங்கம்மா. அதான் சாமி கூட நேரம் ஆடிச்சி. என்னய கொஞ்சம் கவனமா நடந்துக்கட்டாம்னு சாமி சொல்லிச்சிம்மா"

"என்ட குஞ்சி ஒனக்கு ஒரு கொறை வர சாமி விடாதுப்பா. அந்த கேனுக்குள்ள தண்ணி இருக்கு. மொகத்த கழுவுப்பா. சாப்பிடனு மில்லியா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் படித்தவளோ, படிக்காதவளோ சில தாய்மார்களுக்கு ஒருவித குணமுண்டு. தன் பிள்ளை வளர்ந்த பின்புகூட அவனை ஒரு வேலையும் செய்யவிடாது அவர்களுக்கு பணி செய்து சந்தோசம் காண்பதே அது. இல்லாவிட்டால் பதினாறு வயதாகும் கண்ணாவுக்கு முகம் கழுவ தானே தண்ணீரள்ளி ஏன்தான் செல்லமுத்து வைக்க வேண்டும். சந்தோசம் காணும் முறைமையும் தாய்மைப் பண்புகளும் பெண்களுக்கு பெண்கள் வேறுபட்டே காணப்படுகின்றன.

குப்பைக்கீரை சொதியோடு சோற்றை ஒரு பிடி பிடித்தான் கண்ணா. அவனுக்கு நான்றாகவே வயிறு நிரம்பி விட்டது. "கண்ணா இன்னும் கொஞ்சம் சாப்பிடுப்பா" கெஞ்சினாள் செல்லமுத்து. அவளுக்காய் எஞ்சி இருப்பது கொஞ்சம் சோறுதான். அதைப் பற்றியெல்லாம் செல்லமுத்துவுக்கு கவலை இல்லை. கண்ணா வயிறு நிரம்ப சாப்பிட வேண்டும். அவன் சாப்பிட்டு முடிந்ததும், ஒரு சாக்கை குடிசையினுள் விரித்து அதன் மேல் தன் பழைய சேலை ஒன்றை விரித்தாள். "படுப்பா கண்ணா அம்மா சீனிம்மாவூட்டு கெணத்தடிக்குப் போயி குளிச்சிட்டு வர்றேன்" சொன்னாள் செல்லமுத்து.

காலை சுந்தரத்தார் காணிக்கு வேலைக்குப் போகும்போது முகம் கழுவிவிட்டு போன செல்லமுத்து பகலெல்லாம் புல் வெட்டும் வேலை செய்துவிட்டு இப்போதுதான் குளிக்கப் போக முடிந்திருக்கிறது. கிழிக்கப்பட்ட வாழை இலையால் சுற்றி வைக்கப்பட்டிருந்த சவர்க்காரத்தை எடுத்தாள். சவரம் செய்யும் ஒரு "பிளேட்" போல அவ்வளவு மெல்லிதான நிலைக்கு சவர்க்காரம் வந்துவிட்டது. சவர்க்காரத்தை இலையினால் சுற்றித்தான் வைப்பாள் அவள். துணி துவைக்க, குளிக்க எல்லாம் ஒரே சவர்க்காரம்தான். கொஞ்சம் ஆபத்தான கிணறு. கால்வைக்கும் இடத்தில் மிதி போடப்பட்ட கட்டை இற்றுப்போய் விட்டது. கிணறு தண்ணீர் வற்றும் நாட்களில் கிணறு ஆழப்படுத்தப்படும்போது செல்லமுத்து, கண்ணா ஆகியோர் சேறு அள்ள உதவி செய்வார்கள்.

அந்தக் குடிசைக்குள் இரண்டு பேர்தான் கால் நீட்டி படுக்க முடியும். அதனால் செல்லமுத்து குடிசைக்கு வெளியேதான் படுப்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளித்துவிட்டு வந்து சாப்பிட்டாள். இரவு 10.45 மணியாகிவிட்டது. வெட்டப்பட்ட இரண்டு உரப்பைகளை முற்றத்திலே விரித்தாள். அதில் படுத்த செல்லமுத்து கண் மூடியவுடனேயே தூக்கத்தின் உச்சத்திற்கு போய்விட்டாள். முற்றத்திலேயே கடுதா நாயும் படுத்துக்கொள்ளும். தூக்கம், பசி இந்த இரண்டும் எத்தனை அத்தியாவசியமானது. பெரும் பெரும் பணக்காரர்களெல்லாம் எவ்வளவு உழைத்தும் சாப்பிடுவதற்கு பசியின்றியும், தூங்கப் போனால் தூக்கம் வராமலும் குழப்பத்திற் குள்ளாகி விடுகிறார்கள். பணக்காரர் பலருக்கு கொடுக்காததை கடவுள் ஏழைகளுக்கு நிறைய கொடுத்திருக்கிறார்.

நள்ளிரவு 12.45 இருக்கும். வான வெளியிலே வெளவால்களின் பறப்பு தெரிகின்றது. விண்ணாங்கு மரத்திலே மின்மினிகள் கண்சிமிட்டு கின்றன.

"ஏய்... ஏய்..." யாரோ செல்லமுத்துவை தட்டுகிறார்கள். அவள் நித்திரை உச்சத்தில் இருப்பதால் அது அவளுக்குப் புலப்படவில் லையோ. காலை ஐந்து மணியிலிருந்து ஓடி ஓடியே திரிந்த தேகமல்லவா செல்லமுத்துவின் தேகம். "ஏய்... செல்லா... செல்லா..." குரலுக்கு சம நேரத்தில் அவளை சற்று மெதுவாக கட்டிப் பிடிப்பது அவளால் உணரப்படுகிறது. "ச்...சீ...." அந்தக் கையை வேகமாக தட்டியபடியே சுறுக்கென்று எழுந்தாள் செல்லமுத்து. தூக்கக் கலக்கம் அவள் கண்களை நிரப்பியிருக்கிறது.

"அட... நீங்களா...?" அந்த இரவிலும் முக மலர்ச்சியோடு காளியப்பனை பார்த்தாள் செல்லமுத்து. எத்தகைய சூழ்நிலையிலும் கட்டிய கணவனை வெறுப்போடு பாராது விருப்போடு பார்க்கும் பக்குவம் சில பெண்களால் மட்டுமே முடிந்திருக்கிறது.

"மெதுவா கதை செல்லா. கண்ணா எழும்பீரப் போறான்" முற்றத்தில் விரிக்கப்பட்ட உரப்பையில் இருந்தபடி காளியப்பன் சொன்னான். செல்லமுத்துவை அவன் "செல்லா" என்றுதான் அழைப்பான்.

"என்னாங்க இந்த நேரத்துல ஏதும் வருத்தமாங்க"

"உள்ளுக்கு படுக்க எனக்கு ஒருமாதிரி இருந்திச்சி செல்லா. அதான்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியபடியே அவளை அணைத்தான் காளியப்பன். கட்டிய கணவனின் காம லீலைகள் புரியாத மனைவி இருப்பாளா? அவனின் எண்ணத்தை புரிந்துகொண்ட செல்லமுத்து, "ஏங்க வேணாம்ங்க. ஒடம்பு வலியா இருக்கு. நா சொன்னா நீங்க கேப்பீங்கதானே" அவன் தாடியை தடவினாள் செல்லமுத்து. அவள் குளித்து சுத்தமாக வந்து படுத்திருக்கிறாள். அவனோ மதியம் வீட்டை விட்டுப்போய் கள்ளுக் குடித்து, பீடி குடித்து முகம்கூடக் கழுவாமல் ஒருவித துர்நாற்றத்தோடு இருக்கிறான்.

"ம்... என்ன செல்லா..." குழந்தை போலானான் காளியப்பன். களத்திலே வீரம் பேசும் மகாராஜாக்கள்கூட கட்டிலிலே சிணுங்கும் குழந்தையாவது உலக வழமைதானே. பறவைகள், விலங்குகள் அந்த விசயத்திற்கு சரியான நேரம் ஒதுக்கியிருக்கின்றன. மனிதஜாதி ஒன்றுதான் இதில் காலநேரம் பார்க்காதது.

அவள் வேணாம் என்றால் போல காளியப்பன் விடவா போகின்றான். எந்த நோக்கத்தோடு நித்திரையில் கிடந்த அவளை எழுப்பினானோ அதை அடைந்தே விட்டான். பகல் முழுவதும் அவனின் வயிற்றுப் பசி தீர்க்க உழைக்கும் செல்லமுத்து இரவிலே கால நேரமின்றி அவன் உடற்பசியையும் தீர்க்க வேண்டும். எந்தவித சுவராசிய இன்பங்களும் இன்றி அவளில் தன் இச்சையை ஒன்றரை நிமிடங்களிலேயே தீர்த்தான் காளியப்பன்.

விடிகாலை நான்கு மணி இருக்கும். திடீரென மழை தூறுகிறது. வெளியே படுத்திருந்த செல்லமுத்து உரப்பையையும் எடுத்துக் கொண்டு குடிசைக்குள் போய்விட்டாள். அங்கே மூன்று பேர்களும் படுக்க நெருக்கடி. ஒரு மூலைக்கப்போடு சாய்ந்துகொண்டாள். எல்லோரும் எழும்பித்தான் சரியாக இடம் ஒதுக்கி படுக்க வேண்டும். அவள் யாரையும் தொந்தரவு செய்யவில்லை. விடியும் வரை விழிப்புத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04

பாட்டாளிபுரம் கிராமமும், சேனைபுரம் கிராமமும் ஒரு காலத்தில் ஒன்றாக இணைந்திருந்தவைதான். சேனைபுரம் எனும் பகுதியில் வாழ்வோர் கொஞ்சம் வசதியானவர்கள். சேனைப்பயிர்ச்செய்கைக்கு ஏற்ற மண்ணும் நீரும் இங்கு தாராளம். சில பெரியவர்கள் சேர்ந்து அந்தப்பகுதியை பிரித்து சேனைபுரம் என மாற்றிக் கொண்டார்கள். அன்று முதல் பாட்டாளிபுரத்திற்கு சேர வேண்டிய நிறைய பொது வசதிகள் சேனைபுரத்திற்குள்ளேயே தரித்தன. சேனைபுரத்தில்தான் பாடசாலை இருக்கிறது. அப்பள்ளிக்குத்தான் பாட்டாளிபுர மாணவர்களும் போவார்கள். செல்லமுத்துவின் மகன் கண்ணாவும் அதே பள்ளிக்கே போவதுண்டு.

வயல்களும் காடுகளும் கைகுலுக்கிக் கொள்ளும் வனப்புமிகு கிராமம். வயல்களை ஊடறுத்து எந்நேரமும் “சல” “சல” என வாய்க்கால் தண்ணீர் ஓடிக்கொண்டே இருக்கும். சேனைபுரத்திற்கு வருகின்ற கூலித்தொழிலாளர்கள் வேலை முடிந்ததும் மாலை வாய்க்காலின் குளிர்ந்த நீரில் குளித்துவிட்டுதான் போவார்கள். நீர்த்தட்டுப்பாடு உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயல் கிராமத்தவர்களுக்கு அது ஒரு "நயாகரா" என்று தான் சொல்ல வேண்டும்.

சேனைபுரத்தில் இராச ஆலமரம் என்ற பெரிய ஆலமரத்தின் அருகோடு இருக்கும் கல் வீடுதான் சிங்கராயர் வீடு. ஊரிலே மதிக்கப்படும் ஒரு மனிதன். பெரிய கல்வீடு என்றோ, வசந்த மாளிகை என்றோ வர்ணிக்கக்கூடியதில்லை. சேனைபுரம், பாட்டாளிபுரம் கிராமங்களைப் பொறுத்தவரை சிங்கராயர் வசதியான குடும்பத்தவர். மாடுகளும், வண்டிலும் இருப்பவர்கள்தான் ஊரில் வசதியான வர்களாக பார்க்கப்படுவர்.

சிங்கராயரிடம் நெல்லு மூடைகள் ஏற்றத் தகுந்த, தூர இடத்து பிரயாணத்திற்குமான ஒரு மாட்டு வண்டில் இருக்கிறது. வீட்டோடு சேர்ந்தே வயலும் இருக்கிறது. வேலியில் செவ்வரத்தைச் செடிகள். கோழி, மயில் எல்லாம் வளர்க்கின்றார். பன்றி பல குட்டிகள் ஈனும் சிங்கம் ஒரு குட்டிதான் ஈனும் என்பது போல சிங்கராயருக்கும் ஒரு பிள்ளைதான். கண்மணி என்று தன் கண்மணிக்கு பெயர் இட்டிருக்கிறார். பதினாறு வயது முடியும் பருவத்தை எட்டிக்கொண்டி ருக்கிறாள் கண்மணி. பாட்டாளிபுரம் சேனைபுரத்தை பொறுத்தவரை பதினைந்து வயதிலேயே அதிகமானோர் திருமணம் செய்து விடுவார்கள்.

பதினெட்டு வயது என்பது அவர்களின் முதற்குழந்தை நடக்கும் வயதாகவே இருக்கும். நிறையப் பேர் படித்துக் கொண்டிருக்கும் போதே படிப்பை நிறுத்தி விட்டு திருமணத்தை அரங்கேற்றி விடுவார்கள்.

கண்மணியின் கல்யாண விசயம் பற்றிப் பேச முற்படுகையில்தான் அவளின் காதல் விசயம் வீட்டுக்கு தெரிய வந்தது.

அதிகாலை ஆரம்பிக்கும் போதே சிங்கராயரின் மனைவி மங்களம் நடுராத்திரியில் யோசித்த முடிவினை வார்த்தை வடிவில் அரங்கேற் றினாள். "கண்மணி நீ நேரத்துக்கு எழும்பி கிழிச்சது போதும். இன்னும் கொஞ்ச நேரம் தூங்கு. நா முடிவு எடுத்திட்டேன்டீ. இனி நீ படிக்க போக வேணா. வேகமா ஒன்னய மாரியம்மா கோயிலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL
274157

காளிராசா பையனுக்கு கட்டி வெச்சிட்டென்னா என்னோட தலையிடி முடிஞ்சி போயிரும்டீ" இதை பேசி முடித்த மங்களத்திற்கு ஏதோ குமட்டிக்கொண்டிருந்ததை வாந்தியாக வெளியேற்றிய திருப்தி.

அதிகாலையோ, அர்த்த சாமமோ சத்தமிட்டுப் பேசுவதை சாமர்த்தியமாக நினைக்கும் பெண்களில் மங்களமும் ஒருத்தி. வெளியே வேப்பங்குச்சியினால் பல் துலக்கிக் கொண்டிருந்த சிங்கராயருக்கு அது கேட்டு விட்டது. ஒரு கையில் வைத்திருந்த பற்பொடியை தட்டி காற்றிலே பறக்க விட்டுவிட்டு வெண்கல செம்பில் இருந்த தண்ணீரால் வேகமாய் வாய் கொப்பளித்து விட்டு அதே வேகத்தோடு வீட்டினுள் நுழைந்தார்.

"ஏம்... மங்களம் ஒனக்கு புள்ளையோடு எது கதைக்கணும் எது கதைக்கக்கூடாதுன்னு தெரியாதா? காலங்காத்தால இப்படி கத்துறே" தனக்கேயுரிய அமைதியான தொனியில் அழுத்தமாக சொன்னார் சிங்கராயர்.

"ஆமா இதுவும் கேப்பீங்க. இதுக்கு மேலையும் கேப்பீங்க. செல்லமுத்துவோட பையன் கண்ணாவோட இவ கதைக்கிறாளாம். தெரிஞ்சி மூணு நாளாகுது. மூணு நாள்ல என்னத்த செஞ்சி கிழிச்சீங்க. பொம்புளமாதிரி வூட்டுக்குள்ளேயே இருக்கிறீங்க. பாட்டாளிபுரம் போயி அந்த காளியப்பன்கிட்ட, இல்லாட்டி செல்லமுத்துகிட்ட நாலு கேள்வி கேட்டு ஒரு முடிவு கட்டுறதுக்கு என்னவாம். இந்த கோவமெல்லாம் அங்க வராதோ.." தனக்கேயுரிய சத்தத்தோடு சீறினாள் மங்களம். பேசத்தெரிந்து விட்டால் எந்தப் பெண்ணும் இராணிதானே. பேசத்தெரியா எந்த ஆணும் குடும்பத்தில் ஆண்டிதானே. பேசிக்கொண்டிருக்கும்போதே சில கோழிகள் வீட்டினுள் நுழைந்து விட்டன. கோழிகள் வீட்டினுள் வந்து குசினி மட்டும் சென்று வருபவை.

"மெதுவா பேசு மங்களம், கண்ணாவுக்கும் கண்மணிக்கும் அப்படி இப்பிடீன்னு நீயே ஊருக்கு தம்பட்டம் அடிச்சுருவ போல. நீ ஒரு தாயிங்கிறத மறந்துபுடாத. முள்ளில சேலை விழுந்திச்சினாலும் சேலைல முள்ளு விழுந்திச்சினாலும் சேலைக்குத்தானே சேதம். நாம பொண்ணை வெச்சிருக்கிறவங்க. அவதானமா இத பார்க்கணும்.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வீக பிரசங்கம் போல அமைதியாகவே சொன்னார் சிங்கராயர். இரத்தம் சூடாகி விடும் போது ஆணோ, பெண்ணோ வார்த்தை யையும் சூடாக்கி விடுகின்றார்கள். மங்களத்திற்கு இரத்தம் சூடாகியி ருக்கிறது. இந்தக் காதல் விசயத்தை வேகமாகவே கரைத்துவிட வேண்டும் என்பது மங்களத்தின் தெளிவான உறுதி.

மங்களம் எப்போதும் தன்னையும் தன் குடும்பத்தையும் பிறரை விட உயர்வாகவே நினைப்பவள். வீட்டைப் பொறுத்தவரை மகாராணி ஆட்சிதான். சிங்கராயர் என்று பெயர் இருந்தாலும் சிங்கராயர் குடும்பத்தின் முக்கிய முடிவுகளை மங்களமே எடுப்பாள். "சிங்கராயரோட மனசுக்கு மங்களம் எப்படித்தான் பொம்பளையா வாச்சாளோ" என்று அயலிலுள்ள பாட்டாளிபுரத்தில் கூட பேசுவார்கள். ஊரில் ஒன்றிரண்டு கடைகள்தான் உள்ளன. அங்கு ஏதும் சாமான்கள் வாங்குவதற்கு மங்களம் போனால் ஒரு பொருளுக்கு அப்படி விலை இப்படி விலை என கடைக்காரரை அறுத்து எடுத்து விடுவாள். "ஓங்க வெலைக்கே எடுங்கம்மா" என கடைக்காரர் கொடுத்து விடுவார்.

"அப்பா, நா பள்ளிக்கு போப்போறம்ப்பா...." கண்மணி தளதளத்த குரலில் கேட்டாள். "போக வேண்டாம்" என மங்களம் சொன்ன நிலையில், தான் வேறு முடிவு எடுத்தால் மங்களம் கொஞ்சம் பொங்கி விழுவாள் என சிங்கராயருக்குத் தெரியும். கேட்ட மகளுக்கு நல்ல முடிவு சொல்லாமல் விட்டாலும் மகளை சமாளிக்க முடியாது.

"மங்களம் அவளுக்கு சோதனை இருக்கு..." என்று மெதுவாக ஒரு போடு போட்டார். இந்தக் காதல் விசயத்தினை தனக்குரிய வழியில் அணுக மங்களம் திட்டமிட்டாள். சேனைபுரத்தின் "மாந்திரீக சக்கரவர்த்தி" என புகழ்பெற்ற மயிலுவிடம் சென்று மாந்திரீக வழியில் ஒரு முடிவு எடுப்பதே அவள் முடிவு. இப்போது எதையும் குழப்பாமல் "போயி வடிவா சோதனை எழுது அதிலேயும் கோட்ட விட்டுடாத" அக்கறையாய் சொல்வது போல மங்களம் சொன்னாள். "என்னோட கவுரவத்தையா விக்கப்பாக்கிறே. விட மாட்டேன்டீ..." மனதிலே கருவினாள் மங்களம். கண்மணி தன் மகள். அவளிடம் அன்பாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி இந்தக் காதல் விசயத்தை சரியான வழியில் அணுக ஏனோ மங்களத்திற்கு தெரியவில்லை.

மகளிடமும் தன் அகந்தையை காட்ட வேண்டும் என்று அவள் அடிமனதில் எண்ணம். நேற்றிரவு கூட கண்மணியிடம் மங்களம் கேட்டிருந்தாள். "கண்மணி ஏங்கிட்ட மறைக்காத பாட்டாளிபுரம் செல்லமுத்து பையனோட என்னடி தனிய எல்லாம் கதைக்கிறே. எனக்கு எல்லாமே தெரியும்டீ. ராக்காயி பொண்ணு மாதிரி ஓடிப்புடாத. மயிலுக்கிட்ட போயி மாந்திரீகம் செஞ்சே பிரிச்சுருவேன். ஆமா சொல்லு அவேங்கிட்ட அப்புடி என்ன பேசுறே" வெருட்டலாகவே மங்களம் பேசிய போது "ஆமாம்மா மயிலு சாத்திரிக்கிட்ட போயி நா சாகணும்னு மந்திரம் செய்யி. ஒனக்கு அதுதானே சந்தோசம்" என்று கண்மணி மெல்லிய கண்ணீர் வர சொல்லியிருந்தாள். தனக்கு எதிர்க்கதை கண்மணி சொல்லி விட்டாள் என்ற வெறுப்பு இரவே தாய் மங்களத்திற்கு பதிந்து விட்டது. ஏதோ மோசமாக பேசுவதற்கு மங்களம் முற்படுகையில், மாடுகளை கட்டிய சிங்கராயர் வீட்டினுள் நுழையவே அந்தக் காட்சி முடிந்து விட்டது. இரவு தூக்கமே இல்லாமல் இது பற்றியே யோசித்தாள் மங்களம்.

கண்ணாவுடன் கதைப்பது பொய்யென்றால் "அப்படி இல்லம்மா.." என்று கண்மணி எடுத்த எடுப்பிலேயே சொல்லி இருக்கலாந்தானே என்று நினைத்தாள் மங்களம். சிங்கராயரோ, மகளோ தனக்கு எதிர்ப்பேச்சு பேசுவதையோ விவாதம் செய்வதையோ மங்களம் விரும்புவதில்லை.

சேனைபுரம் பாடசாலை போகும் வழி சிறு பற்றைகள் நிறைந்தது. சேனைபுரமும் பின் தங்கிய கிராமம்தான். ஆனால் பட்டாளிபுரத்தை விடவும் முன்னுக்கு நிற்பது. பள்ளிக்குப் போகும் வழியில் பற்றைப் பாதையருகில் ஒரு புளியமரம் உண்டு. கருங்கல் சாமி கூட அதன் கீழே உள்ளது. அந்த மரத்தின் கீழேதான் கண்ணாவும், கண்மணியும் அப்பப்போ பேசுவதுண்டு.

இருவரும் பத்தினோராம் வகுப்பு. புளியமரத்திற்கு சற்றுத் தள்ளியுள்ள குடிசையில் இருக்கும் முனியம்மாதான் சில நாட்கள் இவர்கள் பேச்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்தவள். அவள் சிங்கராயர் வீட்டுக்கு நெல் குற்றப்போகின்ற போது இந்த சேதியை மங்களத்தின் காதிலே போட்டு விட்டாள். இதை மங்களத்திற்கு சொல்வதால் தனக்கு ஏதும் கிடைக்கும் என்ற எண்ணம் முனியம்மாவுக்கு இருந்தது.

பள்ளிக்கூடம் போகும்போதே பல வித எண்ணங்களுடன்தான் கண்மணி போகின்றாள். வழமையாக நடந்துதான் பாடசாலை போவதுண்டு. சேனைபுரம் பாடசாலையில் தரம் பதினொன்று வரை வகுப்புக்கள் உள்ளன. சேனைபுரம், பாட்டாளிபுரம் தாமரைக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்களே இங்கு படிக்கின்றார்கள். பதினோராம் வகுப்பு வரை படித்தால் "பெரிய படிப்பாளி" என்று ஊரில் உள்ளவர்கள் பேசுவார்கள்.மூன்று கிராமத்தையும் சேர்த்து பதினோராம் வகுப்பிலே படிப்பது ஆறு பேர்கள்தான். நகரில் இருந்து ஆசிரியர்கள் வருவார்கள். ஊரில் ஒரு தமிழ் ஆசிரியர் இருக்கின்றார்.

கண்மணி வீட்டிலிருந்து நான்காவது வீட்டிலே இருக்கும் காமாட்சியின் மகள் தங்காவும் கண்மணியுடன் படிக்கிறாள். வழமையாக அவளையும் கூட்டிக்கொண்டுதான் பாடசாலை செல்வாள் கண்மணி. இருவருமாக கதைத்து கதைத்து நடந்தால் இருபது அல்லது இருபத்தைந்து நிமிடங்களில் பாடசாலை போய்ச்சேர்வார்கள். பற்றைப் பாதையின் இடையிலிருக்கும் புளியமரம் இவர்களுக்காகவே பழங்களை கீழே போட்டிருக்கும். போகும் போதே ஒன்றிரண்டு பொறுக்கி சாப்பிட்டபடி போவார்கள். பள்ளி போய் வருவது இருவருக்கும் அழகிய யாத்திரை தான். மாரி காலம் என்றால் போகும் வழியில் பள்ளமான இடங்களில் நிறையவே தண்ணீர் தேங்கியிருக்கும்.

"ஏய் வேகமா வாடி.. பள்ளிக்கு நேரமாச்சு..." தெருவில் நின்றே தங்காவை கூப்பிட்டாள் கண்மணி. "கண்மணிம்மா மக முன்னுக்கே பள்ளிக்கு நடக்கத் தொடங்கிட்டாம்மா நீ போம்மா.." சம்புப் புல்லிலான குடிசைக்கு வெளியே வந்து காமாட்சி சொன்ன போது கண்மணிக்கு எதுவுமே புரியவில்லை. வழமையாக இத்தனை வருடமாக ஒன்றாக பள்ளிக்கு வருபவள் இன்று மட்டும் அவளுக்கு என்னவாயிற்று?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவித குழப்பங்கள் கணப்பொழுதில் கண்மணிக்கு வந்து போயின.
"ஏங் காமாட்சிக்கா அவ என்னய விட்டுட்டுப்போனா...?"

"ஏதோ சோதனை இருக்காம்மா... அதான்.."

"சரி காமாட்சிக்கா நா வர்றேன்.." என்றபடியே நடக்கத்தொடங்கினாள் கண்மணி. காமாட்சியின் கடைசிக் குழந்தையின் அழுகையொலி தெருவிற்கும் கேட்கிறது. கண்மணியின் குழப்பம் தீர்ந்த பாடில்லை. பாடசாலையில் வைத்து தங்காவோடு ஒரு சண்டை போட வேண்டும் என்பதில் குறியாகவே நடக்கிறாள்.

புளியமரத்திற்கு அருகாக பாட்டாளிபுரம் செல்லும் ஒற்றையடிப் பாதை இருக்கிறது. சேனைபுர பாடசாலைக்குச் செல்லும் பாட்டாளிபுர மாணவர்கள் இந்த ஒற்றையடிப் பாதையால்தான் வருவார்கள். கண்ணாவும் அந்தப் பாதையால்தான் வருவான். கண்மணிக்கு முதலே கண்ணா அந்த புளியமரத்தடியை கடந்து பாடசாலைக்கு சென்றிருந்தால் ஒரு நாயுண்ணி கிளையை முறித்துப் போட்டுவிட்டுப் போவான். இன்று அந்த சந்தியில் சுற்றும் முற்றும் பார்த்தாள் கண்மணி. நாயுண்ணி கிளை எதையுமே காணவில்லை. "இவனும் தங்கா போல ஏதும் கிறுக்கு வாக்குல போனானோ..." என புலம்பியவாறு பள்ளிநோக்கி விரைகிறாள்.

எட்டு மணிக்குத்தான் பாடசாலையில் காலைப் பிரார்த்தனை தொடங்கும். பாடசாலை வளவிலுள்ள விரிந்த பாலை மரத்திற்கு கீழே தான் பிரார்த்தனை.

கண்மணி தன் வகுப்பிற்குள் நுழையும் போது அங்கே இருந்தது தங்கா மட்டுமே. பதினோராம் வகுப்பிலே படிக்கும் மிகச் சிலர் கூட ஒழுங்காக பாடசாலை வருவதில்லை. சில பெற்றோர்களே, வீட்டிலே சின்ன வேலைகள் என்றால் கூட அவர்களை நிறுத்தி விடுவார்கள்.

"ஏன்டி என்னய விட்டிட்டு வந்தே.." வகுப்பினுள் நுழையும் போதே கேட்டாள் கண்மணி. ஓலையால் வேயப்பட்ட சுவரில்லாத பாடசாலை மண்டபத்தினுள் காற்று தாராளமாகவே வந்து போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கேக்கிறேன் தானேடி தங்கா வாய தொறந்து சொல்லேன்டீ ஒனக்கு வேற வகுப்பு எனக்கு வேற வகுப்பா...”

“எனக்கு பயமாக இருக்குடீ இது எங்க போயி முடியுமோ தெரியல..”

“எனக்கு என்னன்னு சொல்லேன் நீ என்னைய விட்டிட்டு போயிட்டேன்னு தெரிஞ்சவுடனேயே நெனச்சேன் ஏதோ கசமுசா நடந்திரிச்சின்னு. சொல்லு நாம ரெண்டு பேருதானே இருக்கோம்..“

“நேத்து பின்னேரம் ஓங்கட அம்மா எங்க வீட்டுக்கு வந்தாங்க. எங்க அம்மாக்கிட்ட தாறுமாறா என்னய பத்தி பேசினாங்கடீ. நீயும் பாட்டாளிபுர கண்ணாவும் காதலிக்கிறதுக்கு நான் தானாம் ஒதவி பண்ணுறனாம் அது இதுன்னு அம்மாக்கிட்ட போட்டு குடுத்தாங்கடி. நா பயத்துல வெளிய வரல. வீட்டுக்குள்ளேயே இருந்திட்டேன்டி. அதான் அம்மா என்னய தனிய பள்ளிக்கு போக சொன்னாங்க..”

கண்மணிக்கு விசயம் தெளிவாகியது. தனது காதல் விசயத்தை தன் அம்மாவே ஊருக்கு இலவச விளம்பரம் செய்வதை நினைக்க அவளுக்கு அழுகை வந்தது. இந்த விசயம் எப்படி அம்மாவுக்கு போனது என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை.

ஐந்து நாட்களுக்கு முன்பு வீதியோர புளியமரத்திற்கு கீழே கண்ணாவும் கண்மணியும் பேசிக்கொண்டார்கள். சற்றுத்தள்ளி நின்ற தங்கா யாரும் வருகிறார்களா? என நோட்டம் விட்டாள். இதை குடிசையில் இருக்கும் முனியம்மா கண்டு விட்டாள். தங்காவின் பெயரையும் முனியம்மா தான் மங்களத்திற்கு சொல்லியிருந்தாள். இது தெரியாததால் கண்மணிக்கும் தங்காவுக்கும் ஒரே குழப்பம் எப்படி இந்த விசயங்கள் வெளியானதென்று.

“தங்கா எனக்கு இருக்கிற ஒரே கூட்டாளி நீதான்டீ. எங்க அம்மாகூட என்னோட சரியா பேச மாட்டாங்கன்னு ஒனக்கு தெரியும் தானேடீ. அவங்க அத இத சொல்லுறாங்கன்னு நீ என்னய வெறுத்திடாதடீ. காலில் விழாத குறையாக கண்மணி கேட்டபோது அவளுக்கு இன்னும் அருகாக வந்தமர்ந்தாள் தங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனைபுர பாடசாலையின் வகுப்புக்கள் யாவும் இப்போதும் பாயிலே தான். பெரிய வகுப்புக்களுக்குக் கூட கதிரை மேசைகள் இல்லை. இப்போது தான் குறிப்பிட்டளவு கதிரை மேசைகள் வேலை நடக்கிறது. எல்லா மாணவர்களும் பாய் அல்லது விரிப்புக்களில் இருந்தே கற்கிறார்கள். புதிதாக ஒரு கொட்டகை வேய்ந்து கொண்டிருக்கி றார்கள். இதனால் சில வகுப்புக்கள் பாலை மரத்தின் கீழேயும், அத்தி மரத்தின் கீழேயும் தான் நடக்கின்றன.

"அடியே நா ஒன்னய வெறுக்க மாட்டேன்டீ. எத்தன நாள் நா பசியால வந்தப்போ எனக்கும் சேர்த்து சாப்பாடு கொண்டு வந்து தந்திருக்கிறே. ஒங்கம்மா அப்பாக்கிட்ட வேற தேவைகள சொல்லி எனக்காக காசு வாங்கி சோதனை காசு தந்திருக்க. இந்த செருப்புக்கூட நீ வாங்கி தந்ததுதானேடீ"

"வேணா தங்கா இதெல்லாம் சொல்லி என்னய கொல்லாத.."

"ஒனக்கே தெரியும் தானே எங்கப்பா தொடர்ந்து ஒங்க வயலில வேலை செய்யிறவரு. வயல் செய்யிறது ஒங்க அப்பான்னாலும் ஒங்கம்மா முடிவு எடுத்தா எங்கப்பாவ வேலையிலேர்ந்து நிப்பாட்டி டுவாங்க. திருப்பி நம்ம குடும்பப்பாடு பிச்சையில தான்டி போகும். அதான்டீ நா பயந்தேன்.."

"சீ..அப்புடி வராதுடீ. இந்த கண்ணா பய ஏன்டீ இன்னிக்கு பள்ளிக்கு வரல்ல.."

"ஏதும் காய்ச்சல் கீச்சல் இருக்குமோ..."

இப்படி தங்கா சொன்ன போது "டங்" "டங்" என பள்ளி மணியோசை கேட்டது. மணியடித்த நேரம் பார்த்து வியர்க்க வியர்க்க ஓடி வருகிறாள் பதினோராம் வகுப்பில் படிக்கும் முத்துலட்சுமி. கண்மணி, தங்கா, முத்துலட்சுமி மூவரும் சேர்ந்தே இன்று எல்லோருக்கும் தேவாரம் சொல்லுவார்கள். முத்துலட்சுமி வந்திராவிட்டால் பத்தாம் வகுப்பு ஒரு மாணவியை சேர்த்து மூன்று பேராக சொல்லிக் கொடுத்திருப்பார்கள். மூன்று பேர் தேவாரம் சொல்லிக் கொடுப்பதே வழமை. கிறிஸ்தவர்களும் படிப்பதால் அவர்களும் தனியே தொழுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தப் பெண்ணுக்குள்ளும் காதல் புகுந்து விட்டால் அவளுக்குள் ளிருக்கும் வேறு விடயங்கள் வெளியேறி விடுகின்றன. திரும ணத்திற்கு வயது போட்ட சட்டம் காதலுக்கு போடாதது ஏனோ? மாணவர்கள் காலை பிரார்த்தனைக்கு வரிசையாகி விட்டார்கள். தேவாரம் சொல்லிக் கொடுத்த கண்மணி முன்னுக்குப் போனாலும் கண்ணாவின் நினைவு அவளை திசை திருப்பவே பார்க்கிறது.

ஏழைக்குடும்பத்திலே பிறந்திருந்தாலும் கண்ணா படிப்பிலே காட்டும் ஆர்வம் தனித்துவமானது. விடுமுறை நாட்களில் பாட்டாளிபுரத்தில் இருந்து சேனைபுரம் நடந்து வந்து அங்கிருந்து பள்ளிக்குடியிருப்பு நோக்கி நடந்து அக்கிராமத்து ஆசிரியர் ஒருவரிடம் பாடம் கற்பான். அவரும் அவனுக்கு ஆர்வத்தோடு சொல்லிக் கொடுப்பார். பாட்டாளி புரத்திற்கும் பள்ளிக்குடியிருப்பிற்கும் ஆறு மைல்கள் தூர இடைவெளி. இந்தப் பள்ளி வயதிலே காதல் கொண்டது என்பது அவனைப் பொறுத்தவரை ஒரு விபத்து மாதிரி தான். அவனின் வயதுடையோர் எத்தனையோ பேர் திருமணமாகி இருக்கும் கிராமத்திலே அவன் படிப்பது என்பதே பாட்டாளிபுரத்தை பொறுத்தவரை ஓர் ஆச்சரியம் தான். இப்படியெல்லாம் கல்வியை நேசிக்கும் கண்ணா ஏன் இன்று வரவில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

# 05

வள்ளுவரின் குறள்களைப் போலவே குறுகியது. ஆனால் அழகானது வள்ளுவர்புரம். இந்தக் கிராமத்துக்குள்ளே செல்லமுத்து, வள்ளி உட்பட ஆறு பேர்கள் நுழைந்து விட்டார்கள்.

நெல்லுமணி பொறுக்குவதற்கு அவர்கள் செல்ல வேண்டிய வயல்வெளிகளுக்குப் போகும் பாதையில் சிரித்துப் பேசியபடியே நடக்கிறார்கள். ஒவ்வொருவர் கைகளிலும் நெல்லு பொறுக்குவதற்காக ஒவ்வொரு விதமான பைகள். செல்லமுத்துவிடம் ஒரு பழைய உரப்பை இருக்கிறது. பாட்டாளிபுர பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் இப்படி ஏதோவோர் வேலைகள் நிமித்தம் ஒன்று சேரும்போது கதைத்துப் பேசினால்தான் உண்டு. ஏனெனில் ஒவ்வொரு பெண்களும் பகலில் எங்காவது வேலைக்குச் சென்றுவிட்டு மாலை வீடு திரும்பினால் சமையல், குழந்தைகள் பராமரிப்பு, பிற வீட்டு வேலைகள் என நேரம் போய் விடும். அந்த வேலைகளுக்கே நேரம் போதாது எனும்போது சேர்ந்து அரட்டை அடிக்கவா நேரம் கிடைக்கப்போகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று பாட்டாளிபுரத்திலிருந்து விடிகாலை ஐந்தரை மணிக்கு நடக்கத் தொடங்கினார்கள். கிட்டத்தட்ட பாட்டாளிபுரத்திலிருந்து வள்ளுவர்புரம் ஐந்து மைல்கள் தூரம் வரும். இவ்வளவு தூரமும் நடக்கும்வரை ஊரின் எல்லா குடும்பங்களைப் பற்றிய பேச்சும் வந்து போனது. நேற்றிரவு பாட்டாளிபுர அம்மன் கோயிலில் பொன்னுக்கா சாமி ஆடி சொன்ன விசயங்களும் இந்த நடைவேளை கதையிலே இடம் பெற்றன.

காலை, நேரத்துக்கே நெல்லு பொறுக்கத் தொடங்கி எப்படியும் இரண்டு அல்லது மூன்று மணிவரை பொறுக்கிவிட்டு திரும்ப நடந்தால்தான் பொழுது படுவதற்குள் பாட்டாளிபுரம் போய்ச் சேரலாம். நெல்லு பொறுக்கப் போகும் ஆறு பெண்களில் செல்லமுத்துவிடம் மட்டுமே சாப்பாடு இல்லை. மிகுதி ஐந்து பேரும் கட்டுசாதம் கொண்டு வருகிறார்கள். செல்லமுத்து காலை நான்கரை மணிக்கே எழுந்து கூட்டுவது, தண்ணீர் அள்ளுவது உட்பட்ட வேலைகளை செய்துவிட்டு தேநீர் ஊற்றி கண்ணாவுக்கும், காளியப்பனுக்கும் கொடுத்தாள். இருந்த கொஞ்ச சீனியில் அவர்கள் இருவருக்கும் சீனியை கலந்து தேநீர் கொடுத்துவிட்டு அவள் சீனியை நக்கித்தான் தேநீர் குடித்தாள். நேற்றிரவு தாமதித்தே படுத்தாள். இடையில் காளியப்பனின் லீலைகள் வேறு. என்னதான் தாமதித்து உறங்கப்போனாலும் நான்கரை மணிக்கு எப்படியோ எழுந்து விடுவாள்.

இதோ வயல்வெளிகள் தெரிகின்றன.

வயல்வெளிகளுக்குள் நுழைவதற்கு சிறிது தூரத்திலே மெதுவாக ஒரு ஆறு ஓடுகிறது. தூரத்தே மேய்ச்சல் மாடுகள்.

"நம்ம ஊருக்குள்ள இப்டி ஒரு ஆறு இருந்திச்சின்னா நமக்கு தண்ணிப் பிரச்சினையே இல்ல என்னடீ" என சொல்லியபடியே குளிர்ந்த ஆற்று நீரில் கால் வைத்தாள் செல்லமுத்து. ஆற்றின் இரு மருங்கிலும் மருத மரங்கள் மௌனமான இசை மீட்டிக் கொண்டிருக்கின்றன. நடந்து வேர்த்த உடலுக்கு இது ஒரு சொர்க்கமல்லவா ?

"ஆமாடீ நம்ம கிராமத்துக்கு வாய்க்கால் இருக்குதுதானே. அதுக்கு வேண்டிய தண்ணிதானே அணை போட்டு சேனைபுர பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்கால் வழியா போகுது. நம்ம கிராமத்துக்காரங்களும் அத அப்டியே விட்டுட்டாங்கடீ. இல்லாட்டி அந்த வாய்க்கால் தண்ணி நம்ம கிராமத்துக்கு வந்து நம்மட சின்ன ஆமைக்குளத்தில விழும். நமக்கும் தண்ணி கெடைச்சமாறி இருந்திருக்கும். ஊர்த்தலைவர்மார்தான் ஏதாச்சும் பண்ணணும்" சொல்லியபடியே வள்ளி ஓடிக்கொண்டிருந்த ஆற்று நீரினை கைகளால் அள்ளிக் குடித்தாள். எல்லோரும் ஆற்றுத் தண்ணீர் குடித்து முகம் கழுவிக்கொண்டனர்.

"மத்தியானம் சாப்பிட மருத மரத்தடிக்கு வருவோம்டீ தண்ணியும் இருக்குதுதானே" என்று சொல்லியபடியே ஆற்றின் மறுகரை ஏறினாள் சின்னபாப்பா. பதினைந்து அடிவரை அகலமான ஆறு. மாரி காலத்தில் அகல விரிந்து பாயும். இப்போது முழங்கால் அளவு தண்ணீர்தான். எந்த மோசமான கோடையிலும் நீரினை கொஞ்சமாவது வழங்கும் ஆற்றுத் தாய்தான் வள்ளுவர்புரத்தின் ஆறு. அந்தளவு தண்ணீரிலும் வகை வகையான மீனினங்கள் கூட்டம் கூட்டமாக நீர் போகும் பக்கம் பயணிக்கின்றன. சில வளைந்த மரங்கள் ஆற்றின் ஒரு பக்கம் வேரினையும், மறு பக்கம் வரை கிளையினையும் கொண்டு ஆற்றினை நிழல் செய்து நிற்கின்றன. இந்தச் சூழலை பார்த்துத்தான் பூமியில் சொர்க்கம் உண்டு என்று சொன்னார்களோ.

இதோ செல்லமுத்து கதிர்கள் அறுக்கப்பட்ட வயலிலே கால்பதிக் கிறாள்.. இப்படியான ஏழைகள் வருவார்கள் என்றுதான் கதிர் அறுக்கும்போதே நெற்கதிரானது சில மணிகளை சிந்தி விடுகின்றது போல. உரப்பையின் வாய் வழியே சிந்திக் கிடக்கும் நெல்மணிகளை போடத்தொடங்கி விட்டார்கள். ஒரு தடவை குனிந்தால் ஐந்து நிமிடங்கள் வரை தலையை நிமிர்த்தாமலே நெல்லு மணிகளை தேடித்தேடி பைகளில் நிரப்பி விடுகிறார்கள். கொழுந்து பறிக்கும் தேயிலைத் தோட்டத்துப் பெண்கள் போலவே தலைக்கு பல்வேறு துணித்துண்டுகளால் வெயிலுக்கு பாதுகாப்பு.

ஒவ்வொரு தாயும் கறுப்பாக இருப்பது பிள்ளை வெள்ளையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே. நிறைய தாய்மாரின் வயிறு ஒட்டி இருப்பதற்கு காரணம் பிள்ளையின் வயிற்றை அவள் நிரப்புவ தால்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

தான் வரும்போது கொண்டு வந்திருந்த அந்த பழைய பெனியனை அந்த வெயிலிலும் திடீரென எடுத்துப் பார்த்து இரசித்துக் கொண்டிருக்கிறாள் செல்லமுத்து. நெற்றி வியர்வையோடு சேர்ந்து கண்ணீர்த் துளிகளும் வடிகின்றன. அருகிலே நெல்லு பொறுக்கிக் கொண்டிருந்த சின்னப்பாப்பா கேட்டாள். "என்னடி செல்லமுத்து பயித்தியம்மாதிரி பெனியனை பார்த்து கண்ணீர் வடிக்கிறே" என்று. அவள் சொன்னதைக் கேட்டு நெல்லு பொறுக்கிக்கொண்டிருந்த எல்லாப் பெண்களும் இந்தப் பக்கம் பார்வை கொடுத்தனர்.

"அடியே இது ரெண்டு வருசத்துக்கு முன்னாடி எம்புள்ளையோட பொறந்த நாளுக்கு வாங்கின பெனியன்டீ. கோழிமுட்டை சேர்த்து வாங்கிக் குடுத்தது. இப்ப இது அவனுக்கு அளவு இல்லடீ. வூட்ட விட்டு எங்க வேலைக்கு போனாலும் இதை எடுத்துக்கிட்டே போவேன்டீ. இது கண்ணா போட்ட பெனியன். இதை பார்த்துட்டா போதும். கண்ணாவ பாத்த மாதிரியே இருக்கும்" என ஆனந்தக் கண்ணீரோடு சொல்லி முடித்தாள் செல்லமுத்து.

தன்பிள்ளை கண்ணாவிலும், கணவன் காளியப்பனிலும் செல்லமுத்து வைத்துள்ள பாசம் பற்றி பாட்டாளிபுர பெண்களுக்குத் தெரியாதா? தாய்மை உணர்வு என்பது பல பெண்களுக்கு பிறப்பிலே சேர்ந்து விடுகிறது. சில பெண்களுக்கு இடையில்தான் அது கிடைக்கிறது. குறிப்பிட்டளவு பெண்களுக்குத்தான் அது இல்லாமல் இருக்கிறது.

பகல் பதினொரு மணி

செல்லமுத்து தனது உரப்பையின் கால்வாசிக்கு மேல் நெல்லு மணிகள் பொறுக்கி விட்டாள். எல்லாப் பெண்களுமே முயற்சியோடு நிறையவே நெல்லு சேர்த்திருக்கிறார்கள். பல ஏக்கர்களை கொண்ட வயல்வெளி மஞ்சள் நிற சேலைகளை காயப்போட்டது போல் கிடக்கிறது. எல்லா வயல்களிலும் அண்மையில்தான் கதிரறுப்பு முடிந்திருக்கிறது. பல நாட்கள் பொறுக்கக்கூடிய அளவு நெல்லு மணிகள் வயல்களில் சிந்திக் கிடக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரிடீ ஆத்தோர மருதமரத்தடிக்குப் போயி சாப்புட்டிட்டு இளப்பாறீட்டு வருவம்டீ. அப்புறம் ரெண்டு மூணு மணியாச்சும் சரி பொறுக்க ணுமில்லே. அப்பா இடுப்பு நோகுது” சொல்லியபடியே சேலைத்த லைப்பால் வியர்வையை துடைத்தாள் வள்ளி. பாவம் செல்லமுத்து அவள் ஆத்தோரம் போகும் எண்ணத்திலே இல்லை. அவள்தான் சாப்பாடு கொண்டுவரவில்லையே. என்னதான் ஏழையாய் இருந்தாலும் நாணம் என்பது எல்லாப் பெண்களுக்கும்தானே. அவர்களே அவர்களுக்கு அளவாய் தானே உணவு கொண்டு வந்திருப்பார்கள். தானும் அவர்களோடு ஆற்றங்கரை போனால் அதில் பங்குபோட வேண்டி வந்திடுமே என்று அவள் மனது தயங்கியது. அதனால்தான் நெல்லு பொறுக்குவதாகவே தீர்மா னித்தாள். “அடியே எனக்கு பசிக்கலடீ நீங்க சாப்பிடுங்க நா.. பொறுக்றேன்”. என சமாளித்தாள்.

“ஆமா இவ்வளவு வேலை செஞ்சும் பசிக்கலை. எங்களுக்கு தெரியும்டீ. நீ சாப்பாடு கொண்டு வரயில்லை. நாங்க வேற வேற கிராமமாடீ. ஒவ்வொருத்தர் கஸ்ரம் தெரியாதா. ஒனக்கும் சேர்த்து நம்மகிட்ட சாப்பாடு இருக்கு. பைய வைச்சிட்டு ஆத்தங்கரைக்கு கௌம்பு” உரிமையோடு இழுத்தாள் வள்ளி.

கிராமங்களை அழகு எனச் சொல்வது அங்குள்ள இயற்கையை வைத்து மட்டுமல்ல இதயங்களை வைத்தும்தானே. அங்கே “ஹோட்டல்கள்” இல்லை. காசுக்கு உணவு கிடையாது. அன்புக்கே உணவு. உணவுகளில் சுவையூட்டிகள் சேர்க்கப்படாவிட்டாலும் தவறாமல் அன்பு சேர்த்திருப்பார்கள். அதனால்தானே நாகரிகத்தின் பெயர் தெரியா நோய்கள் அங்கே இருப்பதில்லை.

சலசலவென அமைதியாக ஓடிக்கொண்டிருக்கும் வள்ளுவர்புர ஆற்றின் மருதமரத்தின் கீழே எல்லோரும் கூடினார்கள். காலை நடை. இடைவிடாத நெல்லுப் பொறுக்கல் என களைத்திருந்த பாட்டாளிபுரத்துப் பெண்கள் மதிய உணவை மகிழ்ச்சியோடு எடுக்கிறார்கள். செல்லமுத்துவுக்கு எல்லோரும் தங்கள் தங்கள் உணவுகளில் ஒவ்வொரு பிடி கொடுக்கிறார்கள். திருப்தியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டாள் செல்லமுத்து. வழமையாக அவள் மதிய உணவு சாப்பிடாதவள்தானே. சிலவேளை இன்று தனியே நெல்லு பொறுக்குவதற்கு வந்திருந்தால், அவள் ஓய்வின்றி உணவின்றி நெல்லு பொறுக்கித்தானிருப்பாள். செல்லமுத்துவுக்கு வாழ்வில் கிடைத்தி ருக்கும் கொடை எது? இப்படியான கஸ்ரங்களை தாங்கும் வல்லைமைதான்.

மதிய உணவினை எடுத்தாச்சு. தெளிந்த ஆற்று நீரினை குடித்தாச்சு. பின்பு ஐந்து நிமிட ஓய்வு. தொண்டனுக்கும் உண்ட களை இருக்குமே. தூக்கம் அவர்கள் கண்களை தட்டியது. "வாங்கடீ இருந்தா இருந்துகிட்டே இருக்கணும். வேகமா பொறுக்கிட்டு நம்ம கிராமத்துக்கு போகணும். இதுதானே நமக்கு ராவுச் சாப்பாடு" செல்லமுத்து சொல்லும்போதே எல்லாப் பெண்களும் எழுந்து விட்டார்கள். ஆசைக்கு ஆற்று நீரிலே கால்களை நனைத்தார்கள். இவர்கள் போலவே வேறு ஆண்களும், பெண்களும் பல வயல்களில் நெல்லு பொறுக்குகின்றார்கள்.

மீண்டும் வெயிலில் நெல்லு பொறுக்கும் வேலை தொடர்கிறது.

இப்போது மாலை ஐந்து மணி இருக்கும்.

சும்மாடு வைக்கப்பட்டிருக்கும் தலைகளில் நெல்லுமணிப்பைகள் இருக்கின்றன. பாட்டாளிபுர பெண்கள் கிராமத்துள்ளே பிரவேசிக் கிறார்கள். இந்த நெல்லினை எதிர்பார்த்து எத்தனை குடும்பங்கள் இருக்கும்.

செல்லமுத்து மனதிலேயே திட்டம் போட்டபடி நடக்கிறாள். "போனவுட னேயே நமக்கு சோத்துக்கு அரிசி குத்தணும். நாளைக்கும் அரிசி குத்தி இல்லாட்டி நெல்லாவே சரி யாருக்கு சரி கொஞ்சம் விற்கணும். சாந்திக்கா கடை அரிசிக் கடனை அடைச்சிரணும். இன்னிக்கு ராவுக்கு இவருக்கும் புள்ளைக்கும் கஞ்சி சரி வயிராற குடுக்கணும்" இப்படி இந்த நெல்லை வைத்தே பலவித திட்டம். வேக நடை நடந்து ஒரு மணித்தியாலயத்துள் பாட்டாளிபுர கிராமத்தின் குச்சொழுங்கையில் பிரவேசித்து விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமுத்துவின் காணியிலிருந்து இரு காணிகள் முன்னுக்குத்தான் வள்ளி வீடு. கழுத்தை திருப்பி செல்லமுத்துவை பார்ப்பதற்கு இயலாத பாரம் வள்ளியின் தலையை அழுத்துகிறது. ஐந்து மைல்கள் சுமையுடன் நடையென்றால் சும்மாவா ?

"அடியே நா வர்றேண்டீ அப்புறம் கதைப்பம்" என செல்லமுத்துவுக்கு சொல்லியபடியே வள்ளி தன் வீடு திரும்புகிறாள். முன்னுக்கே வீடுள்ளவர்கள் ஏற்கனவே சென்று விட்டார்கள்.

தலையில் சுமையுடன் செல்லமுத்து காணிக்குள் கால் வைப்பதை கடுதா நாய் கண்டுவிட்டது. குடிசையருகின் நிழல் மரவள்ளிக்கு கீழே நின்ற கடுதா வாலை ஆட்டி தன்னுடலை உலுப்பியபடி ஓடி வருகிறது. மனிதன் மட்டுமே சிரிக்கத் தெரிந்தவன் என்பது மதியிலார் கருத்து. சந்தோசத்தில் வாலாட்டும் போதெல்லாம் நாய் சிரிக்கிறது. இன்னும் அதிக சந்தோசம் என்றால் அப்படியிப்படி கத்தியபடி வாலினை ஆட்டும். இந்த கடுதா நாய் ஒன்றிற்கே செல்லமுத்துவின் கஸ்ரம் தெரியும். ஓடிவந்து தன் பாஷையில் ஏதேதோ சொல்லி செல்லமுத்துவின் கால்களை நக்கியபடியே வருகிறது. இந்த நாயினை தெருவில் இருந்து குட்டை பிடித்த நிலையில்தான் மூன்று வருடங்களுக்கு முன்னர் செல்லமுத்து எடுத்திருந்தாள். சாம்பல், வேப்பிலைச்சாறு என்பன போட்டுக் கழுவி கொஞ்சம் கொஞ்சமாக அதன் குட்டையை போக்கிவிட்டாள். "ஏய் கடுதா" என அன்புமொழி பொழிகிறாள். துன்பம் வந்தால், ஏழ்மை நிலைக்குச் சென்றால் அவர்களை மறந்துவிடும் மனிதர்கள் அதிகம். நாய்களிடம் அந்தப்பழக்கம் இல்லை. தன்னை வளர்த்தவர்கள் பிச்சையெடுக்கும் நிலைக்குச் சென்றாலும் அவர்களை விட்டு அது பிரியாது.

செல்லமுத்துவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

மகன் கண்ணா சிறிய உரலில் நெல்லு குற்றிக்கொண்டிருந்தான். தான் காண்பது நிஜமா? செல்லமுத்துவுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி.

தலையை சற்றுத் தாழ்த்தி நெல்லு மூடையை இறக்கினாள். பெரிய பாரம் குறைந்த நிம்மதி. உடலெல்லாம் குளித்த மாதிரி வியர்வை.

"அம்மா நல்லா களைச்சுட்டே. ஒடம்பு இப்டி வேர்த்திருக்கு. இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாக்கட்டையில இரும்மா" நெல்லு குற்றிக்கொண்டிருந்த கண்ணா ஓடி வந்து ஆதரவு கொடுத்தான். ஒரு தாயின் பிரவச வேதனை குழந்தையின் அழுகை சத்தம் கேட்டதும் அடங்கி விடுகிறது. பின்பு அவள் வாழ்க்கையில் படும் வேதனை தன் குழந்தையே தனக்கு தாயாக தெரியும்போது அடங்கி விடுகிறது. காலையில் போன செல்லமுத்து வெயிலில் கிடந்து வியர்வை சிந்தி குடும்பத்தின் பசி தீர்க்க சுமை சுமந்து வந்தாளே! கண்ணாவின் பாசமொழி கேட்டு அத்தனை சுமைகளும் நீங்கிய உணர்வு பெற்றாள் அவள்.

"அம்மா எனக்குத் தெரியும்மா நீ இந்த நேரம்தான் வருவேன்னு. தேத்தண்ணியும் சுட வெச்சிருக்கேன். இரும்மா ஊத்தியாறேன். குடிச்சிட்டு அப்புறம் பேசுவோம்"

"ஏம்பா கண்ணா இந்த நெல்லு, தேத்தண்ணிக்கு சீனி, ஒன்னுமே எனக்கு புரியலப்பா. நீ பள்ளிக்கு போனதானே?"

அழகிய பொன்மாலைப் பொழுதினை பாட்டாளிபுரம் வரவேற்கிறது. செல்லமுத்து அப்படிக் கேட்டதும் கண்ணா தயங்கினான். தாய்க்கு சீனி கலந்து தேநீர் கொண்டு வந்தான். செல்லமுத்து சீனி கலந்து தேநீர் குடிப்பது எங்கேனும் வேலைக்குப் போனால்தான். அதுவும் சில இடங்களில் சீனியை நக்கி குடிக்கத்தான் கொடுப்பார்கள்.

"என்ன ருசிப்பா கண்ணா. ஒன்னோட கையால அம்மா தேத்தண்ணி குடிக்க குடுத்து வெச்சிருக்கேம்பா. ஆமா நா. கேட்டதுக்கு பதில் சொல்லலையேப்பா"

"அம்மா என்னய பேசாதம்மா. நா ஒனக்கு பொய் சொல்ல மாட்டேம்மா. நா இன்னிக்கு பள்ளிக்கு போகலேம்மா. இவ்வளவு தூரம் நீ போயி நெல்லு பொறுக்கியாந்து பெறகு அதை குத்தி சோறாக்குறதுக்குள்ள நீ எவ்வளவோ பாடுபடுவேம்மா. அதாம்மா நா இன்னிக்கு இப்டி செஞ்சேன்"

"என்னப்பா அம்மாவுக்கு புரியலையே கண்ணா"

"அதாம்மா தாமரைக்கொள மணியக்கா வயல்காட்டுல வரம்புல புல்லு செதுக்கிற வேலை இருந்திச்சி. பள்ளிக்கு போய்க்கிட்டு இருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மட உங்குவோட அண்ணேன் சொன்னாரு இன்னிக்கு வரம்பு செதுக்க ஆள் காணாதுன்னு. ஓடனே பள்ளி போகாம திரும்பி வந்து புல்லு செதுக்க போனேம்மா. பெரிய ஆட்கள் செஞ்ச வேலை செஞ்சேன். ரெண்டு கிலோ நெல்லும் எண்பதுருவா காசும் மணியக்கா தந்திச்சி. இந்தாம்மா காசு. சாந்திக்கா கட அரிசி கடன் சாசு, வள்ளிக்கா காசு எல்லாம் குடுத்திரும்மா".

கண்ணா காசை நீட்டும்போது செல்லமுத்துவின் கண்களை கண்ணீர்த்துளிகள் மறைத்தன. கட்டுப்படுத்த முடியாமல் அழுதாள் செல்லமுத்து. மகன் கண்ணாவின் செய்கை அவள் மனதினை வருடியது. ஒரு தாய் இறந்த பின்பு அவளுக்கு சிலை வைப்பதைவிட இருக்கும்போது அவளுக்கு குறை வைக்காமலிருப்பதே மேல்.

"ஏம்மா அழுறே" பரிவோடு கண்ணா கேட்டான். சில விடயங்களுக்கு விழிகள் பதில் சொல்லும்போது வாய்மொழிகள் எப்படி? அவனை தன்னோடு அணைத்துக்கொண்டாள் செல்லமுத்து.

"ஏம்ப்பா கண்ணா அம்மா சொன்ன எதையும் கேப்பாதானே"

"சத்தியமா அம்மா ஓம் பேச்ச மீற மாட்டேம்மா"

"இனி நீ இப்டி வேலைக்கு போகாதப்பா. கஞ்சியோ கூழோ அம்மா ஒழைச்சி ஒனக்கு தருவேன். நீ வடிவா படிப்பா. பரிகாரியா வரத் தேவையில்ல. ஏம் புள்ளையும் ஏதோ படிச்சிக்கான்னு பார்க்கிறவங்க சொன்னா போதும். நீ நல்லா படிச்சா அதுவே அம்மாக்கு ஒழைச்சி போட்ட மாதிரிப்பா" சொல்லியபடியே அவனின் வேர்த்திருந்த உச்சியைக் கோதினாள் செல்லமுத்து.

அம்மா படும் கஸ்ரத்தை பொறுக்காமல் இனி படிப்பை விட்டுவிட்டு வேலைக்குப் போக வேண்டும் என்று முடிவு செய்திருந்த கண்ணாவின் முடிவுக்கு முற்றுப்புள்ளி வைத்தாள் செல்லமுத்து. கண்ணா மறுபேச்சு பேசவில்லை.

"நீ போயி சீனியம்மா காணி கிணத்துல குளிப்பா மிச்ச நெல்ல அம்மா குத்துறேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரும்மா நா குத்துறேன். நீ சாந்திக்கா கடைக்குப் போயி கடன குடுத்திட்டு செத்தல் மொளகா வாங்கி வாம்மா. மணியக்கா கருவாடு கொஞ்சம் தந்திச்சி. ராவுக்கு சரி வடிவா சாப்பிடுவோம்" என்று சொல்லிய கண்ணாவின் மனதில் ஒரு எண்ணம் இருந்தது.

அம்மாவுடன் இரவுக்கு கதைத்து பள்ளி இல்லாத சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஏதாவது ஒரு நாளில் வேலைக்கு போவதற்கு அனுமதி எடுக்க வேண்டும் என்பதே அது. அப்படிச் செய்தால் தன் படிப்புச் செலவுக்கான பணத்தை தானே ஈடு செய்யலாம் என்பதே அவன் நினைப்பு.

பழைய கடதாசிப் பையோடு சாந்தி கடை நோக்கி செல்லமுத்து நடக்கத் தொடங்குகிறாள். இன்று அவள் மனதிலே இனம் புரியாத பரவசம்.

"எப்படியாவது சனி, ஞாயிற்றுக்கிழமை வேலை செஞ்சி அம்மாக்கு செருப்பொன்னு வாங்கிக் குடுக்கனும்" நெல்லு குற்றியபடியே கண்ணா யோசித்தான். வீட்டு நாய் கடுதா சந்தோசக் குரைப்பு செய்தது.

கள்ளு குடித்துவிட்டு மெல்லிய வெறியில் காளியப்பன் காணிக்குள்ளே வருகின்றான்.

அவன் கையிலே ஒரு காட்டுக்கோழி இருக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்பு காட்டோரத்தின் புதர் ஒன்றிலே வைத்த சுருக்கில் இன்று மாட்டிய காட்டுக்கோழிதான் இது. காளியப்பன் பெரிதாக வேலைக்குப் போகாவிட்டாலும் இந்த விசயத்தில் கெட்டிக்காரன். காட்டுக்கோழி, உடும்பு, முயல் இவைகளுக்கு சுறுக்கு வைப்பான். அந்தச் சுறுக்கில் அவ்வப்போது ஏதாவது மாட்டிவிடும். சிலநேரம் வீட்டுக்குக் கொடுப்பான். இல்லாவிட்டால் யாருக்காவது கொடுத்துவிட்டு கள்ளச் சாராயமோ, கள்ளோ குடித்து விடுவான். மூன்று வருடங்களுக்கு முன்பு அவன் வைத்த பெரிய சுருக்கில் பன்றி ஒன்றுகூட சிக்கியிருந்தது.

காட்டுக்குத் தேன் எடுக்கப் போவது, இப்படியான வேட்டை என்பதெல்லாம் பட்டாளிபுரத்தில் அநேகருக்கு அனுபவமான ஒன்றுதான்.

# 06

மாலைப்பொழுது ஐந்து மணி.

சேனைபுர அழகிய வாய்க்கால் மெதுவாக ஓடுகிறது.

மாந்திரீக மன்னன் என தன்னை ஊரெல்லாம் காட்டிக் கொண்டிருப் பவன் தான் மயிலு.

வயல்களும், பாலை, வீரை மரங்களும் நிறைந்த சிறிய காட்டுப்பகுதியை அண்டித்தான் மயிலுவின் வீடு. வீட்டிலிருந்து சற்றுத் தூரத்தில் வாய்க்கால் ஓரமாகவுள்ள வேப்பமரத்தின் கீழே ஓலையால் வேயப்பட்ட சிறு கொட்டகை வடிவ இடம்தான் மயிலுவின் பூசை அலுவல்கள் பார்க்கும் இடம். மாந்திரீகமோ வேறு அலுவல்கள் என்றாலோ முன்கூட்டியே மயிலுவிடம் சொல்லிவிட வேண்டும். அந்த ஊரிலே அவனுக்கு மட்டும்தான் மாந்திரீக வேலை தெரியுமென்பதால் அவன் போட்டது தானே சட்டம். கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும் என்பது இங்கில்லை. மயிலு நினைத்தால் எதையும் செய்வான் என்பது ஊரில் நிறைய பேரின் நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு நாட்களில் காரியம் நடக்கும், இருபத்தியொரு நாட்களில் காரியம் நடக்கும் என்றெல்லாம் பூசை முடித்து விடுவான் மயிலு. நடக்காவிட்டாலும் தட்டிக் கேட்கவா முடியும்? மயிலுவிடம் ஒரு சக்தியும் இல்லை. காசு கறப்பதற்காக அவன் செய்யும் "பேய்க்காட்டு" வேலைகள்தான் இவை என நினைத்து அவனிடம் செல்லாத வர்களும் ஊரிலுள்ளனர்.

நெல் மூடைகள் ஏற்றும் அலுவலாக கதைப்பதற்கு வண்டில் ராஜா வீட்டுக்குப் போவதாக சொல்லித்தான் வீட்டை விட்டு மங்களம் புறப்பட்டாள். சிங்கராயரும் மகன் கண்மணியும்தான் வீட்டில் இருக்கிறார்கள். நேரம் கிடைக்கும் போதெல்லாம் தன்னிடம் உள்ள பழைய வேதாகமத்தை வாசித்து மற்றவர்களுக்காக பிரர்த்தனை செய்வது சிங்கராயர் வழமை. இன்றும் வீட்டில் அதையே செய்துகொண்டிருந்தார்.

மாந்திரீக வேலைக்காய் சிறு பலி போட்டுத்தான் பூசை செய்ய வேண்டுமென ஏற்கனவே மயிலு மங்களத்திற்கு சொல்லியிருந்தான். ஆடு வெட்டுவது சாத்தியம் இல்லையென்பதால் கறுப்பு நிறச் சேவலும், ஒரு போத்தல் கள்ளும் வாங்கி வரச் சொல்லியிருந்தான் அவன். கள்ளு வாங்கினால் யாரும் ஏதும் நினைப்பார்கள் என்பதால் கள்ளு பொறுப்பினை மயிலுவிடமே விட்டு விட்டாள் மங்களம். ஒரு போத்தல் கள்ளுக் காசும், வாங்குவதற்குரிய கூலிக்காசும் ஏற்கனவே கொடுத்து விட்டாள்.

மயிலு வீட்டிலிருந்து இரண்டு வீடு தள்ளி இருக்கின்ற ஓட்டைப்பல் ராசா வீட்டிலே நூற்றியைம்பது ரூபாவுக்கு கறுப்பு நிறச்சேவலை மங்களம் வாங்கினாள். மாந்திரீக வேலைக்கு கொடுப்பதற்கென்றே கோழி, ஆடுகளை ஓட்டைப்பல் மணியம் வளர்க்கிறான்.

ஓடும் வாய்க்காலின் நீரிலே கால்களைக் கழுவினாள் மங்களம். பூசைக் கொட்டகையிலிருந்து வெளிவரும் ஊதுபத்தி வாசனை மங்களத்தின் மூக்கினையும் தொடுகிறது. பலியாகப் போகும் கறுப்புச் சேவல் பயத்திலே உறைந்து போய் இருக்கிறது. கோழியை வைத்திருக்கும் பையோடு பூசை கொட்டகைக்குள் நுழைகின்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களம். கண்களை மூடியிருந்த மாந்திரீகம் மயிலு கண்களைத் திறந்தார்.

"வாக்கா மங்களம் சொன்ன நேரத்துக்கே வந்துட்டே. இது கறுப்பு சாவலா"

"ஆமா சாமி, இப்பதான் ஓட்டைப்பல் ராசா கிட்ட வாங்கினேன். அடடா கள்ளு வாங்கீட்டீங்க என சாமி"

"கள்ளு எடுக்கிறது பெரிய கஷ்டமா போச்சிம்மா. ஒருமாதிரி திரிஞ்சி வாங்கீட்டேன்..." என சொல்லிய மயிலு படையல் போடுவதற்காக வாழையிலையை விரித்தார். மங்களத்திற்காக தான் கஷ்டப்பட்டு கள்ளு வாங்கிய விடயத்தையும் எப்படியோ சொல்லி விட்டார் மயிலு. அவன் எங்கே கஸ்ரப்பட்டு வாங்கினான். ஏற்கனவே மாந்திரீகம் செய்ய வந்தவரின் கள்ளு அது. வியாபாரிகளுக்கும் சில மாந்திரீகர்க ளுக்கும் பேசுவதற்கு கற்றுக் கொடுக்கவும் வேண்டுமா?

"இந்த சாமிக்கு குடுக்க வேண்டிய முக்கிய சாமான் கள்ளும் கோழியும்தாம்மா. பூ தேங்கா எல்லாம் இரண்டாம் பட்சம். இதெல்லாம் குடுத்தாதான் நாம கேட்கிற காரியத்த சரியா முடிச்சி தரும்" சொல்லியபடி கள்ளுப் போத்தலை வாழையிலையின் மேல் வைத்தவர் உடைப்பதற்காய் தேங்காயை எடுத்தார். மயிலு பூசை செய்யும் இரத்தக் காட்டேரி, ஊத்தை கவாரி, சுடலை பாய்ஞ்சான் போன்றவற்றின் மண் உருவங்கள் பூசையறையின் மண் சுவரினை அண்டி இருக்கின்றன. மூடப்பட்ட மண்டையோடு ஒன்றும் இருக்கிறது. ஐந்தாறு வாழைப்பழங்கள், ஊதுபத்தி, கோழி, கள்ளு, சிலவகை பூக்கள், ஒரு வித திருநீறு, வடை போன்ற சிற்றுண்டி என்பன வாழையிலை மேலே இருக்கின்றன. விளக்கினை எரிக்கிறார் மயிலு. எரித்தபடியே கேட்டார். "எங்கம்மா மகளோட படம்.." என்று.

சிறிய கடதாசியில் வைத்துக் கொண்டு போன கண்மணியின் புகைப்படத்தை கொடுத்தாள் மங்களம். மயிலு கேட்டதற்கமைய கண்மணியின் பிறந்த திகதியும் அதில் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் சாமி நா.. ஏதாச்சும் ஒதவி.." என இழுத்தாள் மங்களம். முதுகினை சொறிந்தவாறே மயிலு சொன்னார் "ஒன்னும் வேணா பார்த்துக்கிட்டே இரு. இப்ப நா தெய்வத்த அழைச்சு பலி குடுப்பேன். நா சாமி ஆடுறப்போ ஏதாச்சும் கேக்கனும்னா கேட்டுக்க. விளங்கயில் லையினா அதோ வர்றான் சொக்கன்.... அவேன் எனக்கு பக்கத்துலதான இருப்பான். அவேன் மூலியமா கேட்டுக்க" சொல்லிய படி கண்களை மூடி "ம்....ஹ்...ரீம்...." என முணுமுணுக்கத் தொடங்கினார் மயிலு. பூசை உதவியாளன் சொக்கன் இன்று சற்று பிந்தித்தான் வந்திருக்கிறான். ஏழு வருடங்களுக்கு மேலாக மயிலுவின் உதவியாளனாக இருப்பவன் சொக்கன். அவனும் சேனைபுரம்தான். கோழி, ஆடு இவற்றை பூசை வேளையிலேயே அறுப்பதில் கெட்டிக்காரன். இன்று இந்த கறுத்த சேவல் யார் கையினால் பலியாகுமோ தெரியாது

மாந்திரீகர் மயிலுவிடம் மங்களம் வந்தது தன் மகளின் விடயமாகத்தானே. மயிலுவின் மாந்திரீக சக்தி மூலம் கண்மணியின் மனதிலே இருக்கும் கண்ணா மீதான காதலை அகற்றி தன் பேச்சினை கேட்பவளாக ஆக்கிவிட வேண்டும். இதுவே மயிலுவிடம் மங்களம் கேட்டுக் கொண்ட விடயம். "அது சின்னப் பிரச்சினம்மா" என மயிலுவும் சொல்லியிருந்தார். அன்பாக அரவணைத்து மகளோடு பேசி அவளின் மனதில் இடம்பிடித்து ஒரு தீர்வினைத் தேடியிருக்கலாம். இப்படியொரு எண்ணத்திற்கு மங்களம் இறங்கிவிட்டாள்.

இதோ மந்திரங்களை ஓதிக்கொண்டிருக்கிறார் மயிலு.

சுடலை பாய்ஞ்சானை அழைக்கும் மந்திரத்தின் இறுதிப்பகுதி ஓதி முடிவாகிறது.

கைகளை உயர்த்தி, உடம்பு முழுவதையும் பலத்துடன் முறுக்கியபடி நாக்கினை வெளியே நீட்டி "ம்....ம்..." என சத்தமிடுகிறார் மயிலு. அவருக்கு உருவேறி விட்டது என்று மங்களம் நினைத்துக் கொள்கிறாள். "ம்....ம்...." என்றபடியே கள்ளுப்போத்தலை எடுத்தார் மயிலு. உடனேயே சொக்கன் சிறு கோப்பையில் கள்ளு ஊற்றிக் கொடுக்க "ஆ.... தாகம் அடங்கல.." என்றபடியே கடைவாயின் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமும் கள்ளு வடிய கள்ளைக் குடித்தார். மயிலு பல்வேறு சக்திகளை அழைப்பவனாம். "இப்ப வந்திருக்கிறது காட்டேரி அம்மா" என மங்களத்திற்கு விளக்கம் கொடுத்தான் சொக்கன்.

"ம்...ஆ" என்றபடியே கறுப்பு நிறச் சேவலை தூக்கி அதன் கழுத்தினை கடிப்பதற்காய் வாயகருகே கொண்டு போனார் மயிலு. ஒருபுறம் மங்களத்திற்கு நெஞ்சு பதறியது. "ஏய் சுடல பாய்ஞ்சான் பொறு ஒனக்குத்தான் இதோ பலிபோட்டுத் தார்றேன்" என்ற படியே கறுத்தச் சேவலை இழுத்தான் சொக்கன். வாழையிலை மேலேயிருந்த சிறு மாப்பலகையின் மேலே சேவலின் கழுத்தை வைத்தான். சேவல் தன்னுடலை பலமாக ஆட்டி தப்பிக்க முயற்சி செய்கிறது. விடுவானா சொக்கன். கத்தியை எடுத்தான். மங்களம் கண்களை மூடிக் கொண்டாள். ஓங்கி ஒரே வெட்டுத்தான். கோழியின் தலை வேறானது. ஆங்காங்கே இரத்தம் தெறித்தது. தலை பிரிந்த பின்பும் அதன் கால்கள் ஆடுகின்றன. மங்களம் கண்களைத் திறந்தாள். வாழை இலையிலே கோழியின் இரத்தம் அசைகிறது.

"இப்படி எல்லாம் செய்கிறார்களே. இதன் பின்பு கண்மணி மனம் மாறுவாளா? இது உண்மையாய் இருக்குமா? சாமி ஏன் இதெல்லாம் கேட்கிறது?" என்றெல்லாம் அந்த வேளையிலும் மங்களத்தின் மனதுக்குள் சந்தேகம் வேறு.

"அம்மா... ஏதும் கேக்கணும்னா கேளுங்க. சுடலை பாய்ஞ்சான் அதிக நேரம் நிக்காது" என்றான் சொக்கன். வாழை இலையின் மேல் வைக்கப்பட்டிருந்த கண்மணியின் புகைப்படத்திலும் கோழி வெட்டும் போது சிதறிய இரத்தத்துளிகள் பட்டிருக்கின்றன. "எத்தன நாளில மகளோட மனசு மாறும். நா வேறென்ன செய்யணும்" என்றாள் பயபக்தியோடு மங்களம்.

உருவேறி இருந்த மயிலு வலது கையின் ஐந்து விரல்களையும் இடது கையின் இரண்டு விரல்களையும் சேர்த்து மூன்று முறை காட்டினார். அது மங்களத்திற்கு புரியவில்லை. சொக்கனுக்குத்தானே புரியும். "அம்மா. மூணு வாரத்துல அவங்க மனசு மாறிடுவாங்க. அதைத்தான் சாமி அப்புடிச்சொல்லுது" சொக்கன் சொன்னபோதுதான் மங்களத்திற்கு விசயம் புரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவிலே இருந்த மயிலு தன் முன்னேயுள்ள விபூதியை காட்டினார். அதன் பின்பு கள்ளுக் குடித்த கோப்பையை தொட்டுக் காட்டி ஏதோ சொல்கிறார். சொக்கனும் "ஆ...சொல்லு சொல்லு.." எனக் கேட்கிறான். "சரி.. அப்புடியே செய்யிறேன்..." சொக்கன் சொல்ல மயிலு ஏதோ கைகளை காட்டிக் கேட்டார். அது சொக்கனுக்கு மட்டுமே புரிந்தது.

"என்ன கேக்குறாரு..." மங்களம் கேட்க சொக்கன் விளக்கமளித்தான். "இந்த வேலைய முடிச்சி தந்தவுடனே என்ன குடுப்பீங்கன்னு சாமி கேக்குது. ஒரு கோழி குடுக்க முடியுமில்ல..." சொக்கன் கேட்டான். ஏற்கனவே ஒரு கோழி, கள்ளு, காசு என கொடுத்த பின்பு இப்போதுமா" என கணப்பொழுதில் மங்களத்திற்குள் சிந்தனை வந்து போனது. திடீரென "ஓ....ஒரு கோழி தர்றேன்" என்றாள். அது சுடலை பாய்ஞ்சானுக்கும் புரிந்தது போல உடலை பலமாக ஆட்டி கை காட்டுவது போல பாவனை செய்தார் மயிலு. சாமி போகப்போகிறது என்பது சொக்கனுக்கு மட்டும் புரிந்தது. "ஏய்..ம்... ஆ.... ஆ..." என்றபடியே படுத்தார் மயிலு.

சொக்கன் நீர் தெளித்தான். மூன்று நிமிடங்களில் மூடிய கண் விழித்தார் மயிலு.

"என்ன சொல்லிச்சி..." என்றபடியே சொக்கனைப் பார்த்தார் மயிலு. அட அவருக்கே தெரியாதா? சாமி ஆடுறவங்களுக்கே சாமி ஆடுறது சொல்வது புரியாதாம் என மங்களம் கேள்விப்பட்டதுண்டு. இப்போதுதான் நேரில் பார்க்கிறாள். "இருவத்தியொரு நாள்ல காரியம் முடியுமாம். இதுல இருக்கிற மந்திரிச்ச விபூதிய இவங்க மகளுக்கு தண்ணியில போட்டு குடிக்க குடுக்கணுமாம். காரியம் முடிய இவங்க கோழி ஒன்னு குடுப்பாங்க.." நடந்த விசயத்தை சொக்கன் மயிலுவுக்கு புரிய வைத்தான்.

"ஏன் தேத்தணியில போட்டு குடுக்கக்கூடாது" தனது சந்தேகத்தை கேட்டாள் மங்களம்.

"குடுக்கலாமே ஒரு பிரச்சினையும் இல்லம்மா. புள்ளையோட வயித்துக்குள்ளே சாமான் போகணும். அவ்வளவுதான். சந்தேகத்தை தீர்த்தார் மயிலு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை என்பதே பிரச்சனைதானே. வெறும் ஒளியாகவே இருந்து விட்டால் உலகம் போரடிக்குமே. சின்னச்சின்ன விசயங்களை சீர் செய்து கொள்வதற்காய் மனதையும் புத்தியையும் பயன்படுத்தாது. “மாந்திரீகம்” என்ற ஒன்றை பயன்படுத்த விளைவோரில் மங்களமும் ஒருத்தி. என்னதான் அவள் மயிலுவிடம் வந்திருந்தாலும் அங்கு நடந்த விசயங்களைப் பார்த்து இது நடக்குமா? என்ற சந்தேகம் வேறு அவளை அரித்துக் கொள்கிறது.

“நம்பிக்கையோட இருங்கம்மா. சந்தேகப்பட்டா மருந்து வேலை செய்யாது” என்றார் மயிலு. ஒருவேளை காரியம் நடக்காவிட்டால் “சந்தேகப்பட்டிருப்பீங்க அதான் நடக்கயில்ல” எனச்சொல்லி தப்பிப்பதற்கு மயிலு பிரயோகித்த வார்த்தையா அது?

ஏற்கனவே கொடுத்த கூலியை விட தட்சனைக் காசு வைத்து விட்டு விபூதியை வாங்கிப் புறப்படத் தயாரானாள் மங்களம். கண்மணியின் படம் இருபத்தியொரு நாட்களும் அந்த இடத்தில் இருக்க வேண்டுமென மயிலு சொன்னார். பலி கொடுக்கப்பட்ட கோழி சொக்கன் வீட்டு கறிக்குப் போய்விடும். சில வேளைகளில் மயிலு வீட்டுக் கறிக்குப் போகும்.

பகலானது இரவினை முட்டிப்பார்க்கத் துடிக்கும் அந்தப் பொழுதிலே மயிலுவின் பூசைக் கொட்டகையிலிருந்து வெளியேறுகிறாள் மங்களம். தெருவூடே நடக்கும் போதே கண்மணிக்கு தெரியாத வகையில் விபூதியை ஊட்டிவிட திட்டங்கள் வகுத்துக் கொண்டாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

# 07

இன்று ஏதோவொரு வகையில் இரகசியமாக கண்மணிக்கு விபூதியை ஊட்டுவதே மங்களத்தின் இலக்கு.

என்னதான் மங்களம் ஆகா ஓகோ என சத்தமிட்டாலும், பெயருக் கேற்ப வீட்டினை மங்களமாக வைத்திருப்பாள். இன்று காலையி லேயே எழுந்து குளித்து சாணம் தெளித்து முற்றத்திலே கோலமிட்டி ருக்கிறாள். அழகிய தாமரைப்பூக்கோலம். மங்களத்தின் அழகிற்கு கோலமிடுவதும் ஒரு காரணமாக இருக்கலாம். கோலமிடுவது வீட்டிற்கு மட்டுமா அழகு, தலை சிறந்த யோகாப்பயிற் சியுமல்லவா?

இரண்டு அறைகளை உடையது சிங்கராயரின் வீடு. குசினி தனியே உள்ளது. ஓலையால் வேயப்பட்ட குசினியின் கூரை வழியே புகை வெளியேறிக்கொண்டிருக்கிறது. உள்ளே அடுப்பு எரிவதன் அறிகுறி அது. தேநீர், உணவு தயாரிப்பது எல்லாமே மங்களம்தான். சிங்கராயர் அவ்வப்போது உதவி செய்வார். சனி, ஞாயிற்றுக்கிழ மைகளில் கண்மணி உதவி செய்வாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியாவது தன் திட்டம் இன்று இனிதே நிறைவேறும் என ஒருவித திருப்தி கொண்டாள் மங்களம். மூன்று பேருக்குமாக தேநீர் ஊற்றினாள். கண்மணிக்கு கொடுக்கவுள்ள நீலநிற பிளாஸ்ரிக் குவளையில் கடதாசியில் சுற்றி வைத்திருந்த மயிலு கொடுத்த விபூதியில் கொஞ்சம் தூவினாள். இதை இப்போது கண்மணிக்கு கொடுக்கும்போது அவள் நிச்சயம் குடிப்பாள். மயிலு சொன்னது போலவே கண்ணா மீதான காதலை மறந்து தன் பேச்சினை கேட்பாள் என்றெல்லாம் நம்பிக்கை மிகுந்தாள் மங்களம்.

குவளையில் இட்ட விபூதியை அப்படியே கடதாசியோடு வைத்தாள். கண்மணிக்கும், சிங்கராயருக்கும் தேநீர் கொடுக்க அவள் தயாராகிய போதே "அட தேத்தண்ணி ஊத்திட்டே என" என்றபடியே சிங்கராயர் குசினியினுள் நுழைந்தார். திடீரென நுழைந்த அவர் விபூதி இடப்பட்ட குவளையை குடிப்பதற்கு எடுத்தார். அவசரமாக தன்னை மறந்து "ஆ..... அதை நீங்க குடிக்காதையுங்க" என்றாள் மங்களம்.

"ஏ....ஏன் இது என்ன வேப்பம்பட்டையா தேத்தண்ணி தானே..."

"அதை குடுங்க சீனி கூடுதலா போட்டுட்டேன். ஒங்களுக்கு கூடாதில்லையா? அதான் சொன்னேன்"

குவளையைப் பார்த்தபடியே அதை கீழே வைக்க முற்பட்ட சிங்கராயருக்கு ஏதோ ஒன்று கண்ணில் பட்டது. குவளையை நன்றே பார்த்தார். வெள்ளை நிற விபூதிப் படிவுகள் குவளையிலே ஒட்டியிருப்பது தெரிகிறது. மங்களம் விபூதியை தூவும் போது குவளையின் விளிம்போடும் அது பட்டிருக்கிறது. சிங்கராயருக்கு சந்தேகம் பற்றியது.

"ஏய் மங்களம் என்னா இது" என்றபடியே அவளை ஒரு மிரட்டுப் பார்வை பார்த்தார். கடதாசியில் இருக்கும் விபூதியும் அவர் கண்களில் படுகிறது. காலை வேளையிலேயே கோபத்தீ பரவுகிறது. "ஏய் மங்களம் சொல்லு இது மந்திரிச்ச விபூதியா? இல்ல நஞ்சா" கோபம் கொப்பளிக்கக் கேட்டார் சிங்கராயர்.

குளிர்ந்த சூழலிலும் மங்களத்திற்கு வியர்க்கத் தொடங்கியது. "அது வந்துங்க..." என இழுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேசாத மங்களம். நீ ஒரு தாய்தானே. நீ என்ன செய்றேன்னு எனக்கு புரியாதா? நேத்து நீ மயிலுகிட்ட போனது கூட எனக்குத் தெரியும். நீ ஒரு தாய்தானே. ஆமா இது அவள சாகடிக்கவா இல்லாட்டி..." என சிங்கராயர் சீறிய போது, "ஆ.... அப்டி ஏங்க பேசுறீங்க" என பக்குவத்தோடு பேசினாள் மங்களம்.

என்னதான் ஒரு பெண் வீட்டிற்கு மகாராணியாக இருந்தாலும் நியாயப்படுத்த முடியாத தவறு ஒன்றினை விடும்போது தன்னைய றியாமலேயே அடங்கி விடுகிறாள். அவளின் கர்வங்கள் சொல்லாமலே ஓடி விடுகின்றன. இல்லாவிட்டால் சிங்கராயரை தன் பேச்சினால் அடக்கி வைத்திருந்த மங்களம் இப்படிப் பணிந்து பேசுவாளா? கொஞ்சம் பக்குவமாக சிங்கராயருக்கு புரிய வைக்க முயன்றாள்.

"நீங்க நெனைக்கிறமாதிரி நா அவ்வளவு கொடூரமானவ இல்ல. நானே ஓங்கக்கிட்ட பல தடவை சொன்னேன்தானே பாட்டாளிபுர செல்லமுத்து வூட்டுக்குப்போயி இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்டிருங்கன்னு. நீங்களும் அலுவல் பார்க்கல. அதான் அவளோட மனச நம்ம பேச்சு கேட்கிற மாதிரி பண்ண பூசை விபூதி வாங்கி வந்தேன். ஏங்க இத குடுத்தா அவ நம்ம பேச்சை கேட்குற ஆளா மாறிடுவாள்ல" பணிவோடு மங்களம் கேட்க துணிவோடு செயலால் பதில் சொன்னார் சிங்கராயர். கடதாசியோடு கிடந்த விபூதியை அப்படியே அடுப்பிலே தூக்கிப் போட்டார். அதே வேகத்தில் விபூதி இடப்பட்ட தேநீர்க் குவளையை வெளியே ஊற்றினார். "ஆ..." என்று அதிர்ந்தாள் மங்களம். இந்த விபூதியை பெறத்தானே காலத்தையும் பணத்தையும் கரைத்தாள். கோழிப்பலி, கள்ளு, கூலிக்காசு எல்லாம் சரி.

"மக இத அறிஞ்சா என்ன பண்ணுவாளோ தெரியா. அவளோட அன்பா பேசு. ஒரு தாயா கதை. அவ ஓம்பேச்சை கேட்பா. என்னோட பேச்சை கேட்கிறாதானே ஒன்னோட பேச்சையும் கேட்டு நடக்கிறா தானே. நீயாவே மனசுக்குள்ள புள்ளையப் பத்தி இல்லாத குணம் எல்லாத்தையும் நெனச்சிட்டு திருப்பி நீயாவே செய்யக்கூடாத வேலை எல்லாம் செய்யிற. புள்ளைங்கள கோபப்படுத்தாம வளர்க்கத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைபிள் சொல்லுது. ஒன்னோட நம்பிக்கை வேறதான். ஆனா நா அதை சொல்லல. ஆனா கடவுள் பெரிய ஸ்தானத்துல இருக்கார். அவர நம்பு. ஒனக்கு பைத்தியமா? சாமி கோழி கேட்டிச்சி, சாராயம் கேட்குதுன்னு ஒன்னைய பேய்க்காட்டுறாங்க. நீயும் ஏமாந்துட்டு நிக்கிறே. மொதல்ல ஒன்னைய நம்பு. இருக்குதா இல்லையான்னு சரியா தெரியாத பொய்யான மந்திரத்த நம்பாத. மாந்திரீகத்தால எல்லாம் செய்ய ஏலுமுன்னா பரிகாரி எதுக்கு? நாம வீட்டுல எதுக்கு. ஒனக்கு மாந்திரீகம் செஞ்சவனோட தனி வாழ்க்கையும் அவனோட புள்ளைங்களும் இந்த ஊர்ல கவுரவமான ஆக்களா? எத்தன மோசமானவங்க. அவங்கள போயி நம்பி.." சிறு பிரசங்கமே வைத்து முடித்தார் சிங்கராயர். அதை விட பேசுவதற்கு சிங்கராயர் விரும்ப வில்லை அவருக்கு அதிகம் பேசிக்கொண்டிருக்கவும் விருப்பமில்லை. மங்களம் பலகைக் கட்டையில் தலைகுனிந்தபடியே இருக்கிறாள். எதற்கும் மறுபேச்சு பேசும் அவள் மௌனமாக இருக்கிறாள் என்றால் தன் பிழை புரிந்து விட்டது என்றுதானே அர்த்தம். இல்லாவிட்டால் இதைப்போல மும்மடங்கு பதில் பிரசங்கம் சிங்கராயருக்கு வைத்தி ருப்பாள் அவள்.

மேலும் கதையை வளர்க்காமல் எழும்பினார் சிங்கராயர். நித்தி ரையில் கிடந்த கண்மணியும் எழுந்து விட்டாள். அவசர அவசரமாக வேறு தேநீர் ஊற்றுகிறாள் மங்களம்.

இன்று பாட்டாளிபுரம் சென்று, செல்லமுத்துவிடம் அல்லது காளியப்ப னிடம் இந்த விடயத்தை கதைப்பது என்றும் இது பற்றி நல்ல முடிவு எடுக்க வேண்டும் என்றும் சிங்கராயர் நினைத்துக் கொண்டார். வயல் வேலைகளை முடித்து விட்டு மாலை வேளை பாட்டாளிபுரம் போகத் திட்டமிட்டார்.

வைக்கோலை மென்று கொண்டிருந்த மாடுகளை மேய்ச்சலுக்கு கட்டுவதற்காய் அவிழ்க்கத் தொடங்கினார்.

சிறிய மாமரத்தின் மேலே அணிலொன்று மாம்பழத்தை கொறிக் கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

சூரியன் நிற்கும் இடத்தை வைத்து நேரத்தை பார்ப்பதே செல்லமுத்துவின் வழமை. உச்சி வேளைகளில் தனது நிழலின் அளவை வைத்தும், இரவிலே நட்சத்திரங்கள், நிலவு இவற்றை வைத்தும் இப்போது இன்ன நேரம் இருக்குமென புரிந்து கொள்வாள். காலையில் சேவல் கூவுவதை வைத்து நேரத்தைக் கணிப்பாள்.

வழமையாக வேலை செய்யும் சுந்தரத்தார் காணியிலே மிளகாய்க் கன்றுகளுக்கு உரமிடும் வேலையில் ஈடுபட்ட செல்லமுத்து ஐம்பது ரூபாய் சம்பளத்துடன் வீடு திரும்புகிறாள். பழைய சேலைக்கு மேலாக ஆண்கள் அணியும் நீளக்கையுடைய பழைய சேட் அணிந்திருக்கிறாள். நாளையும் வேலை இருக்கிறது. தெருவிலுள்ள வேப்பமரத்தின் கீழ் கொப்பு அளவு உயரத்தில் சூரியன் தெரிவதை வைத்து ஐந்து மணி கடந்து விட்டதை புரிந்து கொண்டாள்.

கண்ணாவும் பள்ளிக்குடியிருப்பு ஆசிரியரிடம் நடந்து போய் மாலை நேரப் பாடங்கள் படித்து விட்டு திரும்புகிறான். இரண்டு மணிக்கு பாடசாலை விட்டவுடன் சேனைபுரமிருந்து பாட்டாளிபுரத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வந்தான். செல்லமுத்து காலை அவித்து வைத்துவிட்டுப் போன மரவள்ளிக்கிழங்கினை உண்டு விட்டு அதே வேகத்தில் பள்ளிக்குடியிருப்புக்கு நடந்தான். மூன்று மைல்கள் வரையில் நடக்க வேண்டும். அவனைப் பொறுத்தவரை அது அவனுக்குப் பெரிய விடயமே அல்ல.

கண்ணாவோடு பள்ளிக்குடியிருப்பு ஆசிரியரிடம் படிக்கும் சிலர் மிதிவண்டி காற்றுப் போய் விட்டது அல்லது பழுது என்று வகுப்பிற்கு வராத நாட்களும் உள்ளன. அவர்கள் வரவேண்டிய தூரமோ ஒரு மைலிற்கு உள்ளேதான். ஆனால் நடக்க மாடார்கள்.

கண்ணா வருவதைக் கண்ட செல்லமுத்து கொஞ்சம் வேகமாக நடந்து அவனை நோக்கிப் போகிறாள். அவள் கையிலே மிளகாய்க் கன்றுகள் கொஞ்சம் இருக்கின்றன. "எப்பிடிப்பா மாஸ்ரர்கிட்ட நல்லா படிச்சியா? ஒடம்பு பூரா வேர்வை. தா புத்தகத்த அம்மாக்கிட்ட" மனது பரவசப்பட கண்ணாவின் தோள்களைப் பிடித்தாள் செல்லமுத்து.

"காலையில இருந்து வெயிலிலேயே கெடந்து நீ ஒழைக்கிறத விடவாம்மா நா கஸ்ரப்படுறேன். இது என்னம்மா மொளவாக் கண்டு..."

"அதுப்பா சுந்தரத்தார் கழிச்சுவிட்ட மொளவாக் கண்டுப்பா. நம்ம வீட்டு பக்கத்துல நட்டு விட்டா சட்டி, பானை கழுவுற தண்ணியிலையே வளர்ந்துருமே. ஏதோ கறி பாட்டுக்கு சரி ஒதவுமே. அதான் கொண்டு வந்தேன்"

காணியில் வேலி இல்லாதபோதும், தெருவிலிருந்து காணிக்குள்ளே நூறு மீற்றர்கள் தூரத்தில்தான் குடிசை. படுத்திருந்த கடுதா நாய் உடம்பை முறுக்கி எழுந்து வாலை ஆட்டியபடி இருவரிலும் உரசியது. கழுத்தறுத்தான் சேவல் குப்பைக்குள் ஏதோ பொறுக்கி உண்கிறது.

"ஏம்பா வடிவாக படிச்சியா... மாஸ்டர் சொல்லிக்குடுத்த மாதிரி படிச்சியா?" அவன் தலையை தடவியவாறே செல்லமுத்து கேட்டாள். கண்ணாவுக்கு எத்தனை பாடங்கள் அதன் சாராம்சம் என்ன? அதெல்லாம் அவளுக்குத் தெரியாது. அவளின் கையெழுத்துக்கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரல் அடையாளம்தான். "படிச்சியா? மாஸ்ரர் சொல்லிக் குடுத்தத சரியா செஞ்சியா?" இதுவே அவள் கண்ணாவிடம் வழமையாக கேட்பது.

"இதோ பாரும்மா.. இதான் சோதனை பேப்பர். இன்னிக்கு மாஸ்ரர் வெச்ச சோதனையில ஓம் புள்ளதான் முதலாவது. வசதியான ஊர்க்கார புள்ளைகள் படிப்புல ஆர்வமில்லன்னு மாஸ்ரர் பேசினாரு. நடக்கப்போற பெரிய சோதனையிலையும் நா நல்லா பாஸ் பண்ணுவேன்னு அவருக்கு நம்பிக்கை இருக்கம்மா" செல்லமுத் துவுக்கு புரியும்படி கண்ணா உணர்த்தினான். செல்லமுத்துவின் கண்களில் கண்ணீர்த்துளிகள். அதே வியர்வையோடு அவனை உச்சி மோந்தாள்.

"ஏம்ப்பா படிக்க மொத மாஸ்ரர் காலை தொட்டு கும்பிடுறா தானேப்பா.."

"ஆமாம்மா நீ சொல்லித் தந்தத நா மறக்க மாட்டேம்மா. சிலபேரு நா கும்பிட்டா சிரிப்பாங்க. அதால எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லம்மா"

"ஏம்ப்பா நீ குளி. குளிச்சிட்டு சாந்திக்கா கடைக்கு போயி வா. அம்மா சீனியம்மா கெணத்துல ரெண்டு கேன் தண்ணி அள்ளி இந்த மொளவாக்கண்டை நட்டு விடுறேன். அப்பா வருவாருல்ல சோறும் ஆக்கணும்"

"அம்மா, பெரிய சோதனையில நா நிச்சயம் பாஸ் பண்ணுவேம்மா. அதுல பாஸ் பண்ணினாலே போதும் கிராம சேவையாளரோட உதவியா சேர்ந்து வேலை செஞ்சிட்டே, வேற விசயம் படிச்சு கிராம சேவையாளர் வேலையிலேயே சேர்ந்துடலாம்"

"ஏம்புள்ள ஒன்னைய கடவுள் கைவுடமாட்டாருபா. நம்ம பாட்டாளி புரத்துல எல்லாம் கதைக்கிறாங்கப்பா. நீதான் வடிவா படிக்கிறியாம். நீ பெரிய ஆளா வந்துவேப்பா. அம்மா எப்பாடு பட்டுண்ணாலும் புள்ளையோட படிப்புக்கு தொணை இரும்பேம்பா..

இருள் தொடுவது போன்ற வேளை. கடுதா குரைக்கிறது.

செல்லமுத்துவின் காணிக்குள் நுழையும் பாதை நன்றாக துப்புரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில்தான் இருக்கிறது. பாதையூடே கால் பதிக்கிறார் அவர்.

"சிங்கராயர் அண்ணே எதுக்கு பின்னேரம் வர்றாரு. ஏதும் வேலைக்கு கேட்க வர்றாரோ" மனதுக்குள் செல்லமுத்து நினைத்த போது சிங்கராயரும் வீட்டருகே வருகின்றார். சேனைபுரத்திற்கு பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன்னிருந்தே வேலைக்குப் போய் வருபவள் செல்லமுத்து. சிங்கராயரின் வயல்களிலும் அவள் வேலை செய்திருக்கிறாள்.

"வாங்க சிங்கண்ணே இதுல உட்காருங்க" வீட்டு முற்றத்திலே சாக்கினை போட்டு அதற்கு மேலே உட்காரும் பலாக்கட்டையை வைத்து விட்டாள் செல்லமுத்து. "இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழ்" என இப்படியான நடவடிக்கைகளுக்குத்தானே சொல்லியிருக் கிறார்கள்.

சிங்கராயரின் மௌனம் செல்லமுத்துவுக்குள் கேள்விகளை எழுப்பியது.

அம்மா முற்றத்தில் சிங்கராயரோடு நிற்கவே கண்ணா அடுப்பினை மூட்டி தேநீர்ப்பானையை ஏற்றினான்.

"ஏ...செல்லமுத்து எங்க வேலை செய்யிற.." இலேசாக இருமியவாறே சிங்கராயர் கேள்வியை போட்டார்.

"சுந்தரத்தார் காணியில தாண்ணே கச்சான், மொளவா, கத்தரி எல்லாம் வெச்சிருக்கிறாருதானே. ஏதாச்சும் ஒரு வேலை வந்துகிட்டே இருக்கு...."

"இதோ பாரு செல்லமுத்து நம்ம வட்டார கிராமங்கள்ல பதினாறு வயசிலேயே கல்யாணம் முடிக்கிறதுதான் வழமை. அதனால அவங்க படுற கஷ்டம் சொல்லி மாளாது. நா என்னோட புள்ள கண்மணி கொஞ்சம் படிக்கணும்ங்கிறதில ஆசையா இருக்கேன். அவ படிப்பு கொழம்பீறக்கூடாது. மங்களம் கல்யாணம் கட்டி வைக்கணும்னு சொன்னப்பக்கூட நா மறுத்துட்டேன்" சிங்கராயரின் இந்த இராஜ தந்திரப் பேச்சு புரியக்கூடிய சக்தி செல்லமுத்துவுக்கு இல்லையே. பலாக்கட்டை மேலே சம்மணம் போட்ட நிலையில் சிங்கராயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறார். பெரியவர்க்கு மதிப்பளித்து செல்லமுத்து நிற்கிறாள். படிக்காத பலருக்கு இயல்பிலேயே இருக்கும் பணிவு எனும் பண்பு படித்த சிலருக்கு ஊட்டினாலும் வருவதில்லை.

என்னவோ எதுவோ என யோசித்துக் கொண்டிருந்த செல்லமுத்து விரல்களை பிசையும்போதே சிங்கராயர் விசயத்துக்கு வந்தார். "செல்லமுத்து என்னோட குணம் இந்த வட்டாரத்துல இருக்கிற எல்லா கிராமத்து ஆக்களுக்கும் தெரியும்தானே. நா யாரோரையும் பகைச்சுக்க விரும்பல. நேரா விசயத்த சொல்றேன். ஓம்மகன் கண்ணாவும், நம்ம கண்மணியும் தனிய பேசிக்கிறாங்களாம். நா தப்புண்ணு சொல்லல. படிக்கிற வயசு. இந்த வட்டார கிராமங்கள்ல கஸ்ரப்பட்டவன்னாலும் படிக்கிறவன்னு பேரெடுத்தவன் கண்ணா. நா கண்மணிக்கும் வடிவா சொன்னேன். நீ அவசரப்படாத கொஞ்சம் படிச்சு பதினெட்டு வயசு முடிஞ்சாப்புறம் பார்ப்பம்னு. மங்களத்துக்கு இது தெரிஞ்சதால கொஞ்சம் பெரச்சனை. அதையும் சமாளிக்கலாம். பொம்புளைக்கு புடிச்சதுதான் வாழ்க்கை. இதுதான் என்னோட விருப்பம்மா. நா என்ன சொல்றேன்னா கொஞ்சம் படிச்சிறட்டும் மேன்னுதான். சோதனைக்கும் ஒரு மாசம்தானே இருக்கு" சிங்கராயர் பேசியபோதே பிளாஸ்ரிக் குவளையில் தேநீர் கொண்டு வந்தான் கண்ணா. அவனுக்கும் இங்கே பேசியது கேட்டிருக்கும்.

எல்லா மனிதர்களுக்குமே என்ன பேசுவது என்று குழம்பிக் கொள்ளும் ஒரு தருணம் வரும். அப்போது மௌனம் மட்டுமே பேச்சாகும். செல்லமுத்துவுக்கு இது அப்படியான தருணம்.

வட்டார கிராமங்களுக்குள்ளே கொஞ்சம் வசதியானவர்களிடம் இருக்கும் திமிர்ப்பேச்சு சிங்கராயரிடம் இல்லை. கடவுள் பணத்தை கொடுப்பார். பணிவை நாம்தான் கேட்டுப் பெற வேண்டும். பணிவு உடையவர் பணத்தை தேடிப்பெற வேண்டும். இது இரண்டும் ஒன்றாக ஒருவனிடம் இருக்குமானால் அப்படியானவன் தெய்வத்தின் நண்பனாகி விடுகிறான். சிங்கராயரிடம் இந்த இரண்டுமே போதுமான அளவுக்கு இருக்கிறது.

தேநீரைக் குடித்த பின்பு "நல்லா இருந்திச்சிப்பா தேத்தண்ணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனமாப்படி. பதினோராம் வகுப்பு சரியா முடிச்சாலே நம்ம கிராமத்துள்ளேயே அரசாங்கத்தோட சம்பந்தப்பட்ட வேலை எடுத்திர்லாம். மனச கொழுப்பிக்காதை. நல்லா சோதனை எழுது. மிச்சத்த நா பார்த்துக்கிறேன் சின்ன மனசுங்கள சிதறடிக்க நா விரும்பல வர்றேன்" எழும்பினார் சிங்கராயர்.

பதினாறு வயதிலே திருமணம் புரியும் ஊரில் பதினாறு வயதிலே காதலிப்பது தப்பல்லவே. காதலுக்கு மனம் பக்குவப்பட வேண்டும். திருமணத்திற்கு உடலும் பக்குவப்பட வேண்டும். பிஞ்சிலே கனியும் பழங்கள் வடிவத்திலே பழங்களாய்த் தெரிந்தாலும் உரிய சத்துக்களை கொண்டிராது. சிங்கராயர் சொன்னது சரிதானே. மங்களத்தை சிங்கராயர் காதலித்துதான் கைப்பிடித்தார். பதினைந்து வயதிலே காதலித்தார். பதினேழு வயதிலே கைப்பிடித்தார்.எட்டு வருடங்களின் பின் தான் கண்மணி பிறந்தாள். தானும் காதலித்ததால் தான் என்னவோ இந்தக் காதலை பிளவுப்படுத்த சிங்கராயர் விரும்பவில் லையோ!

சமூகத்திலே எழுதப்படாத ஒரு மனோநிலை இருக்கிறது. விழுந்து விழுந்து காதலித்து திருமணம் செய்து கொள்பவர்கள் கூட தமது பிள்ளைகளின் காதலை விரும்புவது அரிது.

தமது காணியை விட்டு சிங்கராயர் தெருவிலே கால் பதிக்கும் வரை அவரோடு செல்லமுத்துவும் கண்ணாவும் சென்று வழியனுப்பி வந்தார்கள். கடுதா நாயும் பின்னே சென்றது. கிராமங்களில் வளரும் நாய்களுக்குக்கூட வரவேற்கவும் வழியனுப்பவும் பண்பு தெரிந்தி ருக்கிறது.

செல்லமுத்து என்ன பேசுவாள். மகனை திட்டித்தீர்த்துப் பேச அவளுக்குத் தெரியாது. அது அவளால் முடியவும் முடியாது.

"ஏம்ப்பா கண்ணா, சிங்கராயர் பொண்ணோட நீ பேசுறீயாப்பா. எத்துன நாளா? அவங்க பெரிய ஆளுங்கப்பா. எனக்கு தெரியும்ப்பா நீ வழி தவறி போகமாட்டே. நா படிக்கலப்பா. நீ படிச்சிருக்கே. ஒனக்கு சரி புழை தெரியும்தானேப்பா" என அவனின் நாடியை தடவிய படியே சொன்னாள் செல்லமுத்து. கண்ணா கண்மணியை காதலிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை என்றால் அதைத் தடுக்கும் மனது செல்லமுத்துவிடம் இருக்கப்போவதில்லை. பிள்ளையின் விருப்பத்தை அவள் மீறப்போவது துமில்லை. சிங்கராயர் வந்து சுமுகமாகவே கதைத்து விட்டுப் போனதால் செல்லமுத்துவுக்கு தலை வெடிக்கும் குழப்பம் இல்லை. நல்லவேளை மங்களம் வரவில்லை. வந்திருந்தால் ஒரு புயலே வீசியிருக்கும்.

"அம்மா இதாம்மா நடந்திச்சி. ஒனக்கு இதெல்லம் சொல்லக்கூடாதுன்னு சொல்லல. இப்ப சொல்றேம்மா" என கண்ணா காதல் விசயத்தின் கருப்பொருளை செல்லமுத்துவுக்கு ஒப்பித்தான். செல்லமுத்துவுக்கு அப்போது தான் விடயமே புரிந்தது.

கண்மணிக்கு திருமணம் செய்து வைப்பது பற்றிய பேச்சுக்கள் மங்களத்தின் வாயாலே அப்பப்போ வெளிப்பட்டிருக்கின்றன. மாரியம்மன் கோயிலருகிலுள்ள காளிராசா என்பவரின் மகனுக்கு கண்மணியை முடித்து வைப்பதே மங்களத்தின் எண்ணம். அவன் வயதோ முப்பது. அப்போது கண்மணிக்கு வயது பதினைந்து. இந்தக் கல்யாணத்திற்கு சிங்கராயர் எதிர்ப்பு தெரிவித் திருந்தார். இந்த நிலையில் கண்ணாவிடம் இதைப்பற்றி கண்மணி புலம்பியிருக்கிறாள்.

அன்று வகுப்பில் கண்ணாவும் கண்மணியும் இருந்தனர். "கண்ணா எங்கம்மாட போக்கே எனக்கு பிடிக்கல. நா ஓங்கிட்ட சொல்லணும். நா ஒன்னய மனசுக்குள்ள வெச்சிருக்கேன். எப்ப நீ நா மயங்கி விழுந்து காயப்பட்டப்போ மருந்து கட்டிவிட்டியே அப்பவே நா ஓங்கிட்ட விழுந்திட்டேன். என்னைய அம்மா புரிஞ்சிக்கிறாங்க இல்லை. எனக்கு உண்மையான அன்பு தர யாருமே இல்லடா. தெருவுல திடீர் மயக்கம் போட்டு விழுந்தப்போ ஒன்னோட மடியில இருந்தனாம்னு சொன்னாங்க கண்ணா புரிஞ்சிக்கோ.."

"ஏய்.. கண்மணி எங்க குடும்பம் எப்டி இருக்கு. ஓங்க குடும்பம் எப்டி இருக்கு. நீ மட்டுமில்ல யாரு மயக்கம் போட்டு விழுந்தாலும் அப்டி காப்பாத்தி இருப்பேன். நம்ம வயசு என்ன தெரியுமா? பதினைஞ்சி வயசு. ஊருல எல்லாரும் கல்யாணம் கட்றாங்கண்ணு நாமளும் படிப்ப விட்டுவிட்டு கெட்டுப்போறதா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கல்யாணம் வேணா. நீதான் எனக்கின்னு இருந்தா போதும். கட்டாயப்படுத்தி வீட்டுல கல்யாணம் செஞ்சி வைக்கப்பார்த்தா நீயே ஒரு முடிவு எடுத்து ஓங்க வீட்ட கூட்டிப்போ. நாம அதுவரை படிச்சிட்டே இருப்பம்டா..”

“வேணா கண்மணி நம்ம அம்மா வெயிலில வேகித்தானே என்னய படிப்பிக்கிறாங்க. நா அந்த கஸ்ரத்துக்கு ஒரு பலன் குடுக்கணும்டீ. தயவு செஞ்சி இப்டி பேசாத..”

“இதோ பாரு கண்ணா.. நா சாகிறதுன்னு முடிவு எடுத்திருந்தேன். ஓங்கிட்ட பேசிட்டு முடிவு எடுக்கத்தான் இருந்தேன். இதோ பாரு அலரிவெதை. எனக்கு அம்மாகூட இருக்கவே புடிக்குதில்லை. நீயும் கைய விரிச்சிட்டா நா வீட்ட போக மாட்டேன்டா. நீ போ நா எங்க சரி போயி செத்துடுறேன்...”

இதுதான் நடந்தது.

செல்லமுத்துவுக்கு விடயம் தெளிவாகியது.

கண்ணா செல்லமுத்துவுக்கு சொன்னாள் “பெறகுதாம்மா... நா சொன்னேன். ஒனக்கின்னு இருப்பேன் ஆனா நீயும் படி. நானும் படிக்கிறேன். அவசரப்பட்டு நாம கெட்டுப்போயிற வேணாம்னு. அம்மா நா ஒனக்கு துரோகம் பண்ண மாட்டேம்மா” சொல்லியபடியே செல்லமுத்து காலிலே விழுந்தான் கண்ணா. அவன் கண்களில் நீர்க்குளம்.

கீழே இருந்த செல்லமுத்து அவனை தன் மடியிலே கிடத்தினாள். தலை தடவினாள். காதல் என்பது கண்களின் சங்கமம் மட்டுமல்ல. சில தவிர்க்க முடியாத விடயங்களின் சங்கமமாயும் அப்பப்போ ஏற்படுவ துண்டு. களங்கமற்ற வார்த்தையின்றி “காதல்” எனும் சொல்லைப் பயன்படுத்தாது பூத்திருக்கிறது இந்த கிராமத்துக் காதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௦௯

நேரம் மாலை மூன்று மணி.

சூரியன் தன் ஒளிக் கதிர்களை கொஞ்சம் கூடுதலாகத்தான் அள்ளி வீசுகிறான். வேலைகாரர்களைத்தவிர, யாரும் வெளியே வராமல் மரங்களுக்குக் கீழே தரித்திருக்கும் நேரம்.

ஒரு பழைய சேலைத் துண்டினால் தலைப்பாகை போன்று தலையை கட்டி வெயிலுக்கு பாதுகாப்பு கொடுத்திருந்தாள் செல்லமுத்து.

சுந்தரத்தார் காணியிலே இன்று நிலம் கொத்துகின்ற வேலை. சுந்தரத்தார் பயறு விதைக்கப் போறாராம். இன்று காலை ஏழு மணிக்கே வேலைக்கு வந்து, மண்வெட்டியால் கொத்தி, பண்படுத்தும் வேலையை தொடங்கிவிட்டாள் செல்லமுத்து. எனவே, இன்று நான்கு மணியுடன் வேலையை முடித்துக் கொள்வாள். எட்டு மணிக்கு வந்தால் ஐந்து மணிக்குப் போகலாம்

அவள் வளர்த்த சர்க்கரைப் பூசனிக் கொடியில் ஒரு பூசனி நன்றாக முற்றியிருந்தது. காலை, நேரத்துக்கே எழும்பி அதைப் பிடுங்கி, சிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

துண்டுகளாக வெட்டி அவித்தாள். கண்ணா, கணவர் எல்லோரும் அதைத்தான் சாப்பிட்டார்கள். செல்லமுத்துவும் சாப்பிட்டுவிட்டு இரண்டு, மூன்று துண்டுகளை மதிய உணவுக்காக கட்டி வந்திருந்தாள். அவிக்கப்பட்ட பூசனித் துண்டுகளை உண்டு விட்டுத்தான் இப்போது வரை இந்த வெயிலில் நின்று நிலம் கொத்துகிறாள். சாப்பாடு இல்லாமலே வேலை செய்யும் அவளுக்கு இந்த பூசனித் துண்டுகளை உண்டது எத்தனை உற்சாகத்தைக் கொடுக்கும். பூசனி அவித்துச் சாப்பிடுவது அவர்களின் தொடர்ச்சியான ஒன்றுதான். வழமையாக அணியும் ஒரு பழைய நீளக்கை "சேர்ட்" அணிந்தே வேலை செய்கிறாள் செல்லமுத்து.

நெற்றி வியர்வையை சுட்டு விரலினால் துடைத்தபோது சுந்தரத்தாரின் மனைவி பவளக்கொடி கூப்பிட்டாள். "ஏய் செல்லமுத்து இங்க வா.. வேகமாக வாவேன்".

மண்வெட்டியை தோளிலே வைத்தபடி வேகமாக பவளக்கொடியை நோக்கி நடந்தாள் செல்லமுத்து.

"என்ன... பவளம் அக்கா..."

"அடியே செல்லமுத்து பக்கத்து வீட்டுக்காரங்க அவங்க பையனுக்கு பொறந்த நாள் செய்யிறாங்க. அயலட்டையில இருக்கிற ஆக்களைக் கூப்பிட்டு பலகாரம் குடுக்குறாங்க. ஒன்னையும் வரச் சொன்னாங்க. வா போவோம். மொகத்த சும்மா கழுவு"

அக்கா... நா அங்கையா? நா இருக்கிற நெலமையில வேணாம்க்கா.

"செல்லமுத்து.. அவங்களாகவே கூப்புடுறாங்க. நீ உள்ளுக்கு போக வேணா. நம்ம வேலிக்கரையில நின்னு பலகாரம் மட்டும் சாப்புட்டுட்டு வா. அவங்க காணியில வேலை செய்யிற ஆக்கள் அதோ சாப்புடுறாங்க".

பவளத்தின் பேச்சுக்கு எப்படி மறுபேச்சு சொல்வது? செல்லமுத்துவுக்கு இப்படியான இடங்களுக்குப் போய் பழக்கமில்லை. அவள் கஷ்டப்பட்டு வேலை செய்வதை எப்போதும் கவனிக்கும் அந்த வீட்டுக்காரர்கள் அவளை அன்போடு அழைத்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரத்தார் வீட்டுக் கிணற்றிலே முகத்தை கழுவிக்கொண்டு பதுங்கிப் பதுங்கி போகிறாள் செல்லமுத்து. அவளைக் கண்ட அந்த வீட்டுக்கார அம்மா “ஏய் செல்லமுத்து.. வாங்க நம்ம பையனுக்கு பன்னென் டாவது பொறந்த நாளு. சும்மா செஞ்சோம். ஒங்கள மாதிரி ஆக்களுக்கு சாப்பாடு குடுத்தா அதுவே போதும்” அந்த அம்மா அழைத்தபோது நாணப்பட்டு நடந்தாள் செல்லமுத்து.

"நா இந்த மாமரத்துக்கு கீழேயே நிக்கிறேம்மா” முன் செல்ல மறுத்தாள் இவள். சுந்தரத்தார் காணிப் பக்கமாக பிறந்த நாள் நடக்கும் வீட்டின் பின்புறம் உள்ள மாமரத்தருகில் நிற்கிறாள் செல்லமுத்து. “வாங்க பெருசா ஆக்கள் இல்ல. நம்ம உறவுக்காரங்க பத்துப் பதினைஞ்சு பேருதான் இருக்காங்க...” திரும்பவும் அந்த அம்மா சொன்னார்.

செல்லமுத்துவுக்கு ஒரு மாதிரி இருந்தது. பிறந்த நாளில் ஏதுமே கொடுக்காமல் உபசரிப்பிலே அவளால் கலந்து கொள்ள முடியவில்லை. ஏதுமே கொடுப்பதற்கு இல்லாததால்தான் ஊரில் எந்த விசேட நிகழ்வுகளுக்கும் அவள் போவதுமில்லை. அந்தியேட்டிக் கிரியைக ளின் நாட்களுக்கு மட்டுமே அவள் சென்று உணவுண்டு வருவாள்.

நாணத்துடன் கூனிக்குறுகி வீட்டின் முன்புறம் அந்த அம்மாவுடன் செல்கிறாள் செல்லமுத்து. அந்த வீட்டாரின் காணியிலே கூலிவேலை செய்யும் முனியம்மா, கட்டாச்சி ஆகியோரும் வேலை செய்த அதே நிலையில் வந்து பலகாரம் உண்பதைக் கண்டபோது செல்லமுத்து வின் நெஞ்சு கொஞ்சம் துணிவு கண்டது. பிறந்த நாளில் புகைப்படம் எடுப்பதற்காக சிறு அலங்காரம் செய்தார்கள். அவர்களி டமும் அவ்வளவு வசதியில்லைதானே.

“கேக்” வடிவம் கூட சவர்க்கார சிற்பம் தான். எல்லாமே உண்மை போல இருக்கிறது. அவை உண்மையா, வடிவமைப்பா என்பது செல்லமுத்துவுக்கு தெரியாது. இப்படியானவைகளைக்கூட அவள் எப்போதோ இருந்துவிட்டு காணுவதுதான். பலகாரம் கொடுத்தார்கள். ஒரு பலகாரம் எடுத்தாள் செல்லமுத்து. “எடும்மா. வடிவா சாப்புடு. நாம எல்லாம் ஒரே ஜாதி. பொறந்த நாள் கொண்டாட்டம் நமக்கில்லை. கடவுளுக்கு நன்றி சொல்லுற நாள். இந்த வயசுவரை வைச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கார்ல. அந்த நன்றிய அவருக்குச் சொல்ல அவரோட வடிவத்துல இருக்கிற ஏழைகளுக்கு ஏதோ ஒன்னு செய்யிறது தான் பொறந்த நாளு. குடிச்சிட்டு கும்மாளம் அடிக்கிறதுல்ல. அதுக்கு பொறந்த நாளுன்னு பேரில்ல. வசதியானவங்கள கூப்பிட்டு வாயார சாப்பாடு போடுறத விட ஏழைங்களுக்கு ஏதோ ஒரு பணிவிடை செய்யிறது வானத்தை விட பெரிசும்மா" அந்த இடத்திலே வீட்டுப் பெரியவர் பேசியது உண்மையாகத்தான் இருந்தது. செல்லமுத்துவின் மனதிலே ஒரு ஆசை பூத்தது. கண்ணாவின் புகைப்படம் அவர்களிடம் இல்லை. இந்தச் சோடனையிலேயே கண்ணாவை ஒரு படம் எடுத்து விட்டால் அந்தக்குறை தீர்ந்து விடும் தானே.

"அம்மா இங்க வாங்களேன்" செல்லமுத்து அந்த வீட்டுக்கார அம்மாவிடம் குரல் கொடுத்தாள்.

"என்ன செல்லமுத்து"

"ஏம்மா... கேட்குறேன்னு கொறை நெனைச்சிடாதயுங்க"

"அட சொல்லும்மா"

"ஏம் பையனோட படம் ஒன்னும் இல்லம்மா. அவனை கூட்டியாந்தா இதுல வெச்சு ஒரு படம் எடுக்க விடுவீங்களாம்மா... அதான்"

"அட நீ என்னம்மா. தாராளமா எடும்மா. பள்ளிக்குடியிருப்புல இருந்து படம் புடிக்கிறவரு வந்திருக்கிறாரு. அஞ்சி மணிக்குத்தான் போவாரு. அதுக்கிடையில் ஓம்மகன் வந்துருவான்ல..."

செல்லமுத்துவுக்கு தாகத்துக்கு தண்ணீர் கிடைத்த திருப்தி. ஓடிச்சென்று கண்ணாவை கூட்டி வர முடிவு எடுத்தாள். அதற்கிடையில் சுந்தரத்தாரிடம் சென்று இன்றைய கூலிக்காசை பெற்றுக் கொண்டாள். அதில்தான் ஒரு புகைப்படத்திற்கு காசு கொடுக்க வேண்டும்

வீடு நோக்கி ஓடுகிறாள்

நன்றாக அவளுக்கு மூச்சிரைக்கிறது. மகனை படம் எடுக்கப் போகிறோம் என்ற ஆனந்தம் அந்த களைப்பை எல்லாம் இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

OHA-
JPL

செய்கிறது. ஓடுவதும் நடப்பதுமாக வீட்டுக்கு விரைகிறாள். மனசு துள்ளிக்குதிக்கிறது. எத்தனை கால ஆசை. பாட்டாளிபுரத்திலே படப்பிடிப்பாளர்கள் யாருமே இல்லை. ஓரளவு வசதியுள்ளவர்கள் வெளி இடங்கள் சென்று படம் எடுப்பார்கள். சிலர் படப்பிடிப்பாளரை கூட்டி வருவார்கள். படப்பிடிப்பாளர் வருவது என்றால் கூடுதல் காசு. இந்த இரண்டு முறையும் செல்லமுத்து குடும்பத்திற்கு சாத்தியமற்றது. இன்று வாய்த்த சந்தர்ப்பம் அவளைப் பொறுத்தவரை பேரதிர்ஷ்டம் தான்.

வீட்டருகிலே உள்ள ஒரு புறத்திலே கண்ணா மரவள்ளிச் செடிகள் நடுவதற்கு கிடங்கு தோண்டுகிறான். கோழிகள் அதிலிருந்த புழுக்களை தின்று கொண்டிருக்கின்றன. அயல் வீட்டுக் கோழிகளும் பகல் வேளைகளில் இங்கு வந்து மேய்ந்துவிட்டு மாலை வேளையானதும் தமது இருப்பிடம் சென்று விடும்.

"ஏம்ப்பா கண்ணா அத விட்டிட்டு ஓடியா.. ஓடியா" மூச்சிரைத்தபடியே கூப்பிட்டாள். "என்னம்மா என்னான்னு சொல்லேன். மரவள்ளிக் கட்டை கொஞ்சம் சேனைபுரத்துல இருந்து கொணர்ந்தேன்" என்றபடி வேலையிலேயே நின்றான் கண்ணா. "சுந்தரத்தார் காணிக்குப் பக்கத்துல நாகராசா அண்ணே வூட்டுல பொறந்த நாள் செய்றாங்க. பள்ளிக்குடியிருப்புல இருந்து படம் புடிக்கிறவங்க வந்திருக்காங்க. வடிவா வீடெல்லாம் சோடிச்சிருக்காங்க. நா படம் புடிக்க கேட்டேன். ஓம்ன்னு சொன்னாங்க அதான் ஒன்னய கூட்டி வர வந்தேன். வேகமா சேட்ட போடுப்பா".

"சும்மா இரும்மா. இருக்கிற கஷ்டத்துல படம் வேற வேணாம்மா. ஒரு படம் நூறு ரூபா. நாலஞ்சு கிலோ அரிசி வாங்கலாம்".

"ஏம்ப்பா நா ரெண்டு நாளைக்கு கூடநேரம் வேலை செஞ்சா அந்த காசை ஒழைச்சிருவேம்ப்பா. ஒன்னய படத்துல பார்க்க ஆசைப்பா. அம்மாட ஆசைக்காக சரி வாவேம்ப்பா"

"அப்ப நீயும் ஏங்கூட சேர்ந்து படம் எடு நா வர்றேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமுத்துவுக்கு அவனை தனியாக படம் எடுக்கவே ஆசை. பிள்ளை விருப்பத்தை தட்டவா முடியும். சம்மதித்தாள். கண்ணா முகம் கழுவ வேண்டுமே. கேனிலே தண்ணீர் இல்லை. கேனை எடுத்துக் கொண்டு ஓடிச்சென்று பக்கத்து வீட்டு சீனியம்மா கிணற்றில நீர் கொண்டு வந்தான். போடக்கூடிய நிலையிலே கண்ணாவிடம் இருப்பது பாடசாலைக்கு அணியும் "சேர்ட்" மட்டுமே. அதை அணிந்து கொண்டான். செல்லமுத்து ஓரம் மெல்லிதாய் கிழிந்திருந்த சேலை கட்டினாள்.

இருவரும் வேகமாய் நடந்தார்கள். ஒரு படத்தை விட இன்னும் ஒரு படம் எடுக்க அவர்களிடம் வசதி இல்லை. நீண்ட காலத்திற்குப் பிறகு செல்லமுத்து அதிகமாய் சந்தோஷப்படக் காரணம் இது.

ஆனாலும் படம் பிடித்துவிட்டு தெருவால் வரும்போது அவள் மனசு ஏனோ சஞ்சலப்பட்டது. அது ஏன் என புரியவில்லை. ஆனாலும் கண்ணாவின் கைகளைப் பிடித்தபடி வந்தாள்.

பொது நூலகம்
06 NOV 2019
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

தெருவில் நின்ற நாயுண்ணி மரங்கள் நல்ல பழங்களை பிரசவித்திருந்தன. நாயுண்ணி பழத்தினுள்ளும் கடவுள் அற்புத சுவையை வைத்திருக்கிறார். அது சில பறவைகளுக்கும் ஏழைக ளுக்குமே தெரியும்.

தெருவிலே நின்று அந்த அந்தி சாயும் பொழுதில் நாயுண்ணிப் பழம் உண்டார்கள். அருகில் நின்ற சூரை மரத்திலும் கண்ணா சிறு பழங்களை பிடுங்கினான். பாட்டாளிபுரத்திலே நாவல் மரங்கள் அதிகம். செல்லமுத்து காணிக்குள் கூட இரண்டு நாவல் மரங்கள் நிற்கின்றன. நாவற்பழகாலத்திலே கண்ணா மரமேறி பழங்கள் பறிப்பான். செல்லமுத்து அவற்றை பள்ளிக்குடியிருப்பு, சேனைபுர பகுதிகளுக்கு கொண்டு சென்று விற்று வருவாள். அதை உண்டு மதியச் சாப்பாட்டை ஈடு செய்யும் நாட்களும் உள்ளன. பாட்டாளி புரத்தை அண்டி காடுகளும் உள்ளதால் பாலைப்பழ காலங்களிலும் கண்ணாவும் செல்லமுத்துவும் காட்டோரத்து உயரம் குறைந்த மரங்களில் பாலைப்பழம் ஆய்ந்து விற்பதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை வீட்டை விட்டுக் கிளம்புவது. அங்கிருந்து திரிவது. மாலை வருவது இதுவே காளியப்பனின் வழமை. தனக்கு மனைவி பிள்ளை உண்டு என்பதைப்பற்றி அவன் சிந்தித்தது இல்லை.

செல்லமுத்துவின் காணி எல்லையில் நின்ற ஈச்சமரச்செடியை கண்ணாவும் செல்லமுத்துவும் கடக்கும் போதே பழைய மிதி வண்டியில் விறகு கட்டி வியாபாரம் செய்யும் கிளி ஐயா வந்து கொண்டிருந்தார். இவர்களைக் கண்டதும் அப்படியே நின்றார். அவரின் பார்வை ஒரு விதமாகத்தான் இருந்தது.

"என்னா.. கிளி ஐயா நின்னுட்டீங்க..." செல்லமுத்து கேட்டாள்.

"ஏய் செல்லமுத்து ஓம் புருசனை பள்ளிக்குடியிருப்பு காவல்துறை காரங்க அடைச்சிட்டாங்க".

அதிர்ந்தாள் செல்லமுத்து. இதற்காகத்தானா சிறிது நேரத்திற்கு முன்பு நெஞ்சு சஞ்சலப்பட்டது. பதறியபடியே செல்லமுத்து கேட்டாள் "ஏ... ஏன் கிளி ஐயா என்ன பிரச்சனை.."

"ஏதோ சேனைபுர ஆட்களோடு மாடு ஒன்னை களவெடுத்து எறைச்சிக்கு குடுத்திருக்கானாம். அவங்க ஓம் புருசனிலதான் சந்தேகப்பட்டு சொல்லி இருக்காங்க. சேனைபுர மகாலிங்கம் வீட்டுல ஓம்புருஷன் நின்டப்போ காவல்துறைகாரங்க வந்து புடிச்சிட்டு போயிருக்காங்க" சொல்லியபடியே வெற்றிலையை துப்பினார் கிளி ஐயா. கிளி ஐயாவிற்கு எழுபது வயது. இந்த வயதிலும் பாட்டாளிபுர மிருந்து விறகு கட்டி தூர இடங்களுக்கு விற்பவர் கிளி ஐயா.

அவள் ஏது செய்வாள்? கண்ணாவை படம் பிடித்த சந்தோஷத்தை, இந்தச் செய்தி தின்னுவதாகவே இருக்கிறது. தீர்த்துக்கொள்ள முடியாத நிறைய பிரச்சினைகள் அதிகமாய் ஏழைகளையே சூழ்கின்றன. பள்ளிக்குடியிருப்பு காவல்துறை பாட்டாளிபுரத்திலிருந்து ஆறு மைல்கள் தொலைவில் உள்ளது. இந்த வட்டார கிராமங்களுக்கான சிறிய காவல்துறை நிலையம் அங்குதான் உண்டு. ஏற்கனவே மாடு களவெடுத்து பிடிபட்டு ஒரு வாரத்திற்கு மேல் அடைக்கப்பட்டு இருந்தவன் காளியப்பன். இதுவும் அவன்தான் எடுத்தான் என உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டால் கொஞ்சம் கூடுதலாக தண்டனை கிடைக்கும். மாட்டிற்கான காசினை கட்டும் வசதியுள்ளவனா அவன்.

இந்த மாலைப்பொழுதினிலே பள்ளிக்குடியிருப்பு போனால் திரும்பி வர எப்படியும் இரவு ஒன்பது அல்லது பத்து மணியாகும். இதைவிட அங்கு எப்படியான நிலையோ தெரியாது. காளியப்பனுக்கு என்ன பிரச்சனை என்றாலும் செல்லமுத்துவை தவிர யாருண்டு? கதிரவன் பாட்டாளிபுரத்து மரங்களின் உயரத்தை விட கீழிறங்குகிறான். இந்த நிலையிலும் கண்ணாவின் இரவுணவு பற்றிய சிந்தனையும் செல்லமுத்துவுக்கு வந்தது.

காலை அவித்த பூசணிக்காயின் மிகுதி அவிக்காத துண்டொன்று கிடந்தது. அதனை வேகமாக வெட்டி சிறிது தண்ணீரும் உப்புமிட்டு அடுப்பிலே ஏற்றினாள். "ஏம்பா கண்ணா அம்மா பள்ளிக்குடியிருப்பு போயிட்டு வர்றேன். பத்துப் பதினைஞ்சு நிமிசம் கழிச்சி சட்டிய எறக்கு. பூசணிக்கா அவிஞ்சதும் சாப்பிட்டுப்புட்டு இரு. இல்லாட்டி சீனியம்மா வூட்டுல நில்லு. என்ன பிரச்சினையின்னு அம்மா பார்த்திட்டு வந்துடுறேன்.."

"அம்மா நானும் வர்றேம்மா நீ மட்டும் ஏம்மா போறே"

"வேணாடா ஒனக்கு சோதனையும் வருதில்ல அவ்வளோ தூரம் நடந்து வந்திட்டு நாளைக்கு பள்ளி போக கஸ்ரப்படுவே. நாளைக்கி படிக்கவும் வேணும்தானே. நல்ல பாலை வெறகு இருக்கு. எரிச்சியின்னா அந்த வெளிச்சத்துலேயே படிக்கலாம். இல்லாட்டி சீனியம்மா பையனுக்கு படிக்க அவங்க வெளக்க வெச்சா அங்க போயி படிப்பா" செல்லமுத்து சொன்ன போது கண்ணா மேலும் பேசவில்லை. "தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க மந்திரமில்லை" என்பர். கண்ணாவைப் பொறுத்தவரை "தாயிற் சிறந்த கோயிலு மில்லை அவள் சொல்போல் மந்திரமுமில்லை" என்பதுதான் உண்மை. பெரிய கட்டைகளை எரித்து அந்த வெளிச்சத்திலே படிப்பதும் பாட்டாளிபுரத்தில் அநேக மாணவர்களின் வழமை.

படம் எடுப்பதற்காக ஏற்கனவே ஓடி வேர்த்த அதே தேகம். அவளிடம் பாதணியும் இல்லை. கையிலே இரண்டு இறப்பர் காப்புகள். காதிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரமான கறிவேப்பிலைக்குச்சி. இவை போதாதா அவளுக்கு. கல் வீட்டினை கட்டிவிட்டு மாடி வீடு கட்டமுடியவில்லையே என ஏங்கி மனக்குறையோடு வாழும் ஏராளம் மனிதர்களை விட அவள் நிறைவோடு வாழ்கிறாள்.

வெறுங்காலுடன் வேகமாக நடக்கிறாள்...

"மொதலும் புடிச்சப்போ அவருக்கு அடி அடின்னு அடிச்சாங்க. இப்ப அடிச்சாங்களோ என்னவோ.... ஐயோ அவருக்கு அடிக்கக்கூடாது." வேகமாக நடக்கும் போதே அவள் மனது கண்ணீருடன் வேண்டுதல் செய்கிறது. அவளின் வேக நடையே ஒரு ரகம். சிலர் ஓடுவதற்கு சமமான நடையது. சாப்பிடாவிட்டாலும் கூட நடக்கத் தொடங்கி விட்டால் நிற்கவே மாட்டாள்.

"அவருக்கு வருந்தமிருக்குன்னு காவல்தொறைகாரங்களுக்கு தெரியவா போகுது. இவரும் ஏன் தான் அப்புடி செய்யணும் ஏன் கிட்ட காசு கேட்டிருந்தா ரெண்டு மணித்தியாலயம் கூட வேலை செஞ்சு சரி குடுத்திருக்க மாட்டனா" சிந்தனைகள் அவளுக்குள் உதித்துக் கொண்டே இருந்தன.

இருட்டி விட்டது. இரவு 7:30 மணி.

இது வளர்பிறைக் காலம் பள்ளிக்குடியிருப்பு காவல்துறை நிலையத் திற்கு சென்று சேர்ந்து விட்டாள் செல்லமுத்து. காவல்துறை ஆட்களிடம் விடயம் சொன்னாள்.

அந்த சிறு சிறைக்கூட்டுக்குள் படுத்திருக்கிறான் காளியப்பன். இரண்டு மூன்று அடிகள் போட்டிருக்கிறார்கள் போல. அவனுக்கு இதெல்லாம் பெரிய விடயமாகத் தெரியவில்லை. நீண்ட காலம் வைத்திருந்தாலும் காவல்துறை உணவை உண்டு கொண்டு இருந்து விடுவான். ஆனாலும் செல்லமுத்து கொடுக்கும் அன்பை அவனுக்கு இங்கு கொடுப்பார்களா? அதை நினைத்து காளியப்பன் கொஞ்சம் வெதும்பி னான். எந்த அரக்கத்தனமான ஆணும் ஒரு பெண்ணின் உண்மை யான அன்புக்கு அடங்கியே போய் விடுகிறான். அந்த அன்பு அருகே இருக்கிறபோது சாதாரணமாகத் தெரிந்தாலும் அது இல்லாத போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சைப்போட்டு பிழியுமல்லவா. இரவு பன்னிரெண்டு, ஒரு மணி கூட காளியப்பன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கத்துவான். அந்த இரவிலே எழுந்து எண்ணெய் தடவிய பலா இலையை நெருப்பிலே வாட்டி அதனை நெஞ்சிலே தடவி ஆறுதல் படுத்துவாள் செல்லமுத்து. விடியும் வரை அவனைத் தன் மடியில் வைத்திருப்பாள்.

"யோவ் வாய்யா வெளிய" காவல்துறை அதிகாரி சத்தமிட்டபோது தான் காளியப்பன் திடீரென விழித்தான். அவன் கண்களை முழுசிப் பார்த்த போது சிறைக்கூட்டுக் கதவை பொலிஸ் அதிகாரி திறந்தார். "நல்லவேளை நீ தப்பிச்சே வீடு போயி சேரு.. இந்த மாடு நீ திருடயில்ல. மொத மாடு திருடினதால ஒன்னைய புடிச்சி குடுத்திட்டாங்க. ஒரு பொம்புளதான் மாடு திருடியிருக்கா அவளே வந்து ஒத்துக்கிட்டா. இந்தக் காலத்துல இப்படியும் இருக்காங்க" சொல்லியபடியே காவல்துறை அதிகாரி அவனை வெளியே கொண்டு சென்றார்.

"நடடீ அங்க. ஒரு பொம்புளையா இருந்துகிட்டு மாடு திருடி வித்தும் இருக்கிறே. யாரும் சொல்லிருவாங்கன்னு நீயே வந்து உண்மைய ஒத்துக் கிட்டே. உள்ள போ. ஒன்னைய கவனிக்கிறேன்" கறுப்பு நிற அந்த பெண் காவல்துறை உத்தியோகத்தர் செல்லமுத்துவை கொஞ்சம் வெறித்தனமாகத்தான் ஏசினாள். அது காளியப்பனின் செவிகளில் விழுந்தபோதே திரும்பிப் பார்த்தான். அவள் என் மனைவி. நான் தான் மாடு திருடினேன் என ஓடிச்சென்று அவன் சொல்ல நினைக்கவில்லை. அவன் கொஞ்சம் புத்தி பலவீனமான வன்தான். அதை சாதாரணமாக எடுத்துக் கொண்டான்.

ஆனால் நெஞ்சில் ஒரு குத்தல் காளியப்பனுக்குள் இருந்தது. செல்லமுத்து சிறை முடித்து வந்ததும் இனி மாடு திருடுவது, கள்ளு குடிப்பது இவற்றை நிறுத்த வேண்டும் என நினைத்தான். மாடு திருடுவதே குடிக்கத்தானே. கள்ளு குடிப்பதை அவன் விடுவானா? என யாருக்குத் தெரியும்.

செல்லமுத்துவுக்கு பெரிய ஆறுதல். தான் சிறைக்கூட்டுக்குள் கிடந்து பாடுகள் அனுபவிப்பதை அவள் பெரிதாக நினைக்கவில்லை. கணவன் காளியப்பன் அந்தத் துன்பத்திற்கு உள்ளாகவில்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற ஆறுதல் அவளுக்குப் போதுமானதாக இருந்தது. பெண் காவல்துறை உத்தியோகத்தரின் பெரிய மோசமான வார்த்தைகள் கூட அவளை ஒன்றும் செய்யவில்லை. காளியப்பனிடம் வேண்டாத பேச்சா? வேண்டாத அடியா? “அவரு இருந்திருந்தாலும் இப்டி மோசமாதானே பேசி இருப்பாங்க. நாம அவரைக் காப்பாத்துனதே போதும்” என்றே அவளின் மனது அந்த சிறைக்குள்ளிருந்தும் சிந்தித்தது.

சிறை என்பதே ஒருவரின் சுதந்திரம் சிறை வைக்கப்படும் இடம்தானே. அந்த சிறைக்குள் நுளம்புகள் செல்லமுத்துவை தீண்டின. தன் குடிசைக்கு வெளியே படுத்தால் கூட அவளுக்கு அது சொர்க்கபுரிதான். நடுச்சாமத்திலே சிறைக்குள் இருந்து எழும்பி அழுதாள் “கண்ணா என்ன செய்வானோ, பூசணிக்கா அவியப் போட்டுட்டு வந்தேன். சாப்பிட்டிருப்பான். நம்ம வூட்டுல படுக்கிறானோ சீனியம்மா வூட்டுல படுக்குறானோ” கண்ணீர் ததும்ப யோசித்தாள். சேலையால் தன்னுடலை மூடிக்கொண்டு சிறையின் சுவரில் முதுகை சாய்த்து கண்களை மூடினாள். பாட்டாளிபுர வேப்பமரத்துக் காற்று அவளுக்கு நினைவில் வந்தது. அவளுக்கு இது புது அனுபவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

மாலை 05:30 மணி.

"ஏம்மா ஒன்னய பார்க்க ஓம் பையன் வந்திருக்கான்.." பெண் காவல்துறை சொன்னாள். ஒரு பெண்ணைப் பார்த்து அம்மா என்று சொல்கிறாள். இவள் மனிதாபிமானமுள்ள காவல்துறைதான். இன்று கடமையில் நிற்பவள்.

பாடசாலைக்கு அணியும் நீல நிற காற்சட்டை. செல்லமுத்து வாங்கிக் கொடுத்த அந்த "ரீசேட்" கையிலே ஒரு கடதாசிப்பை. அம்மாவின் அருகே கண்ணா வந்தான்.

செல்லமுத்துவினால் கண்ணாவை பார்க்கவே முடியவில்லை. குனிந்தபடியே சின்னப்பிள்ளை போல விம்மி விம்மி அழுதாள். கண்ணாவும் அழுதான். ஆனால் அவனே சொன்னான் "அழாதம்மா. அழாத.. ஏம்மா நீ".

"ஒனக்கு தெரியும் தானேப்பா அப்பாவுக்கு வருத்தம். அவருக்கு எப்டியும் அடிச்சு ஒதைப்பாங்க. மொதலும் மாடு களவெடுத்ததுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடிச்சு வெச்சிருந்தாங்கள்லே. அதாம்ப்பா நாந்தான் எடுத்தேன்னு சொல்லி இதுக்குள்ள வந்தேன். சாப்பிட்டியாப்பா"

"அட அத விடும்மா.. சாப்பாடா முக்கியம் ஒனக்கு அடிச்சாங்களாம்மா"

நேற்று கடமையில் நின்ற பெண் பொலிஸ் உத்தியோகத்தர் செல்லமுத்துவுக்கு அடித்ததை செல்லமுத்து கண்ணாவுக்கு சொல்ல வில்லை.

"இந்தாம்மா இத சாப்புடும்மா. நாந்தான் செஞ்சேன். சோறும் ஜப்பான் மீன் கருவாட்டுப் பொரியலும் இருக்கு. பொறும்மா நானே ஊட்டி விடுறேன்" கடதாசிப் பையிலுள்ள உணவைப் பிரித்தான் கண்ணா. செல்லமுத்து கண்களில் கண்ணீர் முட்டியது. ஒரு தாய் தன் பிள்ளையை பிரசவித்து எடுக்கும் போது காணும் இன்பத்தை இன்னுமொரு தடவை காணுவது அதே பிள்ளை தனக்கே தாயாக மாறி நிற்கும் கணத்தில்தானே. ஒன்றைப் பறித்து ஒன்றை கொடுப்பது தானே இறைவன் வழமை. உலகில் சிலர் எமக்கு இப்படி ஒரு மோசமான பிள்ளை கிடைத்து விட்டதே என ஏங்குகிறார்கள். செல்லமுத்துவுக்கு அந்த ஏக்கம் இல்லை. கணவன் இரும்பெனினும் பிள்ளை தங்கம் அல்லவா?

வெள்ளை அரிசிச் சோற்றோடு கருவாட்டினை சேர்த்து சிறு உருண்டையாக்கி அம்மாவுக்கு ஊட்டினான் கண்ணா. செல்லமுத்து வுக்கு சிறையிலும் சொர்க்கம் கிடைத்த உணர்வு. அவளும் தன் கையினால் அவனுக்கு ஊட்டினாள். "அரிசி கருவாடு எல்லாம் கடனுக்கு எங்கையாச்சும் வாங்கனியாப்பா" கண்ணாவிடம் வினாவி னாள் செல்லமுத்து. "இல்லேம்மா சேனைபுர வயல் செய்யிற ஆக்களோட வூட்டுல நெல்லு மூட்டை ஏத்துற வேலை இருந்திச்சி. பள்ளி முடிஞ்சு வர்றப்போ ஏத்த வருவேன்னு சொன்னேன். பாட்டாளிபுர கிளி ஐயாதான் வேலைக்கி கேட்டார். பள்ளிய நிப்பாட்டாம இதையும் முடிச்சிட்டேன். காசுதான் தர்றேன்னாங்க. நாந்தா அரிசியும் கருவாடும் சீனியும் வாங்கிகிட்டேன். சீனியம்மாவும் சாப்புட வரச் சொன்னிச்சி. நா நாளைக்கு வர்றேன்னு சொன்னேன். அப்பாவுக்கும் சாப்பாடு வெச்சேம்மா" நடந்த விடயத்தை கண்ணா சொன்னபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கின் நீரை துடைத்தபடியே அவனை அணைத்து முத்தமிட்டாள் செல்லமுத்து.

இந்தப் பிள்ளை வளர்ந்து எங்களை பார்க்குமா? என நெஞ்சிலே பாரத்தோடு வாழும் பெற்றோர் ஆயிரமாயிரம். இந்தப்பிள்ளை என்னை கடைசி வரை சுமப்பான் என உறுதியாக நம்பும் பெற்றோர் வெகு சிலரே. அதில் செல்லமுத்துவும் ஒருத்தி. இன்று நெல்லு மூடைகள் ஏற்றும் வேலைக்கு சென்றபடியால் கண்ணாவுக்கு மாலை நேர வகுப்பு இல்லை. காவல்துறை நிலையம் அமைந்திருக்கும் பள்ளிக்குடியிருப்பு ஆசிரியரிடம் தான் அவன் வகுப்பிற்கு வருவதுண்டு. பின்பு அவரிடம் சென்று நிலைமையை சொல்ல நினைத்தான்.

பாட்டாளிபுரத்தை அண்டிய வட்டார ஊர்களில் ஆண்களின் வேலைக்கு சம்பளம் அதிகம். சில கடினமான வேலைகளுக்கு குறுகிய நேர வேலை செய்தாலும் கூலி அதிகம். அம்மா சிறையில் இருக்கும் நாட்களில் இவ்வித குறுகிய நேர வேலைகளைச் செய்ய முடிவு செய்திருந்தான் கண்ணா.

அவனின் வயதினை ஒத்த பலர் நிரந்தரமாகவே வேலை செய்யும் போது அவனுக்கு இதுவொன்றும் பெரிதாக தெரியவில்லை. காலை நான்கு மணிக்கு எழுந்து படித்துக்கொண்டே குடும்ப பாட்டையும் கவனிக்க முடிவெடுத்தான்.

"ஏம்மா எத்துன நாளாம்மா இருக்கணுமாம் எப்ப விடுவாங்க".

"யோசிக்காதப்பா புள்ள சோதனைக்குப் படி. நீதிமன்றம் அனுப்பி பத்து நாள்ல விட்டுருவாங்கப்பா. அம்மா வந்துருவேன். ஏதும் தேவையின்னா சாந்தி அக்கா கடையில வாங்கு அம்மா வந்து வேலை செஞ்சி குடுப்பேன்".

"ஓம் புள்ளம்மா நா. நா நிச்சயம் இந்த சோதனையில நல்ல மார்க் எடுப்பேம்மா. அதை வெச்சே கிராம சேவையாளரோட வேலைக்கு சேரலாம். நம்ம கவலை தீர்ந்து நாமளும் நிமிர்ந்து வாழுவம்மா".

ஒன்னுமே யோசிக்காதப்பா. கோழிய கீரியேதும் புடிக்காம பார்த்துக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌளவாக்கு தண்ணி வுடு. அப்பா ஏதும் கதைச்சாலும் நீ ஒன்னும் கதைக்காத. உப்பும் எண்ணெய்யும் நெருப்பெட்டியும் சாந்திக்கா கடையில வாங்கி வெளக்கு வைச்சிக்க. இல்லாட்டில் வெறகு மூட்டி சரி படி. ரோட்ட வடிவா பார்த்துப்போ. பாம்பு கீம்பு கெடக்கும்"

அவள் அவனில் கொண்டுள்ளதை வெறும் பாசம் என்ற சொல்லுக்குள் அடக்கிவிட முடியுமா?

நீலவான் நிலவு வெளிச்சத்தை வீசுகிறது. பள்ளிக்குடியிருப்பில் இருந்து தாமரைக்குள பின் வீதியூடாக சேனைபுரம் சென்று அங்கிருந்து பாட்டாளிபுரம் செல்ல வேண்டும். தாயிற்கு தாயாக நின்று சேவை செய்த பிள்ளை வேகமாக வீடு நோக்கி நடக்கிறான். சிலவேளை இந்த நேரத்தில் தூர இடங்களுக்கு வேலைக்குப் போனவர்கள் தம் கிராமங்களுக்கு திரும்புவதுண்டு. நிறைய பேர் நடந்தே போவார்கள். ஒரு சில மிதிவண்டிகாரரும் வருவார்கள். "யாராச்சும் சைக்கிள் காரங்க வந்தா ஏறிக்கலாம். இல்லாட்டி என்ன நடந்தே போவம்.." மனதுள் எண்ணியபடி செம்மண் பாதை வழியே கண்ணா நடக்கிறான். தாயைப் போலவே வேக நடை. பள்ளிக்குடியிருப்பிலும் வாய்க்கால் உண்டு. வீதியோர மரங்களில் மின்மினிகளின் அணிவகுப்பு. "கிரீச்...கிரீச்.." என பூச்சிகளின் ஒலி.

பள்ளிக்குடியிருப்பு ஊரின் எல்லையை கடந்து, சேனைபுர எல்லை வழியாக கண்ணா போகிறான். தெருவோரத்தின் இரு மருங்கிலும் சில்லிடும் தண்ணீரெடுத்து சிரித்தபடி நகர்கிறது வாய்க்கால். வயல் நடுவே இருக்கும் காவல் கொட்டிலில் யாரோ காவலுக்கு நிற்பவர் சுருட்டு புகைக்கும் சிறு வெளிச்சம் பளிச்சிடுகிறது. நெருப்பைப் போட்டு இரவிலே வயலுக்கு காவல் காப்பார்கள். யானை வந்தால் மணி அடிப்பார்கள். நீலவானுக்கு நெற்றிப் பொட்டிட்டதாய் நிலவு. மெதுவாகத் தழுவும் தென்றல். நடனமிடும் நெற்பயிர்கள் இது சேனைபுர வயற் சூழலின் நிகரிலா அழகு. இதையெலாம் நின்று இரசிக்க கண்ணா விரும்புவானா? ஒரு புறம் இரசனை. மறுபுறம் நடை.

ஒரு மிதிவண்டி வருகிறது. "ஐயா நானும் வரவா.." கேட்டான்.

"ஏம்ப்பா எங்க போறே.."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாட்டாளி புரம் ஐயா"

"தம்பி நா... வெறகு கட்டியிருக்கேன். சைக்கிள்ல காத்தும் இல்லப்பா. பின்னாடி ஏதும் வரும். நா சேனைபுரம் மட்டும் தான் போறேன்" மிதிவண்டியை ஓட்டியபடியே அவர் சொல்லிவிட்டுப் போனார். அவன் நடக்க வேண்டும் என்பதுதான் நியதி போல.

கீச்... கீச்.... கீச்.. ஒரு பழுதடைந்த மிதிவண்டி வரும் சத்தம். யாரோ ஒருவர் வருகிறார். நடந்து கொண்டிருந்த கண்ணா அருகே வந்து அவராகவே மிதிவண்டியை நிறுத்தினார். "தம்பி எங்கப்பா போறே. தூரவா"

"பாட்டாளிபுரம் அண்ணே"

"நா.. வள்ளுவர்புரம் போறேன் வர்றியா..?"

"நன்றி அண்ணே வர்றேன்"

"தம்பி சைக்கிள் ஓடுவியா"

"ஆமா..."

"எனக்கு கொஞ்சம் ஏலாம இருக்குப்பா கொஞ்ச தூரம் ஓடேன். நெறைய தூரம் ஓடி வாறேன்..."

கண்ணா மிதிவண்டியை மிதிக்கத் தொடங்கினான். சிலர் தாங்களாகவே உதவி செய்ய வருவதற்கு காரணம் ஒன்று கருணையாக இருக்கலாம். இரண்டு சுயநலமாக இருக்கலாம். இது இரண்டாம் வகை உதவியோ? கண்ணாவுக்கு ஒருவரை ஏற்றி மிதிவண்டி ஓடுவது ஒன்றும் பெரிதில்லையே. "கிரீச்" "கிரீச்" "கிரீச்" அதே சத்தத்துடன் செம்மண் வீதியூடே மிதிவண்டி போகிறது. தூரத்தே இரண்டு பன்றிகள் வேகமாக வீதியைக் கடந்து ஓடுகின்றன. அந்த சத்தத்தில் முயலொன்று ஓட்டமெடுப்பது தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

கண்மணி பதினோராம் தரப் பரீட்சை எழுதி மூன்றுமாதங்கள் கடந்து விட்டன. பரீட்சைப் பெறுபேறு வரும் காலம் நெருங்குகிறது.

இன்று காலையும் மங்களம் கண்மணியின் திருமணப் பேச்சை தொடங்கி இருந்தாள். அவளின் பரீட்சை முடிவுகள் பற்றி மங்களம் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. அவளின் நோக்கம் கண்மணியை யாராவது ஒருவனிடம் கைப்பிடித்துக் கொடுப்பதே. சிங்கராயருக்கு அதில் உடன்பாடு இல்லை. அவர் கண்மணியின் கல்யாண விடயத்தை அவசரமாக்க விரும்பவில்லை. இதைவிட கண்மணி கண்ணாவை காதலித்து இருக்கும் விடயம் அவருக்குத் தெரியும் என்பதாலும், கண்ணாவின் நற்குணங்கள் பற்றி அவர் அறிந்திருப்பதாலும் எதிர்காலத்தில் கண்ணாவையும் கண்மணி யையும் சேர்த்து வைக்க அவர் எண்ணம் கொண்டிருந்தார்.

ஆனால் இதற்கெல்லாம் மங்களத்தின் அமைச்சரவையில் அங்கீகாரம் கிடைக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கராயரின் மனதிலே இருந்த எண்ணங்கள் கண்மணிக்குத் தெரியாது. தாய் மங்களம் தன்னை வலுக்கட்டாயமாக யாருக்காவது கழுத்து நீட்டச் செய்து விடுவாள் என்று அவள் பயம் கொண்டாள். ஒரு முடிவுக்கு இன்று பகலே வந்து விட்டாள்.

ஒரு பெண்ணிடமே அதியுச்ச பொறுமை இருக்கும். சம நேரத்தில் பொறுமை இழப்பு என்று வந்து விட்டால் அவள் கதி அவ்வளவு தான். தன்னையே அவளால் கட்டுப்படுத்த முடியாது. கண்மணியால் பொறுமை காக்க இயலவில்லை.

இது தேய்பிறைக் காலம். காரிருள் தன் கைவரிசையை காட்டிக் கொண்டிருக்கிறது. சிங்கராயர் வீட்டு முன்றலில் உள்ள மாமரத்திலே மின்மினிகள் கும்மாளமடித்துக் கொண்டிருக்கின்றன. வீட்டு நாய் ஜிம்மி முற்றத்து மணலில் சிறு கிடங்கு தோண்டி சுருண்டு கிடக்கிறது.

இப்போது நள்ளிரவு 12:30 மணி கடந்துவிட்டது.

மங்களமும், சிங்கராயரும் தூக்கத்தின் உச்சத்திலே இருக்கிறார்கள். சிங்கராயர் மான் தோலினை விரித்துப் படுத்திருக்கிறார். சிலவேளை சாக்குக் கட்டிலில் படுப்பார். ஒன்பது மணிக்கு உறங்கப்போன கண்மணி உறங்காமல் தன் திட்டத்தை நிறைவேற்ற தருணம் பார்த்துக் கொண்டிருப்பது அவர்களுக்கு தெரியுமா?

உறங்குவது போல பாவனை செய்து போர்வையை மூடியிருந்த கண்மணி இப்போது போர்வையை விலக்கினாள். விறாந்தை மூலையிலே அரிக்கன் லாம்பு மெதுவாக கண் சிமிட்டிக் கொண்டி ருக்கிறது. அதன் வெளிச்சம் அவ்வளவு பாரதூரமானதல்ல. உள் அறையில்தான் மங்களமும், கண்மணியும் உறங்குவதுண்டு. வீட்டில் மட்டுமல்ல நித்திரை விசயத்திலும் மங்களம் மகாராணி என்பது கண்மணிக்குத் தெரியாதா? தனது கால்களின் கொலுசு பேரொலி எழுப்பாதபடி மெதுவாக எழுந்தாள். மங்களம் நன்றா கத்தான் தூங்குகிறாள். கால்களைத் தூக்கி நடந்தால் கொலுசுகள் ஒலி எழுப்பும் என்பதால் சாணத்தினால் மெழுகப்பட்ட தரையோடு சேர்த்து இலேசாக காலை இழுத்தபடியே நகர்ந்தாள். நெஞ்சிலே ஒருவித பதற்றம் குடிகொண்டு இருந்தாலும், சிலவேளை மங்களம் எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டாள் தண்ணீர் குடிக்க எழுந்ததாகச் சொல்லி சமாளிக்கும் திட்டத்தையும் வைத்திருந்தாள்.

விறாந்தை திரைச்சீலையை விலக்கினாள் "கொர்... கொர்" என்ற சிங்கராயரின் குறட்டையொலி அவளின் கொலுசொலியை விஞ்சும் அளவுக்குத்தான் இருக்கிறது. அரிக்கன் லாம்பு "இப்போது அணையப் போகிறேன்" என்பது போலத்தான் இருக்கிறது. விறாந்தையின் ஒரு மூலையிலே அந்த ஓலைப்பாயிலே சிங்கராயரின் இதமான தூக்கம். கதவருகே நெருங்கி விட்டாள் கண்மணி. கதவை உட்புறமாக பூட்டிவிட்டு மூடுவதில்லை. மிக சாதாரணமாகவே மூடுவது சிங்கராயரின் வழமை. அந்த வழமை கண்மணிக்கு ஒரு சாதகத்தை கொடுத்தது. கதவு பூட்டும்போதும், திறக்கும் போதும் "கீ...கீக்" என சத்தமிடும் தன்மையுடையது. எனவே அதன் வழியிலேயே இறங்கி அந்தத் தடையை கடக்க கண்மணி திட்டமிட்டாள். சில சந்தர்ப் பங்களில் பெண்களின் மூளை வேலை செய்யும் அளவிற்கு விஞ்ஞானிகளின் மூளை கூட வேலை செய்வதில்லை என்பதை ஏற்கத்தான் வேண்டும்.

கதவின் சத்தம் வராதபடி ஒவ்வொரு இஞ்சியாக கதவைத் திறந்தாள். தனது உடல் வெளியேறக்கூடிய அளவிற்கு திறந்த பின்பு வாசலின் நிலைத்தூணோடு தனது உடல் உரச கொலுசொலி எழாதவாறு வெளியே கால்களை வைத்தாள் கண்மணி. திறந்தது போலவே கதவினை மெதுவாக மூடினாள்.

நாய்களிடம் இருக்கும் எச்சரிக்கைத் திறமை மனிதர்களிடம் இல்லையென்பதற்கு விவாதம் தேவையில்லை. முற்றத்து மணல் வெளியில் கிடங்கு தோண்டிப் படுத்திருந்த சிங்கராயர் வீட்டு ஜிம்மி நாய் கண் விழித்து வாசலைப் பார்த்தது. யாரோ நிற்பது புரிந்து விட்டது. "உர்..." என சிறு உறுமல் கொடுக்கும்போது கண்மணி மிக நிதானமாக "உச்..." என்றாள். பழகிய எந்தவொரு நாய்க்குமே ஒரு "உச்" போதுமே. அந்த இரவிலும் வாலை ஆட்டிக்கொண்டு தலையை பணித்தது. வீட்டிலிருந்து சிறிது நகரும் வரை கொலுசொலி எழாதவாறு கால்களை நகர்த்தினாள் கண்மணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜிம்மி நாய் பின்னே வந்தது. "ஓடு.." கையைக் காட்டி மெதுவாய் ஜிம்மியை விரட்டினாள். அதற்குப் புரியுமா இவளது திட்டம். மீண்டும் வந்தது. பாதுகாப்பு கொடுப்பது அதன் கடமையல்லவா? கண்மணி சிறு தடியெடுத்து ஜிம்மியை அடிப்பது போல ஓங்கினாள். ஜிம்மி நாய் பின்னே நகர்ந்தது. ஆனாலும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தது. நாய்களுக்கு மட்டும் பேசவும் தெரிந்தால் நிறைய மனிதர்களின் கேவலமான குணங்கள் அம்பலத்திற்கு வந்துவிடும். ஏனெனில் வீடுகளில் நடக்கும் கணிசமான விடயங்கள் நாய்களுக்குத்தானே தெரியும்.

சிங்கராயர் காணிக்கு பெரிதாக வேலி பாதுகாப்பு இல்லை. வேலியின் அடையாளம் காட்ட ஆங்காங்கே இடையிடையே முருங்கை, ஆமணக்கு, இப்பில் இப்பில் என்பன நிற்கின்றன. பல வழிகளால் மாட்டு வண்டில்கள் கூட போய் வரலாம். இப்படியான வேலியை கடப்பது கண்மணிக்கு பிரச்சினையா?

சேனைபுரத்தின் செம்மண் தெருவிற்கு வந்து விட்டாள். மிக வேகமாகவே நடந்தாள். கும்மிருட்டு வேளையில் மின் மினிகளையும் வான் நட்சத்திரங்களையும் நன்றே இரசிக்கலாமே. அதை இரசிக்கும் நிலையா அவளுடையது. வரும்போது செருப்பினை கையிலேயே வைத்திருந்தாள். இப்போது அதை அணிந்து விட்டாள். கையிலே உள்ள சிறு பையில் ஒன்றிரண்டு உடுப்புக்கள். இந்த செம்மண் வீதியிலே இப்போது ஒரே மனித ஜீவன் அவளாகத்தான் இருக்கும்.

மதகு அருகோடு இருக்கும் வேப்ப மரத்தடியை கடக்கிறாள். வேம்பிலே பழம் தின்று கொண்டிருந்த பெரிய வௌவாலொன்று பெரும் சத்தத்தோடு அதை விட்டுக் கிளம்பியது. நெஞ்சு திக் என்றது கண்மணிக்கு. "அது வௌவால்.." என தன்னைத்தானே தேற்றினாள். சிறு வயதில் அறிந்த பேய்க்கதைகள் நினைவிற்கு வந்தாலும் பேய் எல்லாம் பொய்யென தேற்றியவாறே நடந்தாள்.

"உவ்... உவ்... உவ்" ஏதோ சத்தம். சேனைபுரத்தின் சுகந்தியின் வளவிலே விதைக்கப்பட்டிருக்கும் கச்சானை பன்றியொன்று வேட்டை யாடும் ஒலி அது. கச்சானுக்கு காவல்காரர் இல்லாதது இவளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புத்தான். கண்மணிக்கு பன்றி என்றாலே பயம். அந்த கச்சான் தோட்டத்தை கொஞ்சம் வேகமாகவே கடந்தாள். பாட்டாளிபுரம் செல்லும் பிரதான வீதியின் அருகோடுதான் சேனைபுரத்தாரின் வீடுகள் கூடுதலாக இருக்கின்றன. அந்த வழியே சென்றால் எப்படியும் நாய்கள் குரைக்கும். ஒன்று குரைக்கத் தொடங்கினால் கேட்கவா வேண்டும். எல்லா நாய்களும் விழிப்படைந்து விடும். பிறகு யாராவது தெருவை எட்டிப் பார்த்தால் தன்பாடு அவ்வளவுதான் என்பதே கண்மணியின் நினைப்பு.

சேற்றுப்பாங்கான சிறு வாய்க்காலினை கடந்தால் விதைப்பு செய்யப் படாத வயற்காணிகள் உள்ளன. அதன் வழியே நடந்து பாட்டாளிபு ரத்திற்கான தெருவிலே ஏறலாம். அப்படிப் போனால்தான் சத்தம் சந்தடி இல்லாது போய்ச்சேரலாம் என முடிவெடுத்தாள் கண்மணி.

சிறு வாய்க்காலினுள் இறங்கினாள். "குதக்" எனும் சத்தம். கொஞ்சம் சேறு. பத்து அடி நடந்து மறுபக்கம் சென்றாள். கால்களில் சேறு. ஒரு வயலில் நிறைந்திருந்த தண்ணீரில் கால்களைக் கழுவினாள். கொஞ்ச தூரத்திலே விதைப்பு வயல் ஒன்று இருக்கிறது. காவல் கொட்டிலில் நெருப்பு எரிவது தெரிகிறது. அப்பப்போ மணி ஒலி கேட்கிறது. பெரிய விறகுக்கட்டைகளை சேர்த்து நெருப்பு மூட்டி விடுவதும், மணி தட்டிக்கொண்டிருப்பதும் வயல் தோட்டக் காவலர் களின் ஓர் உத்தி. யானை பன்றி நெருங்காது சேனைபுரம் மட்டுமல்ல சுற்றியுள்ள தாமரைக்குளம், பாட்டாளிபுரம் எல்லாம் இந்த உத்தியை பயன்படுத்துவது வழமை.

செய்கை பண்ணப்படாத வயலின் வரப்புகளுடே கண்மணி நடை கொள்கிறாள். வீட்டிலே இருக்கும்போது ஆறேழு மணிக்குப் பிறகு தெருக்கடைக்கு சிறு சாமான்கள் வாங்குவதற்குக்கூட கண்மணி போவது இல்லை. அப்படிப் போனாலும் சிங்கராயருடனே போவாள். ஒருவருக்கு இதுவரை இல்லாத ஒரு துணிச்சலை வீரத்தை காதல் கொடுத்து விடும் என்பது சும்மா சொல்லப்பட்ட வார்த்தை அல்ல. ஆனாலும் காதலையும் கட்டுப்பாட்டுடன் கண்ணியத்துடன் கையாள் வோர் இருக்கத்தான் செய்கின்றனர். கண்மணிக்கு அந்தக் கட்டுப்பாடு வரவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
KOHA JPL

செய்கை பண்ணப்படாத வயல் வெளிகளை கடந்தாள். பாம்பு பயம் கூட இன்று அவளுக்கு வரவில்லை. சிறு பற்றைகள் நிறைந்த பாட்டாளிபுர தெருவுக்கு ஏறி விட்டாள். பாட்டாளிபுரத்தைப் பொறுத் தவரை அவ்வளவு நெருக்கமான வீடுகள் இல்லை. செல்லமுத்துவின் வீட்டினை கடந்து போனால் சில இடங்களில் தோட்டம் செய்வோரின் வீடுகள் தெருவோடு நெருக்கமாக உள்ளன. அதுவும் நான்கைந்து குடும்பங்களின் வீடுகள்தான். மற்றைய இடமெல்லாம் இரண்டு ஏக்கருக்கு ஒரு வீடுதான்.

வேகமாக நடந்தபோது அந்த குச்சொழுங்கையின் குறுக்காக வளைந்திருந்த சிறு சூரை முட்செடி அவள் சட்டையை இழுத்தது. திடீரெனப் பயந்தவள் அது என்னவோ என தட்டியபோது முள் அவள் கைகளைக் கீறியது. சிறிதாக இரத்தம் கசிகிறது. ஆனால் அந்த வேகத்தில் அவளுக்கு வலி தெரியவில்லை. சாதாரண நேரமென்றால் கத்திக்கதறி இருப்பாள். காதல் வலி நெஞ்சு முழுவதும் இருக்கும்போது மற்றைய வலிகள் என்னதான் செய்யப்போகின்றன. இதுவரை காதலுக்காக அவள் கண்ணீர் சிந்தியிருக்கிறாள். இரத்தம் சிந்த வில்லை. அந்தக் குறையை சூரை முட்செடி தீர்த்து விட்டது.

படலை இல்லாத வளவு. வேலி இல்லாத காணி. அமைதியாக இருக்கிறது செல்லமுத்துவின் குடிசை.

"மெதுவா கூப்பிடுவமா? அல்லது உள்ளே போவமா?" இரு வித எண்ணங்கள். செல்லமுத்துவின் குடிசையருகே போகும் அந்த சிறு வழிக்குள் தடம் பதிக்கிறாள். வேகமாக குடிசையருகே போக கண்மணியின் மனது சஞ்சலப்பட்டது. இருப்பினும் அடிகள் எடுத்து வைப்பதும் சிறிது நிற்பதுமாய் அவள் நிலை.

கடுதா நாய் மெதுவாக உறுமுகிறது.

நாய் கடிக்குமோ என்ற எண்ணம் கண்மணிக்குள். எப்படிக் கூப்பிடுவது? யாரைக் கூப்பிடுவது? எண்ணங்கள் அவளுக்குள் அவசரமாய்ப் பூக்கின்றன. இவ்வளவு நேரம் நடந்து வரும்போது இதைப்பற்றியெல்லாம் சிந்தித்து முடிவெடுத்திருக்க வேண்டுமே. பெண் புத்தி பின் புத்தி என்பதற்கு சரியான விளக்கம் என்னவோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியவில்லை. ஆனால் பெண்ணின் புத்தி சில சந்தர்ப்பங்களில் பிந்தியே வேலை செய்கிறது. இல்லாவிட்டால் பகல் முழுவதும் திட்டமிட்டு வீட்டை விட்டு வெளியேறிய பின்பு இந்த இடத்தில் நின்று யாரை கூப்பிடுவது என கண்மணி சிந்திப்பாளா?

கடுதா நாயின் வேகமான குரைப்பொலி கேட்டு குடிசையின் வெளியே தூக்கத்தில் கிடந்த செல்லமுத்து விழிப்படைந்து விட்டாள். "ஏதும் மாடுங்க கீடுங்க அங்க இங்க போகுது போல" என மனதுள் எண்ணியவாறு மீண்டும் கண்களை மூடினாள் செல்லமுத்து. கடுதா ஓய்ந்த பாடில்லை. ஒரே திசையை நோக்கியே குரைக்கிறது "ஏய் ஓடு கடுதா" வெருட்டினாள் செல்லமுத்து. விசயம் இருக்கும்போது அது விட்டு விடுமா? அந்த குரைப்பொலி செல்லமுத்துவுக்குள் ஒரு சந்தேகத்தை விதைத்தது. அவள் காவல்த்துறை பிடியிலிருந்து நேற்றுத்தான் வந்திருந்தாள்.

படுக்கை அருகோடு எப்போதும் இருக்கும் சிறு கருங்காலி தடியை தூக்கியபடி எழுந்தாள். குடிசையுள்ளே காளியப்பனும், கண்ணாவும் படுத்திருக்கின்றனர். செல்லமுத்து சுற்றும் முற்றும் பார்த்தாள். ஒன்றுமே தெரியவில்லை.

அடையாளம் காணும் பொருட்டு கடுதா நாய் அந்த உருவம் நோக்கி சிறிது நகர்ந்தது. கண்மணி பயத்திலே உறைந்து போயிருக்கிறாள். அந்த இருட்டிலே செல்லமுத்து சற்று நகர்ந்தாள். அவளுக்கும் நெஞ்சு "திக்" என்றது. இருப்பினும் அந்த பதற்றத்தை விடுத்து தனது கண்களிலே தெரிந்த அந்த உருவத்தைப் பார்த்து "யாரு" என்றாள்.

அந்த உருவம் தன்னை நோக்கி மெதுவாய் அசைவது செல்ல முத்துவுக்கு தெரிகிறது. இப்போது விடிகாலை 03.00 மணி.

மீண்டும் செல்லமுத்து கேட்டாள் "ஏ... யாருன்னு கேக்கிறேன்ல.." என்று. இப்போது கையிலிருந்த கருங்காலி தடியை எச்சரிக்கையாய் பிடித்தாள்.

கண்மணிக்கு வார்த்தைகள் வர மறுத்தன. பேசாமல் இருக்க முடியுமா? "அ....அம்மா.... நா.. நாந்தாம்மா".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாந்தான்னா யாரு பேரில்லையா?".

"நா.. கண்மணி".

"எந்த கண்மணி".

"சேனைபுர சிங்கராயர் பொண்ணு".

செல்லமுத்து கண்மணிக்கு கிட்ட நெருங்கினாள். "ஏ கடுதா போ சத்தம் போடாத" கடுதா நாயை எச்சரிக்கை செய்தாள். கையிலே ஒரு பையுடன் பச்சை நிறத்து சட்டை அணிந்து வேர்த்துப்போய் பதற்றத்துடன் நிற்கிறாள் கண்மணி. அவளைப் பார்த்து செல்ல முத்துவுக்கும் பதற்றம் தொட்டது. யாரோ நம்மவர் என்று கடுதாவும் குரைப்பை நிறுத்தி அவர்களையே சுற்றுகிறது. என்னதான் இருந்தாலும் செல்லமுத்துவைப் பொறுத்தவரை கண்மணி பெரிய வீட்டுப்பொண்ணு. கண்மணியோடு செல்லமுத்துவுக்கு உறவு கிடையாதெனிலும் சேனைபுர பகுதிகளுக்கு சென்றபோது அப்பப்போ கண்மணியை பார்த்திருக்கிறாள். அப்படியான கண்மணி இன்று இந்தக்குடிசையை தேடி வந்திருக்கிறாளே.

வௌவால்கள் பழம் தேடிப் பறக்கின்றன.

"ஏம்மா நீ இப்பதானே சோதனை எழுதி முடிச்சே. மார்க்கு வாற காலம் ஏம்மா இப்டி இந்த நேரம் வந்தே" செல்லமுத்து வினாவிய போது கண்மணிக்குள்ளிருந்து வார்த்தை வரவில்லை "சொல்லும்மா நீயும் எனக்கு புள்ள மாதிரி. இப்டி வரும்போது ஏதும் நடந்திரிச்சினா என்னம்மா செய்யிறது யோசிக்கிறது இல்லையா?"

காதல் என்பதே சில சந்தர்ப்பங்களில் அறிவினை குடிக்கும் பசிதானே. காதல் வரும்போது சிலர் அறிவை பெருக்குகிறார்கள். சிலர் அறிவை இழக்கிறார்கள்.

"அம்மா ஒங்களுக்குத் தெரியுமோ தெரியாது நம்ம அம்மா என்னைய மாரியம்மா கோயிலடி காளிராசா பையனுக்கு கட்டி வைக்கப் போறாங்களாம். அவனோட வயசு முப்பதுக்கு மேல. குடிகாரன். நா அதான் ஓடி வந்துட்டேன்" கண்மணி அழத் தொடங்கினாள். செல்லமுத்து அவளைத் தேற்றினாள். "புள்ள இதைக் கேளும்மா நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழாத அப்புடி நடக்க ஓங்கப்பா வுட மாட்டாரு. இப்டி நீ ஓடியாந்து நம்ம இடத்துக்கு வந்ததை கேள்விப்பட்டா ஓங்க அப்பா விடுவாங்களா? யோசிச்சிப்பாரு. இதால பெரிய பிரச்சினையே வரும்மா. இதை விட ஓங்க வயசு என்னாங்கிறது தெரியும்தானே".

"நா இனி போகமாட்டேன். அப்புடீன்னா நா அலரி கொட்டை அரைச்சி தின்னு செத்துடுவேன். நா கண்ணாகிட்ட வந்தேன். இங்கையே என்னையும் வைச்சிடுங்க". சின்னப் பிள்ளைகள் போலவே அடம்பிடித்தாள். காதல் என்பது எவரையும் சிறுபிள்ளைத்தனத்திற்கு மாற்றுவதுதானே.

செல்லமுத்துவுக்கு பெரிய குழப்பமாக இருந்தது. அவளைப் பொறுத்த வரை கண்மணியை இங்கே ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை. அது சாத்தியமா? நடக்குமா? சிங்கராயர் வயல் விதைப்பிற்கு முன்பு காலம் நேரம் யாவும் பார்த்து இது விளையுமா? கைவிடுமா? என்பதை தீர்மானித்து விதைப்பார். வயல் விதைப்பிற்கே அவ்வளவு பார்ப்பவர் அப்பா. வாழ்க்கை விதைப்பிற்கு மகள் கொஞ்சமாவது பார்க்க வேண்டுமே. செல்லமுத்துகூட உள்ளே உறங்க இடமில்லாத குடிசையிது.

"ஏம்மா நா சொல்லுறத வடிவா கேளு. ஒனக்கு கொஞ்சம் வயசு வரட்டும். கண்ணாவும் இப்ப மார்க் வந்தப்புறம் ஏதாச்சும் வேலை செய்வான். ஓங்கப்பாகூட கதைச்சு நாம ஒரு முடிவுக்கு வர்லாம். இப்ப வா நா ஒன்னைய கூட்டிட்டுப் போயி ஓங்க வூட்டிலையே விடுறேன்".

"நீங்க கண்ணாவை ஒருக்கா எழுப்பி கூட்டி வாங்க. நா கண்ணா கூட ஒருக்கா கதைக்கிறேன். அப்புறமாக என்னான்னு பார்ப்பம்" என்றாள் கண்மணி. செல்லமுத்துவுக்குள் பயம் ஏறு வரிசையில் செல்கிறது. "இது எங்க போய் முடியுமோ" என பதறியடியே "இதுல இரும்மா நா அவனை எழுப்பிட்டு வர்றேன்" என்றபடி குடிசை பக்கம் விரைந்தாள்.

உள்ளே காளியப்பனும், கண்ணாவும் நல்ல உறக்கத்தில் இருக்கிறார்கள். வெளியே நடப்பது அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது. காளியப்பன் விழிப்படைந்து வெளியே வராதபடி கண்ணாவை எழுப்ப வேண்டும். அதற்கேற்றவாறு கண்ணாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதுவாக தட்டினாள் செல்லமுத்து. அவன் எழும்பவில்லை. இன்னும் தட்ட "ம்..." என்றபடியே கண்ணா சோம்பல் முறித்தான்.

"அம்மா.." என்றான். "வெளிய வாவேன்" என்றாள் செல்லமுத்து. கண்ணா வெளியே வந்தான்.

"ம்... இந்த சேட்டை போடு" சொல்லிபடியே கொடுத்தாள் செல்லமுத்து. "என்னம்மா என்னான்னு சொல்லேம்மா" தூக்கக் கலக்கத்தில் கண்ணா கேட்டான். "அம்மா சொல்றேன் போடுப்பா" என்றதும் சேட்டை போட்டான் கண்ணா. அவனைப் கைப்பிடித்து கண்மணி நின்ற இடத்துக்கு கூட்டிச் சென்றாள்.

கீழே இருந்த கண்மணி எழுந்து விட்டாள். ஏதோ ஒன்றைப்பார்த்து சிறு உறுமல் போட்டு ஓய்கிறது கடுதா நாய். மேலே வௌவால்களின் ஊர்வலம் தெரிகிறது. "கிரீச்" "கிரீச்" என்றவாறு ஒருவகை வண்டொலி இந்த இரவிலே தெளிவாக கேட்கிறது.

கண்ணாவுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. அவன் இதை எதிர்பார்க்கவே இல்லை. கண்மணியைப் பார்த்ததும் அதே கணத்தில் தூக்கம் கலைந்து பதற்றம் தொற்றியது.

"என்ன கண்மணி வெளையாடுறியா. நா சொன்னேன்தானே ஓங்கப்பா எங்க வூட்டுக்கு வந்து கதைச்சத எல்லாம். நமக்கு பதினெட்டு வயசு கூட சரியா முடியல. நம்ம குடும்ப நெலமை தெரியும்தானே. இப்ப ஓங்க அப்பா வந்தா... யோசிச்சிப் பாரு என்ன நடக்கும்னு. நா சொன்னேன்தானே சில நாளுல மார்க்கு வந்ததும் வேலைக்கு சேந்துருவேன். அப்புறம் கொஞ்ச நாள் கழிச்சி ஓங்க அப்பா கூட கதைச்சி நாம கலியாணம் கட்டிக்கிலாம்னு. நீ ஏ...ன் இப்டி" அவளுக்கு நிலைப்பாட்டை புரிய வைத்தான் கண்ணா.

எந்த நிதானமான ஆணும் காதல் விசயத்திலே அவசரப் புத்திக்கா ரர்கள் ஆகி விடுவது உண்டு. அதுவும் பதின் பருவம் என்றால் சொல்லவா வேண்டும். இந்தப் பதின் பருவத்தில் காதல் விசயத்தில் ஒரு ஆண் பொறுமை காக்கின்றான் என்றால் அவனிடம் ஞானிக்குரிய ஒரு பக்குவம் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணா பேசிய பின்பும் கண்மணியின் மௌனம் கலையவில்லை.

"அம்மா சொல்லும்மா. நா இப்ப என்ன செய்யிறது அம்மா. என்னைய கலியாணம் கட்டி வைப்பாங்கன்னு பயத்துல தான் நா இந்த ராத்திரியில ஓடி வந்தேன். நானும் நெனைச்சிதா இருந்தேன் கண்ணா ஒரு வேலை எடுத்தவுடனே அப்பா கூட கதைச்சி ஏதாவது ஒன்னு செய்வம்னு. அப்பா சம்மதிக்காட்டிதான் வீட்ட விட்டு வாறதா நெனைச்சு இருந்தேன் அம்மா" விம்மினாள் கண்மணி.

"அவேன் சொல்லுறாந்தானேம்மா ஒன்னைய தான் கட்டுவான்னு.. ஓங்கப்பா இங்க வந்து சொன்னத பார்த்தா படிப்பை முடிச்சாப்புறம் கலியாணம் செஞ்சி வைப்பாரு போலத்தாம்மா இருந்திச்சி. காளிராசா பையனுக்கும் ஒனக்கும் என்ன நிச்சயதார்த்தமா முடிஞ்சிரிச்சி இல்லதானே. அதுக்கு ஓங்கப்பா வுடமாட்டாரு. கண்ணா வேலைக்கு சேர ஓங்கம்மாவே கண்ணாவ கட்டி வைக்க சம்மதிப்பாங்க. யோசிச்சுப்பாரும்மா".

சொல்லியவாறே கண்மணியின் தலையை தடவினாள் செல்லமுத்து வாடி, போடின்னு அடிக்கடி மங்களத்திடம் பேச்சு கேட்கும் கண்ம ணிக்கு தன்னை அம்மா என செல்லமுத்து சொல்வது இதயத்திற்கு இதமாகவும் அவர்களின் பேச்சு ஒருவித நம்பிக்கையும் கொடுத்தது. கலங்கித் தெளிவது என்பது இதுதானோ.

"நீ இப்ப வீட்டுக்கு போ கண்மணி. அவசரப்பட்டு சின்ன வயசுலையே கலியாணம் கட்டி நம்ம கிராமங்கள்ல ஆட்கள் படுற பாடு தெரியும் தானே. ஒனக்கு காளிராசா பையனோட கலியாணம் நடக்கப் போகுதுன்னா நானே வந்து ஒன்னைய கூட்டிப் போறேன். ஆனா அப்புடி நடக்காது. ஓங்க அம்மா, அப்பா சம்மதத்தோட நம்ம கல்யாணம் நடக்கும். அம்மாகூட போ.." கண்ணாவின் வார்த்தைகள் அவளைத் தேற்றியபோதும் ஏனோ அழுதாள் கண்மணி.

"நா.. ஓங்க ரெண்டு பேரையும் நம்பி போறேன். என்னைய கைவிட்டுற மாட்டீங்கதானே..." தேம்பித்தேம்பி அழுதாள் கண்மணி. என்ன நடக்கிறது என்று தெரியாமல் குடிசையுள்ளே காளியப்பன் அயர்ந்து தூங்குகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம ஏழைங்கதான். ஆனா ஏமாத்த மாட்டோம் கண்மணி. தைரியமா போய் வா. அம்மா வேகமா கூட்டிப்போயி விட்டுட்டு வாம்மா" கண்ணா சொன்னான். வந்தவளை வந்த பாதையால் கவனமாக போ என்று சொல்லாமல் வழிக்குத்துணையாகவும் வரும் அவர்கள் மனதைப்பார்த்து நிச்சயம் தன் வாழ்க்கை வழிக்கும் நல்ல துணையாக வருவார்கள் என்று கண்மணி மனது நம்பியது. கண்ணா அப்படிப் பேசினாலும் உள்ளூர அவனுக்கும் அழுகைதான். அந்த இருட்டிலும் கண்ணா முகத்தை உற்றுப்பார்த்தவாறே விடை பெறுகிறாள் கண்மணி. "நா வாறேன்...என்னய ஏமாத்திராதிங்க" என்றவாறே அவள் நகர செல்லமுத்துவும் கண்மணியுடன் போகின்றாள்.

வந்த அதே பாதையில் மீள் பயணம். "ஏம்மா இந்த வயலுக்குள்ளால வந்திருக்கே. ஏதும் பூச்சிக்கீச்சி கடிச்சா என்னம்மா பண்ணுறது பார்த்துப் போம்மா" செய்கை பண்ணப்படாத வயற்காணியை கடக்கும் போது செல்லமுத்து சொன்னாள். "என்னால ஓங்களுக்கும் கஸ்ரமம்மா" என்றாள் கண்மணி. "அட போம்மா இதெல்லாம் ஒரு கஸ்ரமா. செய்யாத குத்தத்துக்கு உள்ளுக்குப் போயி இருந்தேம்மா.." என்று செல்லமுத்து சொன்னபோது அந்த சேற்றுப்பாங்கான சிறு வாய்க்கால் வந்து விட்டது.

அதையும் கடந்து சிங்கராயரின் காணி மட்டும் செல்லமுத்து சென்று கண்மணியை விட்டு விட்டு வந்தாள். வந்த மாதிரியே வீட்டினுள் நுழைய கண்மணி அடி வைத்தாள். புகுந்திட வீடு கிடைக்காததால் பொறந்த வீடு வந்திருக்கிறாள். ஜிம்மி உறுமியது. மெதுவாய் குரல் கொடுத்தாள். பழகிய குரல் நாய்க்கு தெரியாதா? சத்தமிடாது வழிவிட்டது. சத்தமே இல்லாமல் வீட்டினுள் நுழைந்தாள் கண்மணி.

அவளுக்கு நடந்தது கனவா? நிஜமா? என புரியவில்லை. இருந்தாலும் நடந்த சம்பவத்தின் பின்பு ஏதோ ஓர் ஆறுதல் கிடைத்திருப்பதை அவள் உணர்ந்தாள். கண்ணாவின் நிதானம் அவளுக்கு இப்போது நன்றே பிடிந்திருந்தது.

274158



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

பாட்டாளிபுரத்திலிருந்து எட்டு மைல்கள் தூரத்திலே இருக்கிறது நாரைக்குளம் கிராமம். நாரைக்குளம் கிராமத்திலே ஒரு குளமும் இருக்கிறது. வற்றுவதும் நீர் நிரம்புவதும் அதன் இயல்பு. ஜப்பான் பனையேறி போன்ற மீன்கள் குடிகொண்டிருக்கும் வீடு அது. நாரைகள் வருடத்தில் ஒருதடவை பெரிதாக படையெடுக்கும்.

நாரைக் குளத்திலே இரண்டு விதமான மீன்கள் பிடிக்கலாம். சிறுவலை கட்டலாம். அல்லது தூண்டில் போடலாம். நாளை கண்ணாவின் பரீட்சை முடிவுகள் வெளியாகும். இன்று பாட்டாளி புரத்திலிருந்து வள்ளி, சின்னப்பாப்பா, செல்லமுத்து உள்ளிட்ட ஆறு பேர்கள் நாரைக்குளத்திற்கு மீன் பிடிக்கச் சென்றிருந்தார்கள்.

காலை நான்கரை மணிக்கே தூண்டிலுடன் நடக்கத் தொடங்கி னார்கள். போகும்போதே தூண்டில் முள்ளும், தங்கூசி நூலும் கொண்டு சென்றார்கள். கத்தியொன்றைக் கொண்டு போனதால் நாரைக் குளத்தை அண்டிய காட்டினிலே தடி வெட்டி தங்கூசி நூலினை இணைத்துக் கொண்டார்கள். எட்டு மைல்களை ஒன்றரை மணி நேரத்தில் நடந்து முடித்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பான் மீனுக்கு பாட்டாளிபுரம் சேனைபுரம் பகுதிகளிலும் நல்ல மவுசு. குளத்தை அண்டிய மருத மரத்தடியின் கீழுள்ள புற்தரைகளில் மண்புழு வெட்டி எடுத்துக் கொண்டார்கள். சிறு போத்தலிலே மண்ணைப் போட்டு அதனுள் மண் புழுக்களை போட்டார்கள். செல்லமுத்து ஒரு வசதியான சிறு கட்டையிலே குளத்தின் கரையோரமாக அமர்ந்துக் கொண்டாள். ஒரு கயிற்றினை உரப்பை யோடு சேர்த்து கட்டி அதனை நீருக்குள் விட்டு விட்டாள். பிடிபடும் மீன்களை உரப்பையினுள் போட்டால் அவை நீரினுள்ளேயே உரப்பைக்குள் இருக்கும். எனவே அவைகள் இறந்து விடாது.

முதல் தூண்டிலிலேயே ஒரு பெரிய ஜப்பான் மீன் சிக்கியது. முகம் மலர்ந்தாள் செல்லமுத்து. "நாளைக்கி கண்ணாக்கு சோதனை மார்க்கு வரும். எப்படியும் அவன் நெறைய மார்க்கு எடுத்திருப்பான். இன்னிக்கு கடவுளேன்னு நெறைய மீன் புடிபட்டா மீன் வித்து ராவுக்கு கறியும் வெச்சு நாளைக்கு சமைக்க அவிச்சும் வெக்கலாம்.." செல்லமுத்துவின் மனம் சிந்தனைகளில் தவழ்ந்த போது மிதவை நீருள்ளே அமிழ்த்தப்படுகிறது. மிதவை நீருள்ளே அமிழ்த்தப்படுகிறது என்றால் மீன் மாட்டி விட்டது என்று தானே அர்த்தம். மெதுவாய் தடியை உயர்த்தி இழுத்தாள். கொஞ்சம் பாரமாக இருக்கிறது. எனவே தூண்டில் தடியை உயர்த்தி இழுக்கக்கூடாது. அவ்வளவு அனுபவம் இல்லாதவளா? தங்கூசி நூலினை பிடித்து மெதுவாக இழுக்கிறாள். என்ன எதுவென காணு முன்னே மனது பரவசத்திலே மிதக்கிறது. அவள் முகம் மலர்கிறது "ஏதோ பெரிய சாமான் தான்" என உள்ளம் கணப்பொழுதிலே எண்ணிக் கொள்கிறது.

"அடியே வள்ளி இங்க பாருடீ பெரிய விலாங்கு மீனு. இழுத்த இழுப்புலயே நெனச்சேன் விலாங்கு தான்னு. சரியாத்தான்டீ இருக்கு" முக மலர்ச்சியோடு செல்லமுத்து சொல்ல தன் தூண்டிலில் சிக்கிய பனையேறி மீனை கழற்றி கோர்வையில் இணைத்து விட்டு வேகமாய் வந்தாள் வள்ளி. கொஞ்ச தூரத்திலே தூண்டில் போட்டுக்கொண்டிருந்த சின்னப்பாப்பா "என்னடீ ஏதும் பெரிய நாமன் மாட்டிரிச்சா" என கத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பரவால்லடீ செல்லமுத்து. இந்த விலாங்கு மீனே போதும் ஒன்னோட இன்னைய பாட்டுக்கு. இதுக்குன்னு நம்ம கிராமத்துல ஒரு கூட்டமே இருக்குடீ. நல்ல வெலைக்கு குடுக்கலாம்” துடித்துக் கொண்டிருந்த விலாங்கு மீனை பார்த்தபடியே வள்ளி சொன்னாள். “நாளைக்கி கண்ணாக்கு சோதனை மார்க்கு வரும்டீ. அவனுக்கு ஏதாச்சும் வேங்கி குடுக்கணும். பலவாரம் சுட்டு சாப்பிடனும். ரொம்பநாளா ஆசை. எல்லாத்துக்கும் ஒரு வழி வந்துட்டுடீ. இன்னும் ஜப்பானும் புடிச்சா சரி..” இந்த மீன் பிடிக்கும் போதும் கண்ணாவின் படிப்பு சிந்னை தான் செல்லமுத்துவுக்கு. வள்ளி சொன்னாள் “நாரக் கொளத்துல வருசம்பூரா தண்ணியிருந்தா நாம மீன் புடிக்கிறதையே வேலயா செஞ்சிறலாம்டீ. கூலி வேலையின்னு திரிய வேண்டி யதில்ல..” என்றவாறே வள்ளி தனது இடத்திற்கு போகிறாள்.

குளத்தில் எல்லாப்பகுதிகளிலும் பட்டுப்போன மரங்கள் நிலைத்து நிற்கின்றன. காற்றினால் குளத்திலே சின்னதான அலைகள் மேவுகின்றன. குளத்தினுள் நிற்கும் பட்டுப்போன மரங்களிலே பலவித நீர்ப்பறவைகள் மீன்களை கொத்துவதும் மரத்தில் வைத்து உண்பதுமாய் தம் பொழுதைக் கழிக்கின்றன. நீர்க்காகக்கூட்டங்கள் ஒவ்வொரு இடம் பறப்பதும் பின் உட்காருவதுமாய் இருக்கின்றன. குளத்தினுள்ளே நிற்கும் பட்டுப்போன மரங்களை அண்டி பனையேறி மீன்கள் துள்ளியெழும் காட்சி. அதனால் எழும் சத்தம். இந்த இரசனையெல்லாவற்றையும் விட மீன்களை பிடிப்பதிலேயே செல்ல முத்துவின் கவனம். செல்லமுத்துவைப் பொறுத்தவரை அவள் ஏழையாக இருந்தாலும் சில விடயங்களில் அவள் புரட்சிப்பெண். ஒரு பெண் மீன் பிடிக்கலாகாது என்று சட்டங்கள் இல்லையே. அந்த வரையறையை சமூகமே போட்டது. பாட்டாளிபுரப் பெண்கள் அதை உடைத்து விட்டார்கள். கணவனை இழந்து குடும்பப்பெண்கள் பாட்டாளிபுரத்திலே தம் குடும்பத்தை கட்டியிழுக்கும் துணிச்சலே தனிதான். சில சோம்பேறி ஆண்களுக்கு செல்லமுத்து போன்ற பெண்கள் ஒரு பாடம் தான்.

பிற்பகல் 02:00 மணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் மீன் பிடித்தாகி விட்டது. ஆறு பெண்களும் பாட்டாளிபுரம் நோக்கி புறப்பட ஆயத்தம். செல்லமுத்துவிடம் பத்து கிலோவிற்கு மேல் மீன்கள் இருக்கின்றன. இதை எட்டு மைல்கள் சுமப்பது என்பது அவளுக்கு பிரச்சனை இல்லை. ஆனால் மீன்கள் கொஞ்சம் பழுதானால் அதை விற்க சிரமப்பட வேண்டிவரும். வீடு வீடாகச் சென்றுதான் விற்க வேண்டும். அவர்களின் அதிர்ஷ்டம் சில மிதிவண்டி மீன் வியாபாரிகள் அவ்விடம் வந்தனர். அவர்கள் இந்த குளத்திலே வலைத்தொழில் செய்பவர்களிடம் மீன் வாங்கி கிராமங்களிலே கொண்டு சென்று விற்பவர்கள். பாட்டாளிபுர பெண்களிடம் இருந்த மீன்கள் அவர்களுக்கு வாய்ப்பாகி விட்டது. இவர்களுக்கும் வாய்ப்பானது. வீட்டில் கறிக்கு அளவாக மீன்கள் எடுத்து விட்டு மிகுதியை மிதிவண்டி வியாபாரிகளுக்கு விற்றார்கள். செங்கமலா மட்டும் விற்கவில்லை. அவள் ஊரில் பல வீடுகளுக்கு மீன் கொண்டு வருவதாக சொல்லி வந்திருந்தாள்.

முப்பது ரூபாப்படி இருநூற்றி நாற்பது ரூபாய் கையிற்கு வந்தது. அவள் வாழ்க்கையில் இவ்வளவு ஒரு தொகையை ஒரேயடியாக பெற்றுக் கொண்ட தருணம் இது. கண்ணிலே அதை ஒற்றி சேலையிலே முடிந்து கொண்டாள். விலாங்கு மீனும் விற்கப்பட்டு விட்டது. இன்னும் இரு மாதம் வரையில் குளத்தில் தண்ணீர் இருக்கும். பின்பு சேறு கலந்த நீர்தான் இருக்கும். அந்த மீன்களை பெரியளவாக உண்ண முடியாது. கிழமையில் இரு தடவை மீன் பிடிக்க வருவதே செல்லமுத்துவின் திட்டம். அதன் பின்பு மறுபடி கூலி வேலை செய்ய வேண்டியதுதான்.

“இன்னைக்கு நல்ல கறி வெச்சு சாப்பாடு போடணும். நாளைக்கும் கறி நமக்குப் பிரச்சினை இல்ல. கெழமைக்கு மூணு நாளைக்கி சரி தூண்டில் போட வர்லாம் போல. தூரமின்னாலும் பரவாயில்ல” நடந்தபடியே சொன்னாள் செல்லமுத்து. “ஆமாடீ நாலைஞ்சு ஜப்பானை கருவாடு போட்டு வெச்சாலும் அப்பப்போ கறி இல்லாட்டியும் சுட்டுசரி சாப்புடலாம்” சின்னபாப்பா சொன்னாள்.

நாரைக்குளத்தில் இருந்து பாட்டாளிபுரம் போகும் பாதையில் காடுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்றாறுகள், வயல்வெளிகள், புல்வெளிகள் என கண்ணுக்கினிய காட்சிகள். இயற்கைத்தாயின் அலங்காரத்திற்கு ஈடு ஏது? அவள் அலங்காரம் செய்யாவிட்டால் இந்த பூமிக்கு அழகு ஏது?

மாலை நான்கு மணிக்கெல்லாம் பாட்டாளிபுரத்துள் நுழைந்து விட்டார்கள். ஏதோ வெளிநாட்டிற்கு பயணம் செய்துவிட்டு வந்த வந்த மாதிரி உணர்வு. உலகில் எங்கே போனாலும்கூட சொந்தக் கிராமத்திலே வாழுகின்ற திருப்தி வருமா? செல்லமுத்துவைப் பொறுத்தவரை பாட்டாளிபுரம் என்பது அவளுக்குக் கிடைத்த வரம் இது மட்டுமே அவளுக்கு பூமியிலே தரம்.

நாளைய பரீட்சை முடிவுகளே செல்லமுத்து சிந்தனைக்குள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

சேனைபுரத்திலே மாரியம்மா கோயில் தான் பெரிய கோயில். கோயிலில் கருவறையும் ஒரு மண்டபமும்தான் இருந்த போதும் இந்த வட்டார கிராமங்களிலே பெரிய கோயில் அதுதான். அதன் அருகேதான் காளிராசாவின் வீடு. அவரின் பையன்தான் கனகராசா. அவனுக்கு முப்பது வயது ஆகிறது. நான்கைந்து பேரை காதலித்திருப்பான். ஒருவரையும் கைப்பிடிக்கவில்லை. ஒரு திருமணம் நிச்சயதார்த் தத்துடன் நின்று விட்டது. அவனின் கெட்ட குணங்கள் பற்றி அறிந்த பெண் தரப்பினர் திருமணத்தை திடீரென கைவிட்டனர். காளிராசா நல்ல குணமானவர். மாரியம்மா கோயிலின் ஆலய பரிபாலன சபையின் செயலாளரும் அவர்தான். அவர் கோயில் நிருவாகத்தை பொறுப்பெடுத்த பின்பு தான் கோயிலுக்கு காண்டா மணி வந்ததாக சேனைபுரத்திலே பெருமையாக பேசிக் கொள்வார்கள். சில மரங்கள் நல்ல செழிப்பாக இருப்பதுண்டு. ஆனால் அதன் கனிகளோ உண்ணத்தக்க சுவையாய் இருப்பதில்லை. காளிராசாவின் பையன் கனகராசாவும் அப்படித்தான். மனைவி மட்டுமா? பிள்ளை அமைவது கூட கடவுள் கொடுத்த வரமாகத்தானே இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகராசாவிடம் இருக்கும் பணம்தான் கண்மணியை அவனுக்கு கட்டிவைக்க மங்களத்தை தூண்டியது. கண்மணியோ சிங்கராயரோ இதற்குத் துணை இல்லை. கனகராசாவிற்கு முப்பது வயது கண்மணிக்கோ பதினேழுதான் முடிகிறது.

கனகராசாவிற்கு கண்மணி மீது ஒரு கண். அவள் பாடசாலை செல்லும் நாட்களில் தனது மிதிவண்டியிலே சென்று அவளுடன் பேசுவதற்கு அவன் எடுத்த முயற்சிகள் பல. அவளைத் தன்பால் வீழ்த்திட இவன் கண்மணியை உற்றுப் பார்த்தும் கண்மணி இவனை பார்த்ததாக இல்லை. "இவளோட திமிருக்கு இவள மருந்து செஞ்சுசரி விழுத்துறனா இல்லையான்னு பாரேன்..." என தனக்குள் சபதம் எடுத்துக் கொண்டான் கனகராசா. மாந்திரீக வழி மூலம் கண்மணியை தன்பால் ஈர்க்கச் செய்து அவளை தன் காலடிக்கு கொண்டு வருவதுதான் அவன் திட்டம்.

சில நாட்களுக்கு முன்பு மயிலு சாஸ்திரியிடம் அவன் இந்த விடயத்தைச் சொன்னான். கண்மணி தன் பின்னால் அலையும் படியாகவும் தன்னை காதலனாக ஏற்கும் படியாகவும் மாந்திரீகம் செய்து தரும்படி கேட்டிருந்தான் கனகராசா. மயிலுக்கு என்ன? யார் கேட்டாலும் செய்து கொடுப்பதுதானே அவன் வேலை. அதன்படி இந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளை, வாய்க்கால் அருகிலுள்ள மயிலுவின் பூசை இடத்திற்கு கனகராசா சென்றான்.

இந்த வேலைக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் கூலி ஏற்கனவே மயிலு பேசி விட்டான். காதல் விசயங்களுக்கு இளைஞர்கள் கோடியையும் கொட்டுவார்கள் என்பது மயிலுவுக்கு தெரியாதா? அதன் படி நள்ளிரவு வேளை ஒரு சேவல் பலியும் போட்டு, பூசை செய்து ஒரு தகட்டினை மந்திரித்து கனகராசாவிடம் கொடுத்தான் மயிலு. அப்போது கனகராசா கேட்டான். "ஏன் மயிலு சாமி இந்த யந்திர தகட்டை என்ன செய்யணும்.."

"டேய் கனகு இதிலதான்டா விசயம் இருக்கு. நா இப்ப அழைச்சது சாதாரண ஆள் இல்லை. காட்டேரி. கோழிப் பலியும் குருத்திருக்க. சொன்னமாதிரி நடக்கும். நீ என்ன செய்யிறியன்னா இந்த யந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகட்ட கண்மணி போய்வாற பாதை ஒன்னுல ஒரு அடி ஆழத்துல புதைச்சு விடு. அது போதும். மத்ததெல்லாம் காட்டேரி பார்த்துக்கும்..."

"பொதைச்சா போதுமா சாமி பெறகு அவ..."

"அதெல்லாம் காட்டேரி பார்த்துக் கொள்ளும்டா. இன்னையிலேர்ந்து ஏழு நாள்ல அவளாகவே ஓங்கிட்ட வருவா... ஏன்னா ஒன்னோட நெனைப்பு அவளுக்கு வரும். ஓம் பின்னாடி அலையுவா. அப்புறம் தெரியும்டா இந்த மயிலுவோட வேலை பத்தி".

இப்படி மயிலு சொன்னதும் நம்பிக்கையில் துளிர்ந்தான் கனகராசா. அன்றே இரவிரவாக கண்மணி வீட்டு கேற்றடியின் முன் பாதைக்கு ஒருவருக்கும் தெரியாதபடி சென்றான் கனகராசா.

எப்படியும் விடிகாலை இரண்டு மணியிருக்கும். சேனைபுரத்தில் இந்த நேரத்தில் யார்தான் வீதிகளில் திரியப் போகிறார்கள். சிங்கராயர் வீட்டிற்கு சற்றுத்தள்ளி நின்ற வீதியோர அத்தி மரத்திற்கு கீழே தன் மிதிவண்டியை நிறுத்தினான். சத்தம் சந்தடி இல்லாது மெதுவாக நகர்ந்து சிங்கராயர் காணியின் படலையடிக்குப் போய் விட்டான்.

கொஞ்சம் கரடுமுரடான நிலம்தான். கையால் தோண்டுவது கடினம். எனவே சற்றுத்தள்ளி நடந்து ஒரு குச்சி எடுத்து சிறு கிடங்கு தோண்டினான். இரண்டு இஞ்சியளவு நீளமான அந்த செப்புத் தகடினை அதனுள் போட்டு மூடினான். கிடங்கு தோண்டிய அடையாளம் இல்லாதவாறு தடயத்தை மறைப்புச்செய்து விட்டு பெரிய இமாலய சாதனை புரிந்த திருப்தியில் கிளம்பினான் கனகராசா.

ஏழு நாட்களை எண்ணிக் கொண்டிருந்தது அவன் மனம். இடையிடையே அவள் செல்லும் நாட்களில் தன் மிதி வண்டியில் சென்று அவளை உற்றுப்பார்த்தான். அவளிடமிருந்து எந்த சமிக்ஞையும் தெரியவில்லை. "சரியா ஏழுநாள் முடிஞ்சாதான் அவ வழிக்கு வருவா போல" என மனதுள் எண்ணிக் காத்திருந்தான் கனகராசா.

மயிலு கொடுத்த யந்திரத் தகட்டினை புதைத்த இடத்தினையும் அவ்வப்போது நோட்டமிட்டான். அதைக்கடந்து கண்மணி சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதையும் உறுதிப்படுத்தினான். ஆனால் மயிலு சொன்னது போல கண்மணி இவன் பின்னே அலையவும் இல்லை. இவனை காதலிக்கவும் இல்லை. "ஏம் பின்னாடி வராட்டிலும் பரவாயில்ல. என்னய மொகம் கூட பார்க்கிறா இல்லையே. பதினாறு நாள் ஆயிடிச்சி. மயிலு சொன்னமாதிரி ஒன்னுமே நடக்கலையே" கனகராசா தனக்குள் வெறுப்படைந்தான்.

அவனுக்குள் இருந்த நம்பிக்கை யாவும் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கு நிலைக்கு வந்து விட்டது.

இந்தக் காலத்தில் கனகராசாவை பன்றி இறைச்சி, ஆமை இறைச்சி போன்றவற்றை சாப்பிட வேண்டாமென மயிலு சாஸ்திரி கட்டளை போட்டிருந்தார். அதெல்லாம் சாப்பிட்டால் யந்திரம் வேலை செய்யாதாம். அவனோ தன் எண்ணம் வெற்றி பெற வேண்டுமென மீன் கூட சாப்பிடாமல் இருந்தான். ஆனால் பலன் கிடைக்கவில்லை.

மாலை 06:30 மணி

இருளும் ஒளியும் கைகோர்த்துக் கலந்திருக்கிறது.

மயிலு சாஸ்திரியின் பூசை புரியும் இடத்தின் முன்னே வாய்க்கால் ஓடிக் கொண்டிருக்கின்றது. இந்த வாய்க்காலிலும் சிறு மீன்கள். ஓலையால் வேயப்பட்ட பூசை கொட்டகையிலே மயிலு சாஸ்திரி விளக்கு கொளுத்திய வண்ணம் இருக்கிறார். கனகராசா வாய்க்காலை பார்த்துக் கொண்டிருப்பதை கண்டு விட்டார். "வாப்பா கனகராசா மொகத்துல ஒரு கவர்ச்சி தெரியுது. எல்லாம் சரிதானே" என்றார். வாயைப் பொத்தாமலே ஒரு இருமல் இருமினார். ஒவ்வொரு நாளும் வகை தொகையின்றி சுருட்டு புகைப்பார் மயிலு சாஸ்திரி. நோய்கள், சாஸ்திரி என்றும் விவசாயி என்றும் பார்த்தா வருகின்றன. மயிலு இருமிய போது சிறு எச்சில் துளி கனகராசாவின் கையிலே பட்டாலும் கனகராசா அதை கண்டுகொள்ளவில்லை. அவன் மௌனமாகவே இருந்தான்.

மீண்டும் சாஸ்திரி கேட்டார் "என்னப்பா சரியாகீட்டுதானே வெற்றிதானே. எப்புடி என்னோட வேலையோட தெறம" என்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை மயிலு சாமி. நீங்க சொன்னமாதிரி கண்மணி நடக்கிற பாதையிலதான் யந்திரத்த புதைச்சேன். அவ அதுக்கு மேலால நடந்து போனத்தையும் பார்த்தேன். நீங்க சொன்ன மாதிரி அவ என்ல ஆசை வைப்பான்னு நெனைச்சி எட்டாம் நாள் கண்மணி என்னோட கதைக்க மாட்டியான்னு கேட்டேன். இப்ப சும்மா கூட பார்க்கிறா இல்ல. ஏழு நாள் சொன்னீங்க. பதினாலு நாள் முடிஞ்சி போச்சி. ஒன்னும் நடந்த மாதிரி தெரியல.."

"கொஞ்சம் பொறுப்பா தேங்காய ஒடைச்சிட்டு காட்டேரிய அழைச்சு கேக்கிறேன் என்ன பதில் வருதுன்னு பார்ப்பம்".

மயிலு தேங்காயை உடைத்தார். ஏதோ ஓதியபடி கண்களை மூடினார். ஒருபுறம் மங்களத்திற்கு விசுவாசமாக மாந்திரீக வேலை. மறுபுறம் அதே குடும்பத்திற்கு எதிராக இன்னொரு மாந்திரீக வேலை. இது இரண்டுமே மயிலுவுக்கு மட்டுமே தெரியும். ஏனைய இரு தரப்பிற்கு தெரியாது.

ஐந்து நிமிடங்கள் வரை கண்களை மூடியிருந்த மயிலு மெதுவாக கண்களைத் திறந்தார்.

இரந்து நிற்கும் யாசகனைப் போல எதையோ எதிர்பார்த்தவனாய் கனகராசா. ஏதும் நல்லதை மயிலு சொல்வாரா என தவிக்கிறது அவன் மனம். மயிலு சொன்னது நடக்காமல் விட்ட பின்பும் இந்தக் கணம் வரை மயிலு மீது அவனுக்கிருந்த நம்பிக்கை அவ்வளவாக குறையவில்லை.

வெளியே இருள். மயிலுவின் பூசைக் கொட்டகையிலிருந்து சிறிது தூரத்திலே வாய்க்காலில் சிலர் குளிக்கிறார்கள். சில தொழிலாளர்கள் வேலை முடித்துவிட்டு இந்த இரவுப் பொழுதில் தான் வாய்க்காலில் குளிப்பார்கள். வயல்களை அண்டி வாய்க்கால் ஓடுவதால் நீர் தூய்மையாகவே இருக்கும்.

மயிலு சாஸ்திரி தொடர்ந்தார். "ஏம்ப்பா கனகராசா ஒன்னோட ஜாதகப் பிரச்சினைதான் மாந்திரீகம் வேலை செய்யாததுக்கு காரணம். முக்கிய கிரகம் எதுவுமே ஒனக்கு சரியான எடத்துல இல்லை. கிரகம் பகையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும் மாந்திரீகம் பலிக்காது கொஞ்சம் பொறுத்துக்கோ" என்றார். கனகராசா வேறு கேள்வி கேட்கவில்லை. மாந்திரீகம் செய்ய முன்பு கிரகப் பிரச்சினையால் அது பலிக்காது என்பது ஏன் மயிலுவுக்கு தெரியவில்லை. அதை ஏன் காட்டேரி சொல்லவில்லை.

அப்படியானால் ஏழு நாட்களில் காரியம் நடக்குமென ஏன் மயிலு சொல்ல வேண்டும். இந்த வேலை பலிக்காது என கைவிட்டிருக் கலாமே. முன்பும் இதே காட்டேரியை கூப்பிட்டுத்தானே யந்திரத்தகடு கொடுத்தார். அப்போது ஏன் காட்டேரி ஏழு நாட்களில் காரியம் நடக்குமென சொன்னது? இப்படி எல்லாம் கனகராசாவின் மனதிலே கேள்வி அலைகள் பொங்கியதே தவிர வார்த்தையாக வரவில்லை. நடந்தது நடக்கப்போவது இவருக்குத் தெரியும் என்றால் முதலே இந்த விடயம் பலிக்காது என சொல்ல வேண்டியதுதானே என கனகராசா நினைத்தான்.

இருப்பினும் கேள்விகள் கேட்டு மயிலு சாஸ்திரியை பகைக்க அவன் விரும்பவில்லை. மயிலு ஏதோ தன்னை ஏமாற்றியதாகவே அவனுக்குப் பட்டது. பணத்தை இழந்தது தான் மிச்சம். இனி இந்தப் பக்கமே நினைத்துப் பார்க்கக்கூடாது என நினைத்தபடியே வாய்க் காலில் கால்களை கழுவி விட்டு மாரியம்மா கோயிலடியின் தன் வீட்டுக்குப் போகிறான் கனகராசா.

ஒன்று கிடைக்காது எனும்போது அதை எப்பாடு பட்டும் பெற முடியாது என்பது அவனுக்குத் தெளிவாகுமா?

பொதுசன
06 NOV 2019
மாநகர
யாழ்ப்பாண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

ஒரு கிழிந்த சாக்கு. அதன் மேலே நான்கைந்து ஜப்பான் மீன்கள். சிறிய சட்டியில் தண்ணீர். ஒரு பலகைக் கட்டை மேலே இருந்தபடி மீன் செதில்களை நீக்குகிறாள் செல்லமுத்து. நீண்ட நாட்களுக்குப் பிறகு இன்று நல்லதொரு சாப்பாடு செல்லமுத்து வீட்டிலே தயாராகிறது. நாரைக்குளத்திலே மீன் பிடித்துவிட்டு வரும்போது வள்ளுவர்புரத்திலே உள்ள சிறுகடை ஒன்றிலே மிளகாய்த்தூள் வாங்கி வந்திருந்தாள். சில மீன்களை இரவுக்கு கறியாக்கிவிட்டு எஞ்சியவற்றை அவித்து வைத்து விட்டால் நாளைக்கும் கறி வைக்கலாம் என்பதே செல்லமுத்துவின் திட்டம். நாளைக்கு கண்ணாவின் பரீட்சை முடிவுகள் வரும். கண்ணா நிச்சயம் நல்ல பெறுபேறு எடுப்பான் என்பதில் செல்லமுத்துவுக்கு மட்டுமல்ல அயலூரிலுள்ள பலருக்கும் நம்பிக்கை இருந்தது. செல்லமுத்து இத்தனை காலம் இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி உழைத்த உழைப்பிற்கு ஒரு நல்ல பலன் இல்லாமலா போய் விடும். நாளை வேப்பமரத்தடி அம்மன் கோயிலில் தேங்காய் உடைப்பதுவும் அவள் எண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரோ வேகமாய் வருகிறார்கள். சேனைபுரத்து ராசன்தான் வருகிறான் போல. கடுதா நாய் குரைத்த போதுதான் செல்லமுத்துவும் அந்தப்பக்கம் பார்த்தாள். சேனைபுரத்து ராசனை அவளுக்குத் தெரியும். அவர்கள் வீட்டிற்கு நெல்லு குற்றும் வேலைக்கு அவள் போய் இருக்கிறாள். "ஏய் கடுதா அங்கால போ.." என்ற படியே மீனை அப்படியே வைத்துவிட்டு எழுந்தாள் "வா ராசேன் இவ்வளவு வேகமா வாறே..."

ராசன் மூச்சிரைத்தான் செல்லமுத்துவுக்கு ஒரு புறம் பதற்றம். திரும்பவும் கேட்டாள். "என்னா ராசேன்...."

"வேகமாக என்னோட சைக்கிள்ல வாங்க செல்லமுத்துக்கா"

"ஏ....ஏ..ன் சொல்லு ராசேன்..."

"காளியப்பண்ணே சேனைபுர ராஜதுரை கடையில "காட்" விளையாடிகிட்டு இருந்தாரம். இருந்தாப் போல திடீர்னு சரிஞ்சிட்டாரு. வாயால ரத்தமும் வந்திருக்காம். நானும் போய் பார்ப்பம்னு இருக்க நம்ம அப்பாதான் ஓங்கக்கிட்ட ஓடனே சொல்லிவிட சொன்னாரு. அதுல சும்மா தண்ணி தெளிச்சு பார்த்து கிட்டு இருக்காங்க. வாங்க இப்பிடியே".

எவ்வளவு சந்தோசத்திலே செல்லமுத்து இருந்தாளோ அத்தனை சந்தோசத்தையும் இந்தச் செய்தியுடன் இழந்தாள் அவள். அவளின் நெஞ்சு பதறியது. ஒரு வாசலைத்திறந்தபோது மறு வாசல் மூடப்பட்டதோ?

மளமளவென மீன்களை சட்டியால் மூடிவிட்டு ராசனுடன் மிதி வண்டியில் ஏறினாள். கண்ணாவும் இல்லை. கண்ணா சேனைபுர பாடசாலையில்தான் நிற்க வேண்டும். காணியை விட்டு வெளியேறும் போது சீனியம்மாவை கூப்பிட்டு தகவல் சொல்லி விடுகிறாள்.

"சீனியம்மா சீனியம்மா நா அவசரமா சேனைபுரம் போறே..ன். கண்ணா வந்தா சொல்லி விடுங்க என" என்று அவசரமாய் சொன்னாள். பதினைந்து நிமிட வேகமான சைக்கிள் ஓட்டம். சேனைபுரத்தடியை சேர்ந்து விட்டார்கள்.

சேனைபுரத்து ராஜதுரை கடையின் முன்னுள்ள வேப்பமரத்தின் கீழே சத்தமாக மூச்சிரைத்தபடி கிடக்கிறான் காளியப்பன். ஒரு தொகை மக்கள் அவ்விடத்திலே கூடி விட்டார்கள். சீட்டு ஆடுவதற்கென்றே பாட்டாளிபுரமிருந்து இங்கு வருவது காளியப்பனின் வழமை. அவனுக்கு வேறு என்னதான் வேலை. அதுதான் செல்லமுத்து உழைத்து சாப்பாடு போடுகிறாளே. ஆட்கள் நிற்பதையும் பாராது சத்தமிட்டு அழுதபடியே மிதிவண்டியை விட்டு இறங்கினாள் செல்லமுத்து. காளியப்பன் மூச்சிரைப்பதைப் பார்த்து அவள் கலக்கமடைந்தாள். அவன் வாயோடு தள்ளியிருந்த நுரையை தன் கையாலேயே உடனே துடைத்தாள். ஒரு மனைவியால் மட்டுமே தாயாகவும் இருக்க முடியும். ஒரு தாயால் தாயாக மட்டும்தானே இருக்க முடியும்.

"தண்ணி கிண்ணி குடிச்சாரா..." நின்றவர்களிடம் கேட்டாள்.

"தண்ணி குடுக்க கூடாதும்மா என்ன வருத்தமோ நமக்கு தெரியாதுல்ல... அதான் ஒன்னய வரச்சொல்லி ஆள் அனுப்பினோம்" கூட்டத்துள் இருந்த வயதானவர் ஒருவர் சொன்னார். "ஏம்மா வழமையா இப்டி ஏதாச்சும் மயக்கம் போட்டு விழுவானா?..." கடைக்கார ராஜதுரை கேட்டார். "மயக்கம் போடுவாரு. இப்டி நொரை வாயால தள்ளுறதில்ல.. ஏதும் பேசினாரா" செல்லமுத்துவின் பேச்சு அவளின் மன நிலையைக் காட்டியது. அவன் எப்படிப்பட்ட குடிகாரனோ.. கொடுமைக்காரனோ செல்லமுத்துவுக்கு அவன் நல்லவன்.

"ஏங்க ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக யாரும் ஒதவ மாட்டிங்களா" கெஞ்சிக் கேட்டாள் செல்லமுத்து. "இங்க ஆஸ்பத்திரி இல்ல. பள்ளிக்குடியிருப்பு தாண்டி தங்கபுரம் ஆஸ்பத்திரிக்குதான் கொண்டு போகணும். யாரும் வண்டில்காரங்க இல்லாட்டி மோட்டசைக் கிள்காரங்க இருந்தா கொண்டு போகலாம். அதுவும் ரெண்டாயிரம் கேப்பாங்க. ஒங்களுக்கு தெரிஞ்ச ஆக்கள் யாரும் இருந்தா கொண்டு போகலாம். அதுவும் நீங்கதான் கூட்டியாரனும். நாங்க யாருன்னாலும் ஒதவிக்கு பின்னுக்கு இருந்து புடிச்சிக்கிறம்..." ஒரு பொக்கை வாய் கிழவர் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாயிரம் ரூபாவுக்கு செல்லமுத்து எங்கே போவாள்? அது அவளால் நினைத்துப் பார்க்கக்கூடிய பணமா? சேனைபுரத்திலே அவள் உதவி கேட்கக்கூடிய யாரையும் அவளுக்குத் தெரியவில்லை. காளியப்பனோடு சேர்ந்து மாடு களவெடுக்கவும், சீட்டு ஆடவும் இணைந்திருந்த ஆட்கள் கூட அவன் இந்த நிலையில் இருக்கும் போது உதவியேதும் செய்ய முன் வரவில்லை. ஆடும் வரை தானே அருகே கூட்டம். அடங்கி விட்டால் எடுப்பார் ஓட்டம். இதுதானே இவ்வுலக இயல்பு. வசதி படைத்தவனுக்கு சிறு பிரச்சனை என்றால் கைகொடுக்க ஆயிரம் பேர் ஓடி வருகிறார்கள். ஏழைக்கு பெரும் பிரச்சினை என்றாலும் கைகொடுக்க யார்?

இப்போது காளியப்பனை சுற்றியிருந்த கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாக குறைகிறது. இரண்டு மூன்று பேர் வரையில்தான் அவ்விடத்தில் நிற்கிறார்கள். "பானையிலே சோறிருந்தால் பூனைகளும் சொந்தமடா. சோதனைய பங்கு வைச்சா சொந்தமில்லை பந்தமில்லை..." என கண்ணதாசன் பொய்யிற்கு எழுதவில்லையே.

காளியப்பனின் விழிகள் திறக்கவில்லை. அதே மூச்சிரைப்பு. செல்லமுத்து அவனை மடியில் வைத்திருக்கிறாள். இந்த மக்கள் இப்படித்தானோ? இவர்களுக்குள் ஒரு இரக்கமுள்ளவனும் இல்லையா? தனது இந்த நிலைக்கு உதவிட ஒரு உள்ளம் வராதா? இந்தப்பூமியிலே இருளடைந்த அறைதானா? இந்தக்கணமே இந்தப்பூமி நொறுங்கி அழிந்தால் என்ன? அவள் அழுதழுதே சிந்திக்கின்றாள். அப்போதுதான் அவளுக்கு சுந்தரத்தார் நினைவு வந்தது. வேகமாக பாட்டாளிபுரம் சென்று சுந்தரத்தாரிடம் சென்று கடனாக இரண்டாயிரம் ரூபா வாங்கி பாட்டாளிபுரத்திலேயே ஒரு வண்டிலைப் பிடித்து உடனே காளியப்பனை தங்கபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக நினைத்தாள். பாட்டாளிபுரத்திலே சுந்தரத்தாரிடமும், சின்னவா என்பவனிடமுமே மோட்டார் சைக்கிள் உண்டு. சுந்தரத்தாரின் மோட்டார் சைக்கிளை கேட்டால் எப்படியும் உதவி செய்வார் என்ற நம்பிக்கை செல்லமுத்துவுக்கு இருந்தது.

பாட்டாளிபுரம் என்றால் அவளுக்கு இந்தப்பிரச்சினை இருந்திராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாராவது மாட்டு வண்டியில் சரி ஏற்றி உதவி இருப்பார்கள். இங்கே யாரிடம் அவள் இரண்டாயிரம் கேட்பாள். சுற்றி நின்றவர்கள் கூட ஆளொரு பக்கமாக மாறி விட்டார்கள். பாட்டாளிபுரம் சென்று கொண்டிருந்த ஒருவரின் மிதிவண்டியில் ஏறி பாட்டாளிபுரம் போகிறாள் செல்லமுத்து.

இப்போது இலேசாக இருள் பரவத் தொடங்கி விட்டது. குடையில்லா நாளிலே கொடும் மழை வந்தால் எப்படி? ஏதாவதொரு பகற்பொழுதிலே காளியப்பனுக்கு இப்படி வருத்தம் வந்திருந்தால் சில அலுவல்களை அவள் கொஞ்சம் சரி இலேசாக பார்த்திருக்க முடியும். இந்த இரவு பூக்கும் பொழுது பார்த்து இப்படி நடந்திருக்கிறதே. செல்லமுத்து என்னதான் செய்வாள். கண்ணா பாடசாலையின்தான் நிற்கிறான். நாளை பாடசாலையிலே நடைபெற இருக்கும் சிறு நிகழ்வுக்கான வேலைகளை தன் தோழர்களுடன் சேர்ந்து அவன் செய்து கொண்டிருக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16

சுந்தரத்தார் வீட்டிலே அரிக்கன் விளக்கு வெளிச்சம் தெரிகிறது. சுந்தரத்தாரின் மனைவியும், பிள்ளையும் வள்ளுவர்புரத்திலுள்ள உறவினர் வீடொன்றிற்குச் சென்று விட்டார்கள். வருவதற்கு இரண்டு நாட்களாகும். சுந்தரத்தார் மட்டுமே வீட்டிலே இருக்கிறார்.

"சுந்தரம் அண்ணே" வேகமாக மூச்சை வாங்கியபடி கூப்பிட்ட செல்லமுத்து, அதே வேகத்தில் சுந்தரத்தார் காணிக்குள் நுழைகின்றாள். கோழிக்கூட்டினை மூடிக்கொண்டிருந்தார் சுந்தரம். ஒரு சேவல் வெளியே தவறிவிட்டத்தைக்கூட கவனிக்கவில்லை. அது "கெக்..கெக்.." எனக்கத்திய போதுதான் அதைக் கண்டார் சுந்தரம். "பாப்..பாப்.. போ உள்ளுக்கு" சுந்தரத்தார் சேவலை உள்ளே அனுப்பினார்.

"வா... செல்லமுத்து என்னா இந்த நேரத்துல. களைச்சுப் போயி வந்திருக்கே. இந்த திண்ணையில உட்காரு.."

அவள் உட்கார்ந்து பேசும் நிலையிலா இருக்கிறாள். அவள் நெஞ்சிலே இப்போது ஒரு எரிமலையே குமுறுகிறது. வாழ்ந்து கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது சாவைவிட கொடூரமான மனோ நிலைகள் மனிதர்க்கு தோன்றுகின்றன. அப்போதுதான் மனிதன் சாவு இதை விட சுகமானது என நினைத்துக் கொள்கிறான். செல்லமுத்துக்கூட இப்போது அந்த நிலையில்தான்.

சுந்தரத்தாருக்கு விடயம் சொன்னாள். அவரிடமிருந்து நல்ல செய்தி கிடைக்குமென எதிர்ப்பார்த்தாள். காசு தரவோ அல்லது மோட்டார் சைக்கிளில் வரவோ சுந்தரத்தார் சம்மதிப்பார் என செல்லமுத்து நம்பினாள்.

"இரு செல்லமுத்து. எவ்வளோ காசு இருக்குன்னு பார்க்கிறேன்" என்ற சுந்தரத்தார் அரிக்கன் விளக்கை வைத்துவிட்டு உள்ளே போனார். இத்தனை ஆண்டுகளாக சுந்தரத்தார் காணியில் உழைக்கிறாள் செல்லமுத்து. அவளை நம்பி அவர் காசு கொடுக்க மாட்டாரா? தினமும் வேலை செய்தே கடனை அடைத்து விடுவாளே.

தன் வீட்டின் உள் அறைக்குப் போன சுந்தரத்தார் "செல்லமுத்து.." என்றார். திண்ணைக்கு அருகில் பதறியபடியே நின்று கொண்டிருந்த செல்லமுத்து "ஐயா..." என்றாள். "காசு இருக்கு இங்கை வாவேன்.." என்றார். "காசு இருக்கு" என்ற வார்த்தையே அவளுக்கு நெஞ்சிலிருந்த நெருப்பைக் கொஞ்சம் தணித்த மாதிரி இருந்தது. "ஐயா.." என விறாந்தையிலே கால் பதித்தாள் செல்லமுத்து.

"உள்ளுக்கு வா செல்லமுத்து. பாரு இந்தக் காசு காணுமா?"

ஆகா சுந்தரத்தாரிடம் எத்தனை பண்பு. கேட்டவுடன் கொடுக்கும் குணம் போல "ஐயா..." என்றபடியே உள் அறைக்குள் செல்லமுத்து கால் வைத்தாள். அரிக்கன் விளக்கு வெளியேதான் இருக்கிறது. அதனால் அவ்வளவாக உள்ளே வெளிச்சம் இல்லை. சிறு வெளிச்சத்துள் எப்படி சுந்தரத்தார் காசு எடுத்தாரோ! இதுவரை நாளும் செல்லமுத்து சுந்தரத்தார் வீட்டு உள் அறைக்குள் போனதே இல்லை. மூன்று அறைகள் கொண்ட மண் வீடுதான் சுந்தரத்தார் வீடு.

செல்லமுத்துவின் கையைப் பிடித்தார் சுந்தரத்தார். "ஐயா... என்னையா.." என கையை இழுத்தாள் செல்லமுத்து. "பயப்புடாதை செல்லமுத்து நா காளியப்பன ஏத்திக்கிட்டுப் போறேன். இங்கை வா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியபடியே அவளை மறுபடியும் பிடித்தார். ஒரு குழந்தையின் பசியை தாயால் இலகுவாக புரிந்து கொள்ள முடியும். ஒரு ஆணின் காம மனோநிலையை ஒரு பெண்ணால் இலகுவாக கண்டறிய முடியும். அதற்கு செல்லமுத்து விதிவிலக்கானவள் அல்லள். சுந்தரத்தார் வீட்டிலே இன்று யாருமே இல்லாதது அவருக்கு வாய்ப்பானது. செல்லமுத்துவிடம் அவரின் இச்சையை தீர்ப்பதே அவரின் எண்ணம். செல்லமுத்து தன்னிடம் இலகுவாக வந்துவிடுவாள் என நம்பினார் அவர்.

ஏழைப்பெண் என்பதால் அவளிடம் சுய கட்டுப்பாடு ஒரு கணவன் விசுவாசம் என்பன இருக்கவா போகிறது என்பதே சுந்தரத்தாரின் ஆழ்மன நிலைப்பாடு. சுந்தரத்தாரின் மனதிலே ஏற்கனவே செல்லமுத்துமீது ஒரு கண் இருந்தது. ஆனால் அவருக்கு இவ்வளவு நாள் இப்படியானதொரு வாய்ப்பு வரவில்லை. அதுவரை அவர் தன்னையொரு பண்புள்ளவராகவே காட்டிக் கொண்டார். பாலகனாய் பகலில் இருக்கும் சில ஆண்கள் பள்ளியறைக்குப் போனதும் காம வீரர்களாய் மாறுவது போல பண்பாளராய் தன்னை காட்டிக்கொண்ட சுந்தரத்தார் இப்படியொரு வாய்ப்புக் கிடைத்ததும் அரக்க குணத்தை அவிழ்த்து விட்டார். சமூகத்திலே சில ஆண்கள் வெளியில் பாலையும் உள்ளே விசத்தையும் கொண்டு அலைவதை செல்லமுத்து அறிந்திருக்கிறாள். சுந்தரத்தாரில் அவள் வைத்திருந்த பெரிய நம்பிக்கை இப்போது தகர்ந்தது. அவள் இருக்கும் இந்த நிலையிலா அவளை அவர் இப்படி செய்ய முற்பட வேண்டும்.

அவள் சத்தமிடவில்லை. ஓடவும் இல்லை. சுந்தரத்தாரின் கைப்பிடியை விலக்கி விறாந்தையிலே கால் பதித்தாள். "வேணா சுந்தரத்தார். நீங்க கவுரவமான குடும்பம். அம்மா, புள்ள என்மேல எவ்ளோ பாசம் வெச்சிருக்காங்க. நீங்க ஏன் சுந்தரத்தார் இப்டி.... ஏழைகன்னா நமக்கு சூடு சொரனை இல்லையா? ஒரு ரூபா காசு சும்மா வாங்கினாகூட வெயில் மழையின்னு பார்க்காம ஒழைச்சி தானே காசு வாங்கினோம். உயிருக்குப் அவரு போராடுற நேரத்துல.. ச்.சீ.... நா வர்றேன்..." பேசிவிட்டு அழுதழுதே வாசற்படியில் கால் வைத்தாள் அவள். மோட்டார் சைக்கிள் வைத்திருக்கும் சின்னவா விடம் போவதே அவள் எண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HA-
PL

வேகமாய் வந்த சுந்தரத்தார் அவளின் சேலையைப் பிடித்தார். "ஏய் செல்லமுத்து சத்தம் போடாதை. அப்புறம் ஒனக்குத்தான் மரியாதை இல்ல. ஓம் புருசன் இருக்கிற நெலையில அவன காப்பாத்த நா மட்டும் தான் ஒதவ முடியும். இங்க ஒருத்தரும் இல்லை. இதாலை ஒன்னும் கெட்டுப்போறது இல்லை. இது பெரிய பாவமும் இல்லை. மண்ணு திங்கிறத மனுசன் திண்ணுட்டுப் போறது. எனக்கு பொறுத்துக்கொள்ள முடியல. என்னோட சம்சாரம் இப்ப இதுக்கெல்லாம் வாறதே இல்லை. அஞ்சே நிமிசம் வா... அப்புறம் நானே மோட்டர் சைக்கிள்ள கொண்டு போய் விடுறன்..." ஆசை வெட்கமறியாது என்பது சும்மா சொல்லப்பட்ட தல்லவே. காமம் சூழ்ந்த புத்தி வேறுசிந்தனைகளை மறந்து விடுகிறது. செல்லமுத்து இருக்கும் நிலை தெரியாத சுந்தரத்தார் போன்ற மனிதவுருவில் தெரிபவர்களையா மனிதரில் மிருகம் என சொல்கிறார்கள். செல்லமுத்து பலாத்காரமாய் கையை விடுவித்தாள். சாரம் மாத்திரமே அணிந்து மேலாடை ஒன்றும் இல்லாமல் இருக்கிறார் சுந்தரத்தார்.

"செல்லமுத்து ஒனக்கு தேவையான காச நீயே எடுத்துக்கோ. கொஞ்ச நேரம்தான்"

"நாம ஒருத்தனுக்குத்தான் முந்தான விரிச்சோம். கள்ளனோ காவாலியோ அவருதான் எனக்கு. பூ மாதிரி பொண்டாட்டிய வெச்சிகிட்டு வப்பாட்டி கேக்குதா? ஒங்களமாதிரி ஆக்கள்ட வேலை செஞ்சிருக்கோமே. ச்..சீ".

ஒரு பெண்ணால் தாயாக மட்டுமல்ல வதம் செய்பவளாகவும் மாற முடியும். இன்னும் ஒரு தடவை சுந்தரத்தார் அவளைப் பிடித்தால் அவள் அப்படித்தான் ஆகி விடுவாள். பின்பு சுந்தரத்தார் அமரர் ஆக வேண்டிய நிலை கூட வரலாம். இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கும் செல்லமுத்துவிடம் இருக்கும் உடற்பலத்தில் கால்வாசிக்கூட சுந்தரத் தாரிடம் இல்லை. இவ்வளவு அவள் பொறுத்ததே அவரில் வைத்துள்ள மரியாதைக்காகத்தான். சுந்தரத்தார் கொஞ்சம் வெறி பிடித்தவர் போலத்தான் இருக்கிறார். சில ஆண்கள் சாகும் தறுவாயில் கூட சில பெண்களை கண்டால் கண்களால் சரி அனுபவித்து விட்டே சாவார்களாம். இந்த வர்க்கம் போல சுந்தரத்தார். ஒருவன் தவறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவில்லை என்றால் இரண்டு காரணம். ஒன்று அவன் நல்லவன். அல்லது அவனுக்கு தவறு செய்யும் சந்தர்ப்பம் இதுவரை அமைய வில்லை.

சுந்தரத்தார் செல்லமுத்துவை கட்டியணைக்க முற்படுகிறார். அவ் வேளை "செல்லமுத்து அக்கா..." என ஒரு குரல். சுந்தரத்தார் பயத்தின் உச்சிக்கே போய் விட்டார். "யாரும் நடந்ததை பார்த்து விட்டார்களோ..." அவருக்குள் திடீர் பதற்றம். இருப்பினும் இருட்டு என்றபடியால் யாரும் பார்த்திருக்க மாட்டார்கள் என்ற ஒரு ஆறுதலும் இருந்தது.

"யாரு... வாறேன்.." என்றபடியே தடிகளால் ஆன சுந்தரத்தார் வீட்டு கேற்றடிக்கு ஓடினாள் செல்லமுத்து. "என்னன்னா செல்லமுத்துக்கா சேனைபுரத்து சிங்கராயர் காளியப்பண்ணன ஒரு மோட்டர் சைக்கிள் புடிச்சு ஏத்திக்கிட்டு தங்கபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போறாராம். நீங்க சுந்தரம் அண்ணைகிட்ட வந்ததா கடை ராஜதுரை அண்ணை சொன்னாரு. நீங்க போயி கொஞ்ச நேரத்துலதான் சிங்கராயர் அந்த எடம் வந்தாரு. அதான் ஒங்களுக்கு விசயம் சொல்லி ஏத்திப்போக வந்தேன்" மிதி வண்டியில் வந்திருந்த ராசன் தகவலை சொன்னான். காளியப்பன் ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் செல்லப்பட்டு விட்டான் எனும் சேதி அவளின் ஒரு பகுதி உள நெருப்பை தணித்தது. மெதுவாக நகர்ந்து வந்த சுந்தரத்தார் திருடன் போல பதுங்கி நின்று அந்த செம்பருத்திக் கூடலிலே மறைந்திருந்தபடியே என்னவென்று பார்க்கிறார்.

ஏடாகூடமான விடயம் எதுவுமில்லையென்ற படியால் நெஞ்சு தணிந்தார். ராசனின் மிதி வண்டியிலே ஏறிப்போகிறாள் செல்லமுத்து. ராசனின் உதவியோடு தங்கபுரம் வைத்தியசாலை செல்வதே அவளின் அடுத்த இலக்கு மிதிவண்டியில் செல்லும் போதே சுந்தரத்தாரின் கொடூர குணங்கள் அவளின் மனத்திரையில் படமாகியது. "இவ்ளோ நாளா எவ்ளோ நல்ல மனுசன் போல இருந்தாரு. இவருக்குள்ள இப்படி ஒரு மிருகம் தூங்கிகிட்டு இருந்திருக்கு. அவங்க அவங்க செய்யுற பாவத்துக்கு கடவுள் அப்பப்போ தண்டனை கெடைக்காமலா போவப்போகுது. இப்டி எத்தின மனிசர்பா" நினைத்துக் கொண்டாள் செல்லமுத்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

தங்கபுரம் ஆஸ்பத்திரி என்பது பெரிய வசதிகளுடன் கூடிய பெரிய ஆஸ்பத்திரி அல்ல. சத்திர சிகிச்சை போன்ற பெரிய விடயங்களுக்கு உரியவர்களை அங்கிருந்து நகர வைத்தியசாலைக்கு அனுப்பி விடுவார்கள். தங்கபுரத்திலே அம்புலன்ஸ் வசதி ஏதும் இல்லை. நோயாளர்கள் தாங்களாகவே ஒரு ஒழுங்கு செய்து நகரிற்கு போக வேண்டியது தான்.

வைத்தியசாலையினுள் செல்லமுத்து நுழைகிறாள். நோயாளர் கட்டிலில் காளியப்பன் படுக்க வைக்கப்பட்டிருக்கின்றான். கூடவே சிங்கராயரும் இருக்கிறார். சிங்கராயர் செய்த உதவிக்கு அவருடைய காலிலே விழ்ந்து வணங்க வேண்டும் போன்ற உணர்வு செல்லமுத்துவுக்குள் வந்தது. தன் கண்களால் அந்த நன்றியுணர்வை காட்டிக் கொண்டாள். மூன்று வைத்தியர்கள் காளியப்பனை பரிசோதிக் கிறார்கள். என்ன முடிவு வருமோ? என செல்லமுத்துவின் இதயம் படபடக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவு 08:30 மணி ஆகிறது.

சிங்கராயர் வீடு போக வேண்டியிருந்தது. செல்லமுத்துவும் வந்துவிட்டதால் அவர் அங்கிருந்து வீடு திரும்ப முடிவெடுத்தார். தன் வீட்டு எதிர்கால மாப்பிள்ளையின் தந்தைதானே என நினைத் துத்தான் சிங்கராயர் காளியப்பனுக்கு உதவி செய்தாரோ? அவர் செய்த இந்த உதவி போதாதா செல்லமுத்துவுக்கு. "ஏ.. செல்லமுத்து நம்ம வூட்டுல துணைக்கு யாருமில்ல தெரியும்தானே. வயசுக்கு வந்த பொண்ணும் இருக்கு. டொக்டர்கள் பார்க்கிறாங்க தானே. நா... நாளைக்கி காலைல வரப்பாக்கிறேன்" என்றார் சிங்கராயர். அவருக்கு நன்றி சொல்ல செல்லமுத்துவுக்கு வார்த்தைகள் வருமா? "ஐ..ய்...யா.." என தடுமாறினாள். "எப்புடியோ ஏம்புள்ள ஓம்மகனுக்கு வாக்கைப்படப் போறவ" மனதுள் நினைத்தார் சிங்கராயர். பெரியவர்க ளுக்கு பேசிக்காட்டவும் வேண்டுமா? முகத்தை வைத்தே அகத்தில் உள்ளதை கண்டுபிடித்து விடுவார்களே. செல்லமுத்துவின் நன்றி சொல்லும் மனது சிங்கராயருக்கு தெளிவாகவே புரிந்தது "காசு இல்லாத மனுசங்கிட்ட கண்ணியம் ரொம்பவே அதிகம்தான்" என நினைத்தபடியே வைத்தியசாலையை விட்டு வெளியேறுகிறார் சிங்கராயர்.

இரவு 9:00 மணி ஆகிறது.

சற்று நேரத்திற்கு முன்புதான் பாடசாலையின் நிகழ்வு வேலைகள் முடித்து கண்ணா வீட்டிற்கு வந்திருக்கின்றான். பக்கத்து வீட்டு சீனியம்மா காளியப்பனுக்கு நடந்த விசயத்தையும், செல்லமுத்து ஆஸ்பத்திரிக்கு போன விசயத்தையும் அவனுக்கு சொல்லி இருக்கிறார்.

இங்கே தங்கபுரம் ஆஸ்பத்திரியில் இப்போதுதான் வைத்திய பரிசோதனை முடிவு வந்திருக்கிறது. "ஏம்மா நீயாம்மா இவரோட மனைவி" அந்த பெண் வைத்திய அதிகாரி கேட்டார்.

"ஆமாம்மா...."

"இங்க பாரும்மா சேலைன் ஏத்தி இவருக்கு இப்ப எந்த வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையும் வராதபடி நாம காப்பாத்தீட்டம். ஆனா இவர தொடர்ந்து இங்கை வைச்சிருக்க ஏலாம்மா. இவரோ கார்ட் ரொம்ப வீக். இரத்தமும் ஏத்தணும். கிட்னிலையும் பிரச்சினை இருக்கு. டவுன் ஆஸ்பத்திரிக்கு ஒடனே கொண்டு போக ஏதும் அலுவல் பாரும்மா. ரொம்ப நேரம் வைச்சிருக்க ஏலாது. இந்தாம்மா இந்தக் குளிசைய இவர் எழும்புனாப்புறம் குடிக்க குடும்மா.."

போன பாரம் திரும்பி வந்து ஏறியதாகவே செல்லமுத்து நினைத்தாள். இவ்வளவு நேரம் கொஞ்சமாவது ஆறுதலாக இருந்தாள். இப்போது இன்னுமொரு இடியா? மனதிற்கும் உடலிற்கும் இதுதான் வித்தியாசமா? உடல் தாங்கும் வலிகள் மனதால் தாங்க முடிய வில்லை. ஒன்று, தெரியும்பொருள், மற்றையது தெரியாப் பொருள். மனம் என்ற ஒன்று இருந்திராவிட்டால் உலகிலே சந்தோசம் இருக்குமோ என்னவவோ பலர் துக்கமின்றி இருந்திருப்பார்கள்.

அன்றாடம் ஐம்பதும் அறுபதும் உழைத்து அதை மாலை உணவுக்காக செலவழிக்கும் செல்லமுத்து இப்போது பணத்திற்கு எங்கு போவாள். இன்று விலாங்கு மீன், ஜப்பான்மீன் பிடித்த போதிலே அவள் எவ்வளவு சந்தோசமாக இருந்தாள். அந்த மீனை கறிவைக்க முன்பே ஒரு துயர வலையிலே சிக்கித் தவிக்கிறாளே.

கிராமத்து மக்களின் உடனடி வைத்திய தேவைகளுக்காக இயங்கும் வைத்தியசாலைதான் தங்கபுரம் வைத்தியசாலை. இப்போது காளியப்பன் உள்ள நிலையில் அவனை எதாவதொரு வாகனத்தில் தான் கொண்டு போக வேண்டும். மாட்டு வண்டியில் வைத்து கொண்டு போவதென்றால் அதிக நேரமெடுக்கும். செல்லமுத்து காதிலே ஒருதோடுதானும் உண்டா?அப்படி இருந்தால் அதை விற்றே காளியப்பனை ஏற்றிக்கொண்டு போவாளே.

வீதிக்குச் சென்று பார்த்து ஏதாவது வெறுமையான வாகனங்கள் வருகின்றதா? எனப்பார்க்க நினைத்தாள். அழுதழுது இவள் கண்களில் நீர் கூட வற்றி விட்டது. மனதின் வலிகள் கூடி விட்டால் விழிகள் கூட வேலை செய்யாமல் போய் விடுகின்றன. மனிதன் சடலமாக நடமாடும் நிலைக்கே போய்விடுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வீதியால் அப்பப்போ உழவு இயந்திரங்கள் போகும். வேறு வகை வாகனங்கள் பயணிப்பதே அரிது. அப்பப்போ இங்குள்ள வசதி படைத்தவர்களின் "கார்", "ஆட்டோக்கள்" சென்று வரும் "ஒரு ரெக்டர் சரி வந்திச்சின்னா போதும். டிரைவரோட கால்ல விழுந்து சரி அவரை ஏத்தி தலையை மடியில வைச்சிக்கிட்டே டவுண் ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சேர்த்துருவேன்" அவள் மனது ஏக்கத்தோடு எண்ணிக் கொள்கிறது. தூரத்தே ஒரு மாட்டு வண்டில் வருகிறது. அது முழுவதும் வைக்கோல் குவிந்து கிடக்கிறது.

செம்மண் வீதியின் அருகோடுதான் தங்கபுரம் வைத்தியசாலை. பைத்தியம் பிடித்தவள் போல செந்நிற கற்களை ஒவ்வொன்றாக எறிந்தபடி தெருவையே பார்த்துக் கொண்டிருந்த செல்லமுத்துவை வைத்தியசாலைக்கு எதிர்வீட்டுக்கார அம்மா கண்டு விட்டார். அந்த அம்மாவே தெருவிற்கு வந்து செல்லமுத்துவிடம் கதை கொடுத்தார். "ஏம்மா.... என்னத்துக்கும்மா இதுல நிக்கிறே..."

"ஏதாச்சும் ரெக்டர் கிக்டர் வருமான்னு பார்க்கிறேம்மா..."

"ஏன் என்னத்துக்கு....

"என்னோட புருசன் ஆஸ்பத்திரிலம்மா. அவர டவுன் ஆஸ்பத்திரிக் குத்தான் கொண்டு போவனுமாம். நா பாட்டாளிபுரம். ஏங்கிட்ட வாகனம் புடிக்க ஏதும்மா வசதி. ரத்தமும் ஏத்தனுமாம். இதுக் கெல்லாம் நா என்னம்மா செய்வேன். அதான் மொதல்ல அவர ஆஸ்பத்திரிக்கு சரி அனுப்புவம்னு..." மூக்கினை சிந்தினாள் செல்லமுத்து.

இந்த உலகில் சில கருமங்கள் இருவழி நன்மையான வியாபாரங்கள் போலத்தான். அந்த ஆஸ்பத்திரியின் முன் வீட்டுஅம்மா அந்த விடயத்தைச் சொன்னபோது செல்லமுத்துவுக்கு போன உயிர் வந்து விட்ட மாதிரி ஓர் உணர்வு. அதற்கு செல்லமுத்து எந்த மாற்றுக் கருத்துமின்றி சம்மதம் தெரிவித்தாள். எரியப்போகும் இந்த உடலிற்குள், மண் தின்று விடப்போகும் இந்த உடலுக்குள் படைப்பில் இப்படியொரு பொக்கிசம் இருக்கிறதே என்பது அவளுக்கு அப்போது தான் புரிந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அம்மாவுக்கு தன் பிள்ளை பிழைக்க வேண்டும். செல்ல முத்துவுக்கு காளியப்பன் பிழைக்க வேண்டும். காளியப்பனை ஏற்றிச் செல்வதற்கும். மேலும் பணவுதவி செய்வதற்கும் அந்த அம்மா சம்மதம் தெரிவித்தார். தனது ஒரு சிறுநீரகத்தை விற்பதற்கு செல்லமுத்து சந்தோஷமாக சம்மதித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18

காலையிலேயே சேனைபுரம் பாடசாலைக்கு பதினோராம் வகுப்புத் தேர்வு முடிவுகள் வந்து சேர்ந்து விட்டன. முடிவுகளினை எடுத்து விட்டு, அம்மாவிடம் ஆஸ்பத்திரிக்குப் போவதுதான் கண்ணாவின் எண்ணம். சோதனை முடிவுகளை பார்வையிட சிங்கராயர் தன் மகள் கண்மணியை கூட்டி வந்திருந்தார். காலை பிரார்த்தனை வேளையில் அதிபர் பேசுகிறார். "இன்னைக்கு நம்ம பாடசாலையில கலை விழா நடக்க இருக்கு. அதுக்கு மொத ஒரு சந்தோஷமான சேதி. நம்ம வட்டாரத்துல ஆறு கிராமங்கள் இருக்குது. இதை விட வேற வளர்ச்சியடைஞ்ச கிராமங்களும் நம்மைச்சுற்றி இருக்குது. இத்தனை கிராம பாடசாலைகளும் செய்யாத சாதனைய நம்ம பாடசாலை செஞ்சிருக்கு. அதுக்கு காரணம் ஒரு பின் தங்கின கிராமம்தான்" என அவர் பேசும்போது ஒவ்வொருவரும் என்னவோ எதுவோ என விழிகளை உயர்த்தி அதிபரையே பார்க்கிறார்கள். மக்கள் சார்பான நிறைய நலன் விரும்பிகளும் அங்கே சூழ்ந்து இருக்கிறார்கள்.

"ஆம் நடந்து முடிந்த பதினோராம் வகுப்பு பரீட்சையில் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் கல்வி கற்கும் பாட்டாளிபுர கிராமத்தைச் சேர்ந்த காளியப்பன் கண்ணா கல்வி வலயத்திலேயே கூடிய பெறுபேற்றினை பெற்று பாடசாலை வரலாற்றிலே மட்டுமல்ல இந்த வலயத்திலும் உச்சக்கட்ட சாதனை படைத்திருக்கிறான். அவரை ஊக்கத்தோடு பள்ளிக்கு அனுப்பிய அவரது தாய் தந்தையரை பாராட்டுவதோடு செல்வன் கண்ணாவை அவரது தாய் தந்தையரையும் முன்னே அழைக்கிறேன்" என்றார். "வாயக்கட்டி வயித்தக் கட்டி அம்மா படிப்பிச்சிச்சி. இப்ப பாரு இந்த சந்தோசமான விசயத்துக்கு என்னோட அம்மாக்கு குடுத்து வைக்கலியே. அம்மா.... நீ இதை பர்க்கணுமே அம்மா" மனதுள் அழுதான் கண்ணா. அதன் வெளிப்பாடு கண்ணீராக வந்தது.

பெற்றோர்கள் எல்லோரும் வந்திருப்பதாகவே அதிபர் நினைத்தார். கண்ணாவின் வீட்டு நிலை அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில் லையே. காளியப்பன் தன்னுயிருக்காக போராடுவதும், செல்லமுத்து தன் சிறுநீரகத்தை விற்பதற்கு தயாராகி விட்டதையும் அவர் அறிய மாட்டரே. அவ்வளவு ஏன் கண்ணாகூட அதையறிய மாட்டானே. கண்ணா மட்டுமே அதிபர் முன் சென்றான். அவனை எல்லோருக்கும் அறிமுகப்படுத்திய அதிபர் "மாலை நடக்கிற நிகழ்ச்சிக்கு சரி அம்மா அப்பாவ கூட்டி வரணும்" என அன்புக்கட்டளை போட்டார். "நல்ல சாறி யார்கிட்ட சரி வாங்கி அம்மாக்கு குடுத்து கலைவிழாக்கு கூட்டி வரணும். இவங்கதான் கூலி வேலை செஞ்சிம், மீன் புடிச்சும் என்னைய படிப்பிசாங்கண்ணு பெரிசா எல்லார் முன்னாடியும் சொல்லணும்" கண்ணா நினைத்துக்கொண்டான்.

கண்மணி மனதிலே பூத்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. சிங்கராயர் அடைந்த பரவசமே தனி. தன் மகளை கட்டாயம் கண்ணாவிடமே கைப்பிடித்துக் கொடுக்க வேண்டுமென இன்னும் உறுதியாக நினைத்தார். உரிய வயது வர அதை நிறைவேற்றுவது என்றும் அவருக்குள் இன்னுமொரு நினைப்பு. இனி மங்களம் இதற்கு சம்மதிப்பாள் என்றும் நம்புகிறார் சிங்கராயர். கண்ணாவை முகம் மலர்ந்து பாராட்டினார். அவன் தோளிலே தட்டி வாழ்த்துத் தெரிவித்தார். தங்களின் காதல் வெற்றி பற்றி கண்மணிக்கு இன்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை துளிர்த்தது. கண்மணியின் பெறுபேறு அவ்வளவு பெருமைக்குரியதாக இல்லாவிட்டாலும் ஓரளவு சரி தேறித்தான் இருந்தாள்.

"ஏம்ப்பா கண்ணா ஓங்க அப்பா தங்கபுரம் ஆஸ்பத்திரியிலதான் ராவு இருந்தாரு. நாந்தான் நேத்து கூட்டிப் போய் சேர்த்தேன். ஒனக்கு சேதி சொல்லி ராவு ஒரு பையனை அனுப்பியும் வெச்சேன். ஒருக்கா போயி பார்ப்பம்னு இருக்கேன். நீயும் வாறதுன்னா மோட்டார் சைக்கிள்ல போகலாம். நம்ம ஊர்க்காரன்கிட்ட மோட்டார் சைக்கிள் வாங்கியா றேன்" என்றார் சிங்கராயர்.

கண்ணாவும், சிங்கராயரும் போகத் தயாரானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19

தங்கபுரம் வைத்தியசாலையில் இருந்து நகர வைத்தியசாலையை அடைந்திருந்த காளியப்பனுக்கு சிகிச்சைகள் வேகமாக நடக்கின்றன. ஐம்பது ஆயிரம் ரூபாவுக்காக தனது சிறுநீரகத்தை செல்லமுத்து கொடுக்கும் தருணம் வந்து விட்டது. காளியப்பனை தங்கபுரத்திலிருந்து நகர வைத்தியசாலைக்கு ஏற்றிய செலவை ஈடு செய்யவும், அவனின் ஏனைய வைத்திய அலுவல்களை கவனிப்பதற்குமாய் தன் சிறுநீரகத்தை கொடுக்க செல்லமுத்து சம்மதித்திருந்தாள்.

மிச்சமா வாற காசை கண்ணாவுக்கு குடுத்து சைக்கிள் வேங்க சொல்லணும். இவரு குணமாகி போனதும் மொத ஒரு கெணறு வெட்டணும். "கக்கூசு" எத்துன நாளைக்கித்தான் காட்டுக்கே போறது. நமக்குன்னு ஒரு "கக்கூசு" வெட்டிறணும். புள்ளைக்கி இன்னிக்கு மார்க்கு வந்திருக்கும். எப்டியும் அவன் அதை பார்த்திட்டு வருவான். ஏம்புள்ள இரவு சாப்பிட்டானோ. சீனியம்மா சாப்பாடு குடுத்திருக்கும். தனிய படுத்தானோ.. சீனியம்மா வூட்டுல படுத்தானோ..." என அவள் எண்ணிக்கொண்டிருக்கும் போதே அவளுக்கு மயக்க ஊசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றப்படுகிறது. தனது சுய நினைவை அவள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருக்கிறாள். அவள் தனது சிறுநீரகம் ஒன்றினை கணவன் காளியப்பனுக்காக இழக்கும் நேரத்துக்கு வந்துவிட்டாள்.

மயங்கிய பொழுதிலும் அவள் வாய் ஏதேதோ புலம்புகின்றது. மயக்க ஊசி ஏற்றப்பட்டு விட்டால் ஒவ்வொருவரும் தம் எண்ணங்களை புலம்புவார்கள்தானே. "கண்ணா.... கண்ணா சாப்பிட்டியாப்பா ராவு எங்க படுத்த. அம்மா ஒனக்கு ஆஸ்பத்திரியாலை வந்து ஒரு சைக்கிள் வேங்கி தருவேன். இனி நாம கெணறு வெட்டிரலாம். நீ நெனைச்ச நேரம் குளிக்கலாம்ப்பா. ஒனக்கு ஒரு பெரச்சினையும் இல்லை. சுந்தரத்தாரை மட்டும் நம்பாதப்பா. அவரு நல்லவரே இல்லை. அவரு நல்ல மனுசன் மாதிரி இருப்பாரு. ஆனா ரொம்ப மோசமானவரு. சைக்கிள் வேங்கி தந்தா நீ அப்பாக்கு வருத்தம்னா அவர ஆஸ்பத்திரிக்கு ஏத்திப் போகலாமுல்ல..ம்....ம் மீனை அவிச்சு வைச்சிருக்கலாம் தானேப்பா. நா வந்தப்புறம் நாரைக் கொளத்துக்குப் போயி மீன் புடிச்சு வடிவா சமைச்சி தர்றேன். ஏம்ப்பா கோழி அங்க இங்க போச்சா. கீரி புடிச்சுரும். கால்ல கயிர் போட்டு கட்டி விடுப்பா. மரத்தோடையே நிக்கும்" அவளின் புலம்பல்கள் நீள்கின்றன. செல்லமுத்துவின் குருதி வரையறையை மீறி வேகமாக வெளியேறுவது வைத்தியர்களால் உணரப்படுகிறது. இன்னொரு கட்டிலில் அவளின் சிறுநீரகத்தை பொருத்தி உயிர் வாழத் துடிக்கும் ஜீவன் ஒன்று காத்திருக்கிறது.

இன்று காலை பாடசாலைக்கு செல்வதற்கு முன்பு நேரத்திற்கே எழும்பிய கண்ணா, சோறு சமைத்து செல்லமுத்து பிடித்து வைத்திருந்த மீனை கறியும் வைத்திருந்தான். இரவே ஜப்பான் மீனை அவித்து வைத்தபடியால் காலைக் கறிக்கு பதமாக இருந்தது. பாடசாலையிலிருந்து வேகமாக வந்த கண்ணா செல்லமுத்துவிற்கும் காளியப்பனுக்குமாய் சோற்றுப் பார்சல்கள் கட்டி எடுத்துக் கொண்டான். தான் உணவு செய்வதாக சிங்கராயர் கேட்டபோதும் கண்ணா அதற்கு மறுத்து இன்று தன் கையாலே சமைத்த உணவை கொடுக்கவே ஆசைப்பட்டான். சிங்கராயருடன் ஆஸ்பத்திரிக்கு செல்வதற்குத் தயாராகிவிட்டான். காளியப்பனுக்கான உடுப்பு, செல்லமுத்துவுக்கான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பு எல்லாம் கொண்டுபோகிறான்.

"என்னோட மார்க்க பார்த்தா அம்மா எவ்ளோ சந்தோசப்படுவாங்க. அம்மா ஒழச்சிப் படிப்பிச்ச வெளைச்சல் தானே இது. இந்த சந்தோச நாள்ல எங்கையால சமைச்சு அவங்களுக்கு குடுக்கணும். அம்மா காலை தொட்டு கும்பிடணும்..." சிங்கராயருடன் மோட்டார் சைக்கிளில் செல்கையிலே கண்ணாவின் எண்ணங்கள் விரிந்து கொண்டே இருந்தன. இரண்டு சோற்றுப்பார்சல்கள் சொப்பிங் பையில் போடப்பட்டு இருக்கின்றன. இன்னொரு பையிலே கண்ணாவின் சோதனை முடிவு. அது செல்லமுத்துவிடம் காட்டுவதற்காக.

கண்ணாவும் சிங்கராயரும் தங்கபுரம் வைத்தியசாலைக்கு சென்ற போதுதான் காளியப்பன் நகரத்து ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் செல்லப்பட் டமை தெரிந்தது. உடனேயே நகர வைத்தியசாலைக்கு ஓடினார்கள்.

வாயிலில் மோட்டார் சைக்கிள் நிறுத்தப்படுகிறது. அம்மாவிடம் தனது சோதனை முடிவுத் துண்டை காட்டி தனது திறமையை சொல்ல வேண்டும். சோறும் மீனும் குழைத்து தன் கையால் ஊட்ட வேண்டும். கற்பனைகளுடன் வைத்தியசாலை வளாகத்துள் நுழைகிறான் கண்ணா.

பதிவு செய்பவரிடம் விடயத்தை சொன்னார்கள்

"இரவு வந்த பேசன்ட்டா..."

"ஆமா..."

"அந்த.. கிட்னி குடுக்கிறதுன்னு சொன்னவங்களுமா....?"

"இல்லையே. அந்த மயக்கம் போட்டு... பாட்டாளிபுரம். பேரு காளியப்பன்" என்றார் சிங்கராயர்.

பதிவாளர் கேட்டபோது தன் கிட்னியை இழக்க செல்லமுத்து துணிந்தமை கண்ணாவுக்கும் சிங்கராயருக்கும் தெரிந்தது. "அம்மா ஏந்தான் இப்படி எல்லாம் செஞ்சிச்சோ..." மனதுள் கண்ணா அழுது கொண்டான்.

"இப்ப அவங்க எங்க இருக்காங்க புள்ள..." அவசரமாய்க் கேட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கராயர். அவன் பதில் சொன்னான். கண்ணாவின் கையிலே இருந்த சோற்றுப்பார்சல்கள் கீழே விழுந்தன. அவனின் கண்கள் இருளடைந்தன. அவனிடமிருந்து வார்த்தைகள் இல்லை. கண்ணீரும் சிந்தவில்லை. மனது கல்லானால் கண்களும் கல்லாகி விடுமே. எந்தக் கணவரும் எந்தப்பிள்ளையும் வாழ தன்னையே சாகடித்து சாகடித்து செல்லமுத்து உழைத்தாளோ அந்த கணவனை வாழ வைக்க தன் சிறுநீரகத்தை அர்ப்பணித்து பணம் பெறும் முயற்சியின் போது கட்டுப்பாடின்றி குருதி வெளியேறியதால் அவளின் உயிரும் வெளியேறுகிறது.

நேற்றுக்காலை சாப்பிட்ட செல்லமுத்து, நேற்று மதியம், நேற்று இரவு இன்று காலை எதுவுமே சாப்பிட்டிருக்கவில்லை. சத்திர சிகிச்சைக்கு முன்பு வைத்தியர்களிடம் தான் சாப்பிட்டதாக பொய்யும் சொல்லியிருக் கிறாள். அவள் நாரைக்குளத்திற்கு மீன் பிடிப்பதற்கு சென்றபோது அணிந்திருந்த அந்த சிவப்பு நிற பிளவுஸ் ஓரம் கிழிந்த அதே பழைய நாவல்நிற சேலை. அதே அழகிய கறுப்பு வதனம். ஓடி ஓடி இரவு பகலாக உழைத்த அவள் கால்களும் கைகளும் நிரந்தரமாக ஓய்வு கொண்டிருக்கின்றன. ஒரு போர்வையால் அவள் உடல் போர்த்தப்பட்டிருக்கிறது. வாழும் போது மட்டுமல்ல சாகும் போது கூட கண்ணாவுக்கும், கணவனுக்குமாய் அவள் உழைத்து வைத்திருக் கிறாளே. தன் சடலத்தை வீட்டுக்கு எடுத்துச் செல்லக்கூட அவர்களை கையேந்த அவள் விடவில்லையே. அவளின் கிட்னியை தன்னுள் சேர்த்து வாழ மறுபுறம் ஒரு ஜீவன் தயாராகிறது. ஓயாது உழைத்த தன் தேகத்தோடு அன்பையும் அர்ப்பணிப்பையும் சேர்த்தே வளர்த்த ஒரு தாயின் கிட்னியல்லவா அது. இரண்டு ஐம்பது ஆயிரம் ரூபா எனும் தொகையை மரணத்து வேளையிலும் தன் இரண்டு உறவுகளுக் குமாய் கொடுத்துத்தான் இருக்கிறாள் செல்லமுத்து.

"எங்கே வாழ்க்கை தொடங்கும். அது எங்கே எவ்விதம் முடியும். இதுதான் பாதை. இதுதான் பயணம் என்பது யாருக்கும் தெரியாது" என கண்ணதாசன் எழுதினாரே. இப்படித் தொடங்கி, இப்படி நடந்தது. இப்படி ஆக வேண்டும் என்பதுதான் செல்லமுத்துவுக்கு வகுக்கப் பட்டதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் கண்ணாவின் படிப்பிற்காக வயிற்றைக்கட்டி, வாயைக்கட்டி வெயிலில் வேகி மழையில் கரைந்து உழைத்தாளோ, அந்தக் கண்ணாவின் விளைச்சலை காணத்தான் செல்லமுத்துவால் முடியவில்லை. அசைவுகளின்றி கிடக்கும் அவள் பாதத்திலே அந்த பெறுபேற்றுத்துண்டினை வைத்தான் கண்ணா.

“நீங்களா கண்ணா...” தாதி கேட்டாள்.

“ஆமாங்க...” கத்தினான் கண்ணா.

“ஓங்க பேரத்தான் மயக்கத்துலையும் சொல்லிகிட்டே இருந்தாங்க. காசுல சைக்கிள் வாங்க, கக்கூசு கட்ட எல்லாம் பொலம்பினாங்க. இவங்க இத செஞ்சிருக்காட்டி ஓங்க அப்பாவுக்கு உயிர் பொழைக்க சந்தர்ப்பமே இல்ல. என்னப்பா செய்யிறது எதிர்பாக்கல யாரும். அவங்களுக்கு இப்டி ஆயிடிச்சி” தாதியும் விம்மினாள்.

இறந்திருந்தாலும் திறந்திருக்கும் செல்லமுத்துவின் விழிகள் கண்ணாவை ஆசீர்வதிக்கின்றவோ.

பத்து வருடங்கள் ஓடி விட்டன.

சேனைபுரம், பாட்டாளிபுரம், தாமரைக்குளம் மூன்று கிராமங்க ளுக்குமே கண்ணாதான் கிராம சேவையாளராக சேவை புரிகிறான். கண்மணியை அவன் திருமணம் செய்து கொண்டு இரண்டு குழந்தைகள். செல்லமுத்துவின் மரணத்தோடு காளியப்பனும் திருந்தம் கண்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. “செல்லமுத்து படிப்பகம்” எனும் பெயர் தாங்கி ஒரு நூலகமும் பாட்டாளிபுரம் கிராமத்தை வெளிச்சமாக்குகிறது. அதை கண்ணாதான் முன்னின்று நடத்துகிறான். “செல்லமுத்து கல்வித்திட்டம்” எனும் பெயரில் வருடாந்தம் ஐந்து பேர்களுக்கு படிப்பதற்கு நிதியுதவி கொடுக்கிறான் கண்ணா.

இன்று சிங்கராயரும் மங்களமும் சேனைபுரத்திலிருந்து பாட்டாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரம் வந்திருந்தார்கள். இன்று செல்லமுத்துவின் பத்தாம் ஆண்டு நினைவு தினம். இன்று ஏழைகளுக்கு அன்னதானமும் கண்ணா கொடுப்பான். செல்லமுத்துவின் அதே காணி வீடு அபிவிருத்தி அடைந்து "செல்லமுத்து இல்லம்" என பெயரும் பெற்றிருக்கிறது. செல்லமுத்துவின் பழைய உடைகளை பொக்கிசமாக வைத்திருக்கி றான் கண்ணா.

கண்மணியின் ஆறு வயதுப்பிள்ளை செல்வி கேட்டாள். "அப்பா ஏம்ப்பா" எங்கள கோயில்ல கும்பிட விட்டிட்டு நீங்க கும்பிடாம ஒரு ஓரமா நின்னுக்கிட்டு இருந்தீங்க..." என்று. "கடவுள் அன்பா இருக்காரு. அன்புள்ளவங்ககிட்ட கடவுள் இருக்காரும்மா." என சொல்லியபடி நடந்தான் கண்ணா.

இன்று காளியப்பனை தன் வீட்டுக்கு கூட்டிச்சென்ற மாரிமுத்து அவனுக்கு மறுதிருமணம் ஒன்றிற்காக பேசி இருந்தான். "செல்லமுத்து குடுத்த உசிரு எனக்குள்ளுக்கே இருக்குடா? நா எப்டி இன்னொரு கலியாணம். சும்மா போ மாரிமுத்து" என்றான் களியப்பன்.

"சரி. நா பேசல. செல்லமுத்து நெனைப்போட பேரக்கொழந்தைகளோட இரு. இந்தா இன்னிக்காச்சும் கொஞ்சமா குடி. ஒரு கொஞ்சம். நல்ல கோழி கறியும் இருக்கு"

"மாரி, இது செல்லமுத்து அவளோட உசிர குடுத்து தந்த உசிர்டா. அவ ரத்தம்தான் ஓடுது. அவ குடிக்கமாட்டாடா. நானும் விட்டுட்டேன்டா. நா குடிச்சா அவ ரத்தத்துக்கும் கூடாதுல்ல" கண்கள் கலங்க சொன்னான் காளியப்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

**கலாபூஷணம் நடராசா இராமநாதன்,**
உடையார்கட்டு,
முல்லைத்தீவு.

## ஒப்புநோக்குநரின் உள்ளத்திலிருந்து..

“செல்லமுத்து” என்ற நாவலை ஒப்புநோக்குதலினூடாக அருமையான ஒரு நாவலை வாசிக்கும் சந்தர்ப்பமும் எனக்கு ஏற்பட்டது. நாவலின் பெயரைப் பார்த்ததும் இந்த நாவல் எப்படி அமையப் போகிறது எனும் கேள்வி என்னுள் எழுந்தது. இந்தக் கேள்வியை முன்னிருத்தியே வாசிப்பைத் தொடர்ந்தேன்.

“செல்லமுத்து” என்ற பெண் பாத்திரத்தைச் சுற்றியே ஏனைய பாத்திரங்கள் நகர்கின்றன. இந்த நாவலை எழுதத் தொடங்குமுன் எழுத்தாளர் “செல்லமுத்து” என்ற பாத்திரம் இப்படித்தான் அமைய வேண்டும் என எதிர்பார்த்தாரா? அன்றேல் கதை நகர்ந்து செல்கையில் ஏற்பட்ட சம்பவங்களினூடே அந்தப் பாத்திரமே இவ்வாறு சிறப்பாய் அமைந்ததா? அவ்வளவு சிறப்பாய் அந்தப் பாத்திரங்களும், சம்பவங்களும் நெஞ்சைத் தொட்டுச் செல்கின்றன.

நாயகி வித்துவமும், வில்லனின் கொடூரமும் வாசகனின் மனதில் நிலைபெற வேண்டும் என்பதற்காக புதிய புதிய பாத்திரங்களை அறிமுகம் செய்து நாவலில் உலவவிடும் சாமர்த்தியம் மூலம் முற்றிலும் யதார்த்தமான முறையில் “செல்லமுத்து” நாவல் அமைந்திருப்பதற்குச் சான்றெனலாம்.

முற்றிலும் வித்தியாசமான ஒரு கதைத்தேர்விற்காக எழுத்தாளருக்கு முதலில் சபாஷ் போடலாம். நான்கு கிராமங்கள். இவைகளில் தொண்ணூறு வீதமான மக்கள் வறுமையில் வாடும் நிலை. குடியிருப்புகள் ஏற்ற வகையில் இல்லை வேலிகளுக்கு அடைப்பு இல்லை வாழ்வாதார நிலையோ மிக மோசமான நிலை கல்வி, பொருளாதாரம், சுகாதார வசதிகள் அறவே இல்லாத நிலை இத்தனைக்கும் மேலாக மது என்ற அரக்கனால் ஏற்படும் கொடுமை இத்தனையையும் மிக அழகாக, சிறப்பாக காட்டியிருக்கிறார் எழுத்தாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA JPL
JPL

நாவலின் ஆரம்பத்தில் செல்லமுத்து குடியிருக்கும் வீட்டை வாசகர்களுக்கு படம் பிடித்துக் காட்டியிருக்கும் விதமானது இந்நாவலோடு உடனேயே அன்றிவிடச் செய்கிறது. கண்களை வேறு இடத்துக்கு நகர்த்தாமல், விரல்கள் நூலின் பக்கங்களை புரட்ட வைக்கின்றன.

சுந்தரத்தார் வீட்டில் கூலி வேலை செய்யும் செல்லமுத்து அன்றைய சம்பள பணத்தைக் கொண்டுவரவில்லை. சுந்தரத்தார் ஏதோ ஒரு காரணத்தால் அன்றைய சம்பள பணத்தைக் கொடுக்கவில்லை. மறுநாள் தருவதாக கூறியிருந்தார். இந்தப் பணத்தை நம்பி செல்லமுத்துவின் கணவன் கள்ளுக் கடையில் தனது நண்பனிடம் கடனாக காசு வாங்கி கள் அருந்திவிட்டு, அவரையும் அழைத்துக் கொண்டு வீடு வருகிறார் செல்லமுத்துவிடம் பணம் வாங்கிக் கொடுக்க. அன்றைய சம்பள பணம்தான் செல்லமுத்துவுக்கு கிடைக்கவில்லையே. அதனால் செல்லமுத்து கைகளை பிசைந்து நிற்க... கள்ளுக் குடிப்பதற்கு வாங்க கடன் கொடுத்த நண்பரோ செல்லமுத்துவின் கணவனை ஏச, 'நான் நாணயக்காரன் தான்' என்பதாய் செல்லமுத்துவின் கணவன் மரத்தில் தூங்கிக் கொண்டிருந்த சேவலைப் பிடித்துக் கொடுக்க, கலங்கி நின்ற செல்லமுத்து அந்த இரவிலேயே அக்கம்பக்கத்து வீடுகளில் கடன்பட்டு சேவலை மீட்டு வர.....

இந்தச் சம்பவம்போன்று பல சம்பவங்கள்.

இன்று வேலை இல்லையென வயலுக்குள் நெல்லுப் பொறுக்க பெண்கள் குழுவாக போவது, அங்கே நெல்லுகளை பொறுக்கிச் சேர்ப்பது, அவ்வேளையிலான அவர்களது நினைவுகள், எண்ணங்கள், கொண்டுவந்த மதிய உணவை பகிர்ந்து உண்ணுவது, கொண்டுவந்த நெல்லைக் குற்றி அரிசியாக்கி 'வயிறாரக்' கஞ்சி குடிக்கும் கனவு... இப்படிப் கிராமத்து நினைவுகள் பல.

வெறும் பூசணிக்காயை மட்டுமே அவித்து மூன்று வேளையும் சாப்பிடும் குடும்பத்தின் நிலை.... சவர அலகு (பிளேட்) அளவுள்ள சவர்க்காரம், வாழையிலையில் சுற்றப்பட்டிருக்கிறது... என்ற வரிகளூடே குடும்ப ஏழ்மைநிலை தெரியவருகிறது.

நூலாசிரியரின் கருத்துகள் மிகச்சிறப்பாக அமைந்துள்ளன. மொத்தத்தில் தொடக்கம் முதல் முடிவு வரை மிக விறுவிறுப்பான நாவல். காட்டில் வெளியீடு, கடலில் வெளியீடு, "1000 கவிஞர்கள் பெருந்தொகுப்பு" என புரட்சிகளைச் செய்துவரும் யோ.புரட்சி அவர்களின் இன்னொரு புரட்சியாக இந்த நாவல் அமைந்துள்ளது என்றால் மிகையில்லை. வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13028 CC

274158

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழ மண்ணின்
## இளைய நம்பிக்கை



இலக்கிய உலகில் இயங்கிக்கொண்டே இருப்பதில் புரட்சிக்கு நிகர் புரட்சிதான். ஈழமெங்கும் அலைந்து திரிந்து தேடலை நிகழ்த்தும் புரட்சியின் விழிகளில் ஒரு வித்தியாச வெளிச்சம் தென்படுகிறது. குருதியில் நனைந்தெழும் போர் எழுத்துக்கள் மட்டுமே புறப்பட்டுவந்த பூமியிலிருந்து அந்த நெடியே கிஞ்சிற்றுமில்லாத ஒரு கிராமிய வாழ்வியலை நிலைநிறுத்துகிறது "செல்லமுத்து" நாவல். வன்னிக் காடுகளில் புறநானூறுகள் மட்டுமல்ல, அழகிய அகநானூறுகளும் பூக்கின்றன எனும் புதிய உண்மையைப் புரட்சி விரல்களின் வழி புரிந்துகொள்ள முடிகிறது.

மலையகப் படைப்புகளில் மட்டும் அதிகமாய் தரிசித்து வந்த அடிநிலை மக்களின் கண்ணீர்க் கதைகளை ஈழப்போர் முடிந்த பகுதியிலும் அதிகம் நாம் கேட்காத ஒரு புதிய மொழியில் கேட்க வைத்திருக்கிறார் யோ.புரட்சி. தகவல் தொடர்பு வசதி முற்றிலும் முகவரியற்றுக் கிடக்கும் அந்தக் கிராமத்து அவலங்களை, அக்கால அரும்பெரும் வாழ்வை தன் எழுதுகோலில் வழியவிடுவதில் நூறு வீதம் வெற்றி கண்டு ஈழத்தின் இளைய நம்பிக்கையாய் காட்சி தருகிறார் புரட்சி.

வெடிகுண்டுகளின் சத்தமில்லாத, பதுங்குகுழிகளுக்கு அப்பாலிருந்து ஒரு வாழ்க்கையைக் கண்டெடுத்து கட்டமைத்திருப்பது ஈழப்படைப்பு வெளியில் ஒரு புதுமை.

புரட்சியின் எழுத்தியக்கம் நிலைத்துச் செழிக்க வாழ்த்துகளை அள்ளித்தந்து மகிழ்கிறேன்.

**பேராசிரியர் முனைவர் சா.உதயசூரியன்**
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர், தமிழ்நாடு,
இந்தியா.

9789554096257

VIJAY PRINTING PRESS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org